பக்கங்கள் : 16+கல்விச்சுடர்

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 பங்குனி 27 திங்கட்கிழமை (10.04.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :134

### கிழக்கிலிருந்து தளபதிகள் வன்னிக்கு

# கடற்படையினரின் கப்பலில் பயணிக்கும் அரசு யோசனையை புலிகள் நிராகரிப்பு!

## நிலைமை மோசமாகுமென தமிழ்ச்செல்வன் கண்காணிப்புக் குழுவுக்கு நேற்றுக் கடிதம்

கிளிநொச்சி,ஏப்ரல் 10

**கிழக்கிலிருந்து விடுதலைப் புலிகளின் தளபதிகளும், போராளிகளும் வன்னி வந்து செல்வதற்கு கடற்படையினர் வழங்கும் கடற் கலத்தைப் பயன்படுத்தும் அரசின் யோசனையை விடுதலைப் புலிகள் நிராகரித்துள்ளனர். இது குறித்து கண்காணிப்புக் குழுவின் தலைவருக்கு விடுதலைப் புலிகளின் அரசியற் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் கடிதமொன்றை அனுப்பியுள்ளார்.**

சுவிற்ஸர்லாந்தில் அரசுத் தரப்புடன் நடத்தவுள்ள அடுத்த சுற்றுப் பேச்சுக்கு முன்பாக தமது களத் தளபதிகள் பங்குபற்றும் மத்திய குழுக் கூட்டத்தை வன்னியில் நடத்த விடுதலைப் புலிகளின் தலைமை தீர்மானித்திருந்தது. இதற்காக கிழக்கிலுள்ள தளபதிகள் வன்னிவர கடல் வழிப் பயணத்துக்கு ஏற்பாடு செய்யப்பட வேண்டும் என்று விடுதலைப் புலிகள் நோர்வே ஊடாக கோரியிருந்தனர்.

இதற்கு அரசின் சமாதானச் செயலகம் யோசனை ஒன்றை முன்வைத்தது.

விடுதலைப் புலிகளின் கடற் பயணத்துக்கு இலங்கைக் கடற்படை பயணிகள் படகு ஒன்றை வழங்குமென்றும் -

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பிரதிநிதிகளும் பயணிக்கும் அப் படகுக்கு கடற்படையினர் தகுந்த பாதுகாப்பை வழங்கு

(16 ஆம் பக்கம் பார்க்க)

## முல்லைக் கடலில் கடற்படை கெடுபிடி

முல்லைத்தீவு,ஏப்.10

இலங்கைக் கடற்படையினர் முல்லைத் தீவுக் கடற்பரப்பில் மீனவர்கள் மீது தொடர்ந்தும் கெடுபிடிகளை மேற்கொண்டு வருகின்றனர் என முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் முறையிட்டுள்ளது.

மேற்படி சமாசம் வவுனியா, முல்லைத் தீவு மாவட்டங்களுக்குப் பொறுப்பான போர்

(16 ஆம் பக்கம் பார்க்க)

### கல்விச்சுடரில்

**இன்று: வணிகக்கல்வி வெளியீடு 2 வினாத்தாள், வெளியீடு 1 விடைக்குறிப்புகள்.**

**நாளை: புவியியல் வினாத்தாள், தமிழ் வெளியீடு 2 விடைக்குறிப்புகள் என்பன வெளிவரும்.**

வவுனியா நகரசபை மண்டபத்தில்...



## வவுனியாவில் மக்கள் திரண்டு வந்து மாமனிதர் பூதவுடலுக்கு அஞ்சலி

வவுனியா,ஏப்.10

மாமனிதர் வ.விக்னேஸ்வரனின் பூதவுடல் வவுனியாவுக்கு நேற்றிரவு 7 மணியளவில் எடுத்துவரப்பட்டது. வவுனியா நகர சபை மண்டபத்தில் வைக்கப்பட்ட அன்னாரின் பூதவுடலுக்கு பொதுமக்கள் திரண்டு வந்து அஞ்சலி செலுத்தினர். வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிவசக்தி ஆனந்தன், சிவநாதன் கிஷோர், வினோ நோகராதலிங்கம் ஆகியோர் உட்படப் பலரும் அஞ்சலி நிகழ்வில் கலந்துகொண்டனர்.

முன்னதாக விடுதலைப் புலிகளின் நிர்வாகப் பகுதியில் உள்ள சம்பூருக்கு நேற்று முற்பகல் பூதவுடல் கொண்டுசெல்லப்பட்டது. சேனையூர் நாவலடிச் சந்தியில் இருந்து மத்திய கல்லூரிக்கு தமிழீழ இராணுவ மரியாதையுடன் மாமனிதரின் பூதவுடல் எடுத்து வரப்பட்டது. மத்திய கல்லூரியில் அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது.

அங்கு திருமலைக் கட்டளைத் தளபதி கேணல் சொர்ணம் தமிழீழத் தேசியக் கொடியை அன்னாருக்குப் போர்த்திக் கௌரவித்தார்.

அதன் பின்னர் பூதவுடல் வவுனியா நோக்கி எடுத்துவரப்பட்டது. இன்று பூதவுடல் கிளிநொச்சிக்கு எடுத்துவரப்பட்டு அஞ்சலிசெலுத்தப்படவுள்ளது. (ஒ-7-164)(30)

## அனைத்துக் கட்சி கூட்டம் இன்று

கொழும்பு, ஏப். 10

அமைதி முயற்சிகள் தொடர்பான அனைத்துக் கட்சித் தலைவர்களின் கூட்டம் இன்று மாலை ஜனாதிபதிச் செயலகத்தில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில் நடைபெறவிருக்கிறது.

ஜெனீவாவில் நடைபெறவுள்ள அடுத்த கட்ட அமைதிப் பேச்சுகளுக்கு முன்னோடியாக இன்றைய இந்தக் கூட்டம் நடைபெறவுள்ளது. அடுத்தகட்ட பேச்சுகள் குறித்து இன்றைய தினம் அனைத்துக் கட்சிகளின் தலைவர்களுக்கும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விளக்கமளிப்பார்.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## கொள்ளைகளில் ஈடுபடும் புல்லுருவிகள் குறித்த தகவல்களை அறியத் தாருங்கள்

### பொதுமக்களிடம் இளம்பரிதி வேண்டுகோள்

கிளிநொச்சி,ஏப்.10

புல்லுருவிகளின் கொள்ளைச் செயற்பாடுகளை ஒருபோதும் அனுமதிக்கப் போவதில்லை. இத்தகையவர்கள் பற்றிய தகவல்களை அறியத்தாருங்கள்.

இவ்வாறு விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியற்துறைப். பொறுப்பாளர் சி.இளம்பரிதி பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சமீபகாலமாக குடாநாட்டில் கொள்ளைச் சம்பவங்கள் அதிகரித்துள்ளன. இது தொடர்பாக யாழ்.மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் இந்த வேண்டுகோள் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்தச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ்.குடாநாட்டு மக்களை உலுப்பி நிம்மதி அற்ற ஒரு வாழ்வை மேற்கொள்ளும் அளவிற்கு அண்மைக் காலத்தில் இடம்பெற்று வரும் திருட்டு மற்றும் கொள்ளைச் சம்பவங்கள் காணப்படுகின்றன.

எதிரிகளின் கொலைப் பயமுறுத்தல்

(16 ஆம் பக்கம் பார்க்க)

## அரசும் ஐ.தே.கவும் பொது வேலைத் திட்டத்தை முன்வைத்தால் இந்தியா அனுசரணை வழங்குமாம்

கொழும்பு,ஏப்.10

"புரையோடிப் போயிருக்கும் இலங்கையின் இனப்பிரச்சினைக்குரிய தீர்வை ஆளும் கட்சியும், எதிர்க்கட்சியான ஐ.தே.கவும் இணைந்து பொதுவேலைத்திட்டம் ஒன்றை முன்வைப்பதன் மூலம் தீர்வுகாண முன்வர வேண்டும்." - என்று இந்தியப் பிரதமர். மன்மோகன் சிங் இலங்கையின் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரம சிங்கவிடம் நேரில் தெரிவித்திருக்கிறார் என விடயமறிந்த வட்டாரங்கள் மூலம் தெரியவருகிறது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும், ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் கேட்டுக்கொண்டால் இந்த பொதுவேலைத் திட்டத்துக்கான அனுசரணையை வழங்குவதற்கு இந்தியா தயாராக இருப்பதாகவும் பிரதமர் மன்மோகன் சிங் கூறினார் எனவும் அறியப்படுகிறது.

கடந்த வாரம், உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு புதுடில்லி சென்றிருந்த ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க, இந்தியப் பிரதமர் உட்பட பல்வேறு இந்திய அரசியல் கட்சித் தலைவர்களையும் சந்தித்துப்பேசியிருந்தார்.

இந்தியப் பிரதமருடனான சந்திப்பின் போதே இலங்கையின் சமாதான முன்னெடுப்புகள் குறித்து விரிவாக இருவரும் பேசியுள்ளனர்.

அப்பொழுதே, ஆளும் கட்சியான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பும் எதிர்க் கட்சியான ஐ.தே.கவும் இணைந்து இனப் பிரச்சினைத் தீர்வுக்கான பொதுவேலைத்

(16 ஆம் பக்கம் பார்க்க)

## தயா சந்தகிரிக்கு தூதுவர் பதவி!

கொழும்பு, ஏப். 10

கூட்டுப்படைகளின் தளபதி தயா சந்தகிரி பாகிஸ்தானுக்கான இலங்கைத் தூதுவராக நியமிக்கப்படுவார் எனத் தெரியவருகிறது.

தற்போது பாகிஸ்தானில் சேவைக்கால நீடிப்புப்பெற்று தூதுவராக பணியாற்றிவரும் லெப்டினன்ட் ஜெனரல் ஸ்ரீலால் வீரசூரியவை அந்த இடத்திலிருந்து நீக்கிவிட்டு தயா சந்தகிரியை அவ்விடத்துக்கு நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

தயா சந்தகிரி கடற்படைத் த[illegible]தியாக பதவிவகித்த 2001- 2005 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இடம்பெற்ற கடற்படைத்

(16 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மஹிந்தவின் 'ஒட்டுக்குழு அரசியல்' போரை நோக்கியே தடம்பதிக்கிறது

## விடுதலைப் புலிகள் ஏடு தெரிவிப்பு

கிளிநொச்சி,ஏப்.10

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஒட்டுக்குழு அரசியல், நாட்டை பெரும் இரத்தக் களரிமிக்க போரை நோக்கியே' தடம் பதிக்கின்றதென்பதை சர்வதேச சமூகம் உணர வேண்டுமென 'விடுதலைப் புலிகள் ஏடு' தெரிவித்திருக்கின்றது.

மஹிந்த அரசு நடத்தும் 'ஒட்டுக்குழு அரசியல்' எனும் தலைப்பில் பங்குனி மாதத்திற்கான விடுதலைப் புலிகள் ஏட்டில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

உடன்பாட்டின்படி ஒட்டுக்குழுக்களின் ஆயுதக்களைவுக்கு மஹிந்த அரசு விடாப்பிடியாக மறுத்துவருவதால் ஜெனீவாப் பேச்சுகள் தேக்க நிலையை அடைந்துள்ளன.

முதற்கட்ட ஜெனிவாப் பேச்சின் பின்னர் ஒட்டுக்குழுக்களுடன் சிங்கள இராணுவமும் இணைந்து, வெளிப்படையாகத் தோன்றி கொலைத் தாக்குதல்கள் புரிவதையும் - ஆயுதமுனையில் மக்களை மிரட்டுவதையும் சர்வதேச சமூகம் அவதானித்தபடிதான் உள்ளது.

ஒட்டுக்குழுக்களின் ஆயுதக்களைவு தொடர்பாக நோர்வே அரசும் - கண்காணிப்புக் குழுவும்; மஹிந்த அரசை எவ்வளவோ வலியுறுத்தியும்கூட இதுவரை எந்தப்பயனும் ஏற்படவில்லை. அந்தளவுக்கு ஒட்டுக்குழு விடயத்தில் மஹிந்த அரசு கடும்போக்கு நிலைப்பாட்டுடன் உள்ளது.

சிங்கள அரசைப் பொறுத்தவரையில் தனது முப்படைகளையும் பயன்படுத்தி போர்மூலம் புலிகள் இயக்கத்தைத் தோற்கடிக்க முடியும் என்ற இராணுவ நம்பிக்கையை அது இழந்துவிட்டது.

அதனாலேயே, ஒட்டுக்குழுக்களைப் பயன்படுத்தி சதி அரசியலை மேற்கொண்டு தமிழரின் விடுதலைப் போராட்டத்தைக் கொச்சைப்படுத்த முடியும் என்று சிங்கள அரசு நம்புகிறது.

'புலிகள் இயக்கம் பிளவுபட்டுள்ளது' - 'தமிழ் மக்கள் பிரிந்து நிற்கின்றனர்' என்றொரு மாயையை உலகநாடுகளுக்கு ஏற்படுத்த இந்த ஒட்டுக்குழுக்களை, மஹிந்த அரசு பயபன்படுத்த விரும்புகிறது.

அதேசமயம், இந்த ஒட்டுக்குழுக்களை அரசியல் கட்சிகளாகப் பதியவைத்து, அவற்றைப் புலிகள் இயக்கத்திற்கு எதிரான தமிழ்க் கட்சிகள் என்று உலகிற்குக் காட்டவும் சிங்கள அரசு விரும்புகிறது.

இதன்மூலம், புலிகளுடன் மட்டுமல்ல, இந்த ஒட்டுக்குழுக் கட்சிகளுடனும் பேசித்தான் தமிழரின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண முயலவேண்டும் என்றொரு கருத்தை முன்வைத்து சர்வதேச சமூகத்தைக் குழப்பியடிக்கலாம் என்றும் சிங்கள அரசு நம்புகிறது.

சிங்கள அரசின் இந்த ஆசைகளும் - நம்பிக்கைகளும் வெறும் கற்பனைகள் என்பது சர்வதேச சமூகத்திற்குத் தெரியும்.

இந்த ஒட்டுக்குழுக்களின் மக்கள் விரோதச் செயற்பாடுகளையும் - சமாதான விரோத நடவடிக்கைகளையும் சர்வதேசம் நன்றாகவே அறிந்துவைத்துள்ளது.

போரைநிறுத்தி பேச்சுமூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண உலகநாடுகள் முற்படும் இந்தவேளையில், ஒட்டுக்குழு அரசியல் மூலம் இலங்கைத் தீவில் இரத்த ஆறு ஓட, மஹிந்த அரசு வழிவகைகளைச் செய்கின்றது என்ற குற்றச்சாட்டே உலக ஊடகங்களில் மேலோங்கியுள்ளது.

'ஜிகாத்' என்ற பெயரில் ஒட்டுக்குழுவொன்று இராணுவத்தின் துணையுடன் செயற்படுவதாகப் புலிகள் இயக்கம் நிரூபித்திருந்தது.

இதையிட்டு சர்வதேச சமூகம் அதிகளவு அக்கறைப்பட்டபோது முஸ்லிம் படையணி என்ற பெயரில் அந்த ஒட்டுக்குழுவை உள்வாங்கி அதற்கு சட்டரீதியான மதிப்பையும் மஹிந்த அரசு கொடுத்துள்ளது.

இந்த ஒட்டுக்குழுக்களை வைத்துக் கொண்டு மஹிந்த அரசால் புலிகளுடன் போரும் செய்யமுடியாது, சமாதானமும் செய்யமுடியாது என்பதை அது புரிந்துகொள்ள வேண்டும்.

அதற்குப் பதிலாக இந்த ஒட்டுக்குழுக்களை ஏவிவிட்டு தமிழர்தாயகத்தில் கொலைகளையும் - வன்முறைகளையுமே மஹிந்த அரசால் செய்யமுடியும்.

அரசபடைகளால் அல்லது அரச படைகளின் ஆதரவுடன் இயங்கும் ஒட்டுக்குழுக்களால் தமிழ் மக்கள் துன்புறுத்தப்படும் போது அதை வெறுமனே பார்த்துக்கொண்டு புலிகள் இயககமும் இருக்கமாட்டாது.

மொத்தத்தில் மஹிந்தவின் ஒட்டுக்குழு அரசியல் பெரும் இரத்தக்களறிமிக்க போரை நோக்கியே நாட்டை இட்டுச்செல்கிறது என்பதை சர்வதேச சமூகம் உணரவேண்டும்.

ஒட்டுக்குழுக்களின் ஆயுதக்களைவு தொடர்பாக மஹிந்த அரசிடம் வேண்டுகோள் விடுப்பதற்குப் பதிலாக உலக நாடுகள் சிங்கள அரசின் மீது நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என்பதே தமிழ் மக்களின் விருப்பமாகும்.

அதுதான் சமாதானத்திற்கும் உறுதியைக் கொடுக்கும்

- இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

### காரைநகரில் தேடுதல்

காரைநகர் உள்ளிட்ட பிரதேசங்களில் கடற்படையினர் நேற்று நண்பகல் 12 மணி முதல் பிற்பகல் 2 மணிவரை தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டனர் என்று கூறப்படுகிறது.

ஆயுதக் குழுவினர் இப் பகுதிகளில் இருப்பதாகக் கிடைத்த தகவல்களையடுத்தே தேடுதல் மேற்கொள்ளப்பட்டதாகப் படைத் தரப்புத் தகவல்கள் தெரிவித்தன.

இத் தேடுதலில் எவரும் கைதுசெய்யப்படவில்லை.

## யாழ்.இந்து மாணவர்கள் அமைத்த நுழைவாயில் வளைவு நாளை திறப்பு



யாழ்ப்பாணம்,ஏப்.10

யாழ்.இந்துக் கல்லூரியில் 91 ஆம் ஆண்டு உயர்தரத்தில் கல்வி பயின்ற மாணவர்களால் கல்லூரியின் குமாரசாமி மண்டபத்தின் நுழைவாயிலில் அமைக்கப்பட்டுள்ள வளைவு திறப்புவிழா நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

கல்லூரி அதிபர் வீ.கணேசராசா தலைமையில் இடம்பெறும் இந் நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கல்லூரியின் முன்னாள் அதிபர் அ.பஞ்சலிங்கம் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக பழைய மாணவனான செஞ்சொற் செல்வர் ஆறு. திருமுருகன், பழைய மாணவர் சங்கத் தலைவர் க.பரமேஸ்வரன், முன்னாள் அதிபர் சுடர் மகேந்திரன் ஆகியோர் கலந்துகொள்வர். (3) (25)

## திருநெல்வேலியில் கைதானோருக்கு ஏப். 18 இல் அடையாள அணிவகுப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.10

திருநெல்வேலி மணற்தறை லேன் பகுதியில் வைத்து கொள்ளையர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டிருந்த இருவரையும் எதிர்வரும் 18ஆம் திகதி அடையாள அணி வகுப்பில் நிறுத்துமாறு யாழ்.மேலதிக நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் உத்தரவிட்டுள்ளார்.

அந்தப் பகுதியில் திருட்டு முயற்சியில் ஈடுபட்டார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் பொது மக்களால் பிடிக்கப்பட்டு பொலீஸாரிடம் இருவர் ஒப்படைக்கப்பட்டிருந்தனர்.

இவர்கள் இருவரையும் எதிர்வரும் 18ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்கும்படியும் -

அன்றையதினம் இருவரையும் அடையாள அணிவகுப்பில் நிறுத்தும்படியும் - நீதிவான் உத்தரவிட்டுள்ளார். (ஒ-3)(25)

## குமுதினிப் படகு நடுக்கடலில் பழுது

நல்லூர்,ஏப்.10

நெடுந்தீவு - குறிகாட்டுவான் இடையே சேவையில் ஈடுபடும் குமுதினிப் படகு நடுக்கடலில் பழுதடைந்ததால் பயணிகள் பெரும் பீதியடைந்தனர்.

இச் சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்கு இடம்பெற்றது.

படகின் 'ரேடியேற்றர்' குழாய் பழுதடைந்ததால் நடுக் கடலில் படகு தத்தளித்தது. படகு ஊழியர்களின் கடும் முயற்சியின் பின்னர் பழுது தற்காலிகமாக சரிசெய்யப்பட்டு மீண்டும் குறிகாட்டுவானுக்குக் கொண்டுசெல்லப்பட்டது. அங்கு கருவி பழுது பார்க்கப்பட்டதும் நெடுந்தீவுக்குச் சென்றது. அரச படகான குமுதினி அடிக்கடி பழுதடைவதாகவும் -

இது தொடர்பாகச் சம்பந்தப்பட்டவர்கள் அக்கறை எடுத்துச் செயற்பட வேண்டும் எனவும் பயணிகள் கோருகின்றனர். (ஒ-111-202)(25)






## நோர்வே குழுவினர் வைத்திருந்த துப்பாக்கியால் பயணம் தாமதம்

கொழும்பு,ஏப்.10

கடந்த வாரம் இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டிருந்த நோர்வே அனுசரணைக் குழுவினர் இங்கிருந்து இந்தியா புறப்பட்டபோது தம்மோடு வைத்திருந்த துப்பாக்கி தொடர்பாக அவர்களிடம் விமான நிலையத்தில் விசாரணை நடத்தப்பட்டது.

இவ்வாறு கொழும்பு ஊடகச் செய்தி ஒன்று தெரிவித்தது.

நோர்வேயின் சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் எரிக் சொல்ஹெய்ம், அமைதி முயற்சிக்கான விசேட தூதர் ஹான்ஸன் போவர் ஆகியோர் அடங்கிய நோர்வேக் குழுவினர் கடந்த வெள்ளிக்கிழமை இரவு கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து இந்தியாவுக்குப் புறப்பட்டனர்.

அவர்களை கொழும்பு விமான நிலைய அதிகாரிகள் சோதனையிட்டபோது மேலதிகமாக ஒரு துப்பாக்கி அவர்களிடம் இருந்து கண்டு பிடிக்கப்பட்டதாகத் தெரியவந்துள்ளது.

இந்தக் குழுவினர் முதல்நாள் காலை இலங்கை வந்த போது அவர்களிடம் ஒரு துப்பாக்கியே இருந்ததாக விமான நிலையத்தில் பதிவாகியிருந்தது. எனினும் அவர்கள் திரும்பிச் சென்றபோது அவர்களிடம் மேலதிகமாக ஒரு துப்பாக்கி இருந்துள்ளது. அதனையடுத்து சிவில் விமான சேவைகள் அதிகார சபை, சிறிலங்கன் எயார் லைன்ஸ் நிறுவனம் மற்றும் விமான நிலைய பொலீஸார் விசாரணைகள் நடத்திய பிறகே அந்தத் துப்பாக்கியை எடுத்துச் செல்ல அனுமதி வழங்கப்பட்டது.

இதனால், அன்று இரவு 7.25 மணிக்கு இந்தியா நோக்கிப் புறப்படவிருந்த விமானம் 25 நிமிடங்கள் தாமதித்தே புறப்பட்டதாகக் கூறப்படுகிறது.

- இவ்வாறு அந்த ஊடகச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-14)(25)

## வலி.தெற்கில் இன்றும் நாளையும் கலை இலக்கியப் பெருவிழா

யாழ்ப்பாணம்,ஏப்.10

வலிகாமம் தெற்கு பிரதேச செயலக கலாசாரப் பேரவை நடத்தும் கலை இலக்கியப் பெருவிழா இன்றும் நாளையும் பிற்பகல் 2.30 மணிமுதல் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

வலி.தெற்குப் பிரதேச செயலர் சி.திருவாகரன் தலைமையில் இடம்பெறும் இவ்விழாவில் முதல்நாள் நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக வடக்கு - கிழக்கு வீடமைப்பு புனர்நிர்மாணத் திட்டத்தின் திட்டப் பணிப்பாளர் செ.பத்மநாதனும் இரண்டாம் நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ்.அரச அதிபர் கே.கணேஷும் கலந்துகொள்வர்.

இந்த விழாவில் இசையரங்கு, பட்டிமண்டபம், கவியரங்கு, கலைஞர் கௌரவிப்பு ஆகிய நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. (3)(25)

### நிர்வாக சேவை பரீட்சை.வகுப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.10

இலங்கை நிர்வாக சேவைப் பரீட்சைக்கான வகுப்பு நாளை செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இதில் முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் விடய ஆய்வு பற்றி விளக்கவுள்ளார். மேற்படி பரீட்சைக்குத் தோற்றுவோரை இவ் வகுப்பில் கலந்து பயன்பெறுமாறு அரச சேவை பட்டதாரிகள் சங்கத் தலைவர் கு.பற்குணராசா கேட்டுள்ளார். (ஒ-202) (25)

### இந்தியா - இங்கிலாந்து கிரிக்கெட் போட்டி நேற்று ரத்து

இந்தியா-இங்கிலாந்து இடையே நேற்று கவுகாத்தியில் நடக்கவிருந்த 5வது ஒரு நாள் கிரிக்கெட் போட்டி, மழை காரணமாக ரத்து செய்யப்பட்டது. நேற்றுமுன்தினம் பெய்த மழையால் மைதானம் விளையாடுவதற்கு ஏற்றதாக அமையவில்லை. ஹெலிகொப்டர்கள் கொண்டு மைதானத்தின் ஈரப்பதத்தை குறைக்க முயற்சிகள் செய்யப்பட்டன. இருந்தும், ஆடுகளம் சீராகாததால் போட்டி ரத்து செய்யப்பட்டது. இதையடுத்து ரசிகர்கள் கலவரத்தில் ஈடுபட்டனர். போத்தல்களை மைதானத்தில் தூக்கி எறிந்து கலவரத்தில் ஈடுபட்டனர். பின்னர், பாதுகாப்பு படையினர் கண்ணீர் புகை குண்டுகளை எறிந்து ரசிகர்களை கலைத்தனர். (ஒ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

# மஹிந்தரின் இந்த உறுதிமொழியும் ஏமாற்று நாடகத்தின் ஓர் அங்கமா?

அடுத்த சுற்று அமைதிப் பேச்சுகள் திட்டமிட்டபடி அடுத்த வாரத்தில் ஜெனீவாவில் நடைபெறுமா, இல்லையா என்று நிலைமை ஊசலாடிக் கொண்டிருந்த சமயத்தில், தென்னிலங்கை அரசுத் தரப்பின் போக்கில் திடீரென வெளிப்படுத்தப்பட்ட மாற்றம், பேச்சுக்கான வாய்ப்பை ஓரளவு உறுதி செய்திருக்கின்றது.

முன்னைய ஜெனீவாப் பேச்சில் எட்டப்பட்ட இணக்கத்தின்படி, அரச கட்டுப்பாட்டில் உள்ள தமிழர் தாயகப் பகுதியில் தமிழ்த்துணைப்படைகளின் - ஒட்டுப்படைகளின் - கொட்டத்தை ஒட்ட அடக்குவதற்குத் தம்மால் இயன்ற அனைத்து நடவடிக்கைகளையும் தாம் எடுப்பதற்குத் தயார் என்று இலங்கை அரசுத் தலைவர் ஜனாதிபதி மஹிந்தர் ஒருவாறாக - கடைசியாக - உறுதிமொழி அளித்திருக்கின்றார்.

வேறு வழியின்றி - களயதார்த்தத்தின் கட்டாயம் காரணமாக - முதல் சுற்று ஜெனீவாப் பேச்சின் இறுதியில், மேற்படி ஒட்டுப்படைகளின் ஆயுதங்களைக் களைந்து அவற்றின் கொட்டத்தை அடக்கும் நடவடிக்கையை மேற்கொள்வதற்கு இணக்கம் தெரிவிக்க வேண்டியதாயிற்று தென்னிலங்கைச் சிங்கள அரசுக்கு.

ஆனால், இணக்கம் காண்பதும், உடன்பாடு செய்வதும், ஒப்பந்தம் ஒப்பமிடுவதும், பின்னர் ஏமாற்றுவதுமே தமது பரவணிப் போக்கு என்பது போல கடந்த ஐந்து தசாப்த காலமாக இது விடயத்தில் தமிழர்களைத் தொடர்ந்து ஏமாற்றி வந்த சிங்களம், முதல் சுற்று ஜெனீவாப் பேச்சில் எட்டப்பட்ட முடிவுக்கும் மாறாகவே செயற்பட்டது; இதுவரை செயற்படுகின்றது.

அதன் விளைவு விபரீத எல்லையைத் தொட்டதும் இப்போது பழையபடி புதிய உறுதிமொழியோடு அடுத்த சுற்று ஏமாற்று நாடகத்தை ஆரம்பிக்கின்றது. அதன் மூலம் நிலைமையைச் சமாளிக்க முயலுகின்றது.

முதல் சுற்று ஜெனீவாப் பேச்சில் எட்டப்பட்ட முடிவுகளைச் சொல்லிலும் செயலிலும் நடைமுறைப்படுத்தாவிட்டால் அடுத்த சுற்றுப்பேச்சில் புலிகள் பங்குபற்றமாட்டார்கள், மாறாக, போதுமான முடிவுகளைப் புலிகள் எடுக்கும் நிலைமைக்கு வந்துவிட்டார்கள் என்று அறிவிக்கப்பட்டதும் - தெரியப்படுத்தப்பட்டதும் - புதிய வாக்குறுதியோடு - உறுதி மொழியோடு - தோன்றி, நிலைமையைச் சமாளிக்க முயல்கின்றார் மஹிந்தர்.

ஏதோ இதுவரை இராணுவத்தினாலும், அதன் புலனாய்வுப் பிரிவினராலும் இயக்கப்பட்ட ஒட்டுப்படைகளின் கைங்கரியங்கள் தமக்குத் தெரியாமல் - தமதுகையை மீறி - மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் என்பது போலவும், இனிமேல் அப்படி நடக்காமல் தாம் பார்த்துக்கொள்வார் என்பது போலவும் அனுசாரணையாளர்களான நோர்வேக்கும், அதன் மூலம் சர்வதேச சமூகத்துக்கும், புலிகளுக்கும் புதிய படம் போட்டுக் காட்டுகின்றார் அவர்.

ஒட்டுப்படைகளின் கொட்டத்தை அடக்குவதற்குத் தம்மால் இயன்ற அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்பதற்குத் தயார் என்ற ஜனாதிபதியின் உறுதியுரையை இவ்வாறு சிங்களத் தலைமைகளின் வழமையாக ஏமாற்றும் நோக்கிலான உறுதிமொழி பேரலவே கருதவேண்டியிருக்கின்றது.



எண்ணில்லா அதிகாரம் கொண்டவர் இலங்கையின் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி. அவர் இந்த விடயத்தில் 'தம்மால் இயன்ற எல்லாவற்றையும் செய்வார்' என்று வாக்குறுதி அளித்திருக்கிறார்.

அப்படி அவர் கூறும் 'அவரால் இயன்ற எல்லாவற்றினதும்' எல்லை என்ன, அவர் எடுக்கப்போகும் நடவடிக்கைகள் எவையெவை, அவை வழமைபோல, வெறும் சொல்லில் மட்டும் இருப்பதோடு அடங்கிவிடுமா அல்லது செயலிலும் உருப்படியாக ஏதும் நடக்குமா என்பவற்றையெல்லாம் வெளிப்படுத்திக் காட்டுவதற்கு அவருக்கு வழங்கப்பட்டிருக்கும் கால அவகாசம் மிகச் சொற்பமே.

இன்னும் ஒரு வார காலமே இவ்விடயத்தில் தமது நேர்மைத்திறத்தை - இதய சுத்தியை - உண்மைப் போக்கை - வெளிக்காட்டுவதற்கு சிங்களத்தின் ஜனாதிபதிக்கு உள்ளது.

அடுத்த சுற்றுப் பேச்சை தொய்யவிடாமல் தொடர்ந்து, அமைதி முயற்சி என்ற தமது அபத்த நாடகத்தை தடைப்படாமல் நடத்தி, அதன் மூலம் இராணுவத் தயாரிப்புக்குத் தமக்குத் தேவையான கால அவகாசத்தை சம்பாதித்துக்கொள்ளும் நோக்கிலும் இந்த உறுதிமொழி வழங்கும் தந்திரத்தை அவர் அவிழ்த்து விட்டிருக்கலாம்.

எது, எப்படியென்றாலும் சிங்களத்தின் ஏமாற்றுப் போக்கில் நல்ல பட்டறிவுப் பாடத்தை - அனுபவத்தை - தமிழர் தரப்பு கடந்த ஐந்து தசாப்த காலமாகப் பெற்றுள்ள நிலையில், இனிமேலும் இலகுவாக ஏமாறும் போக்கில் அது இல்லை என்பது திண்ணம். ஜனாதிபதி மஹிந்தரின் வாக்குறுதியை நம்பி மோசம் போகாமல், இவ்விடயத்தைக் கையாள்வதற்குரிய திடத்தோடும், தயாரோடும், தந்திரோபாய உத்தியோடும் தமிழர் தலைமை இவ்விவகாரத்தை அணுகவேண்டும்; அணுகும்.(27)

'உதயன்' பத்திரிகையின் ஊடக அனுசரணையுடன் குருதி கொடையாளர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கான செயலமர்வு நேற்றுக் காலை யாழ். பொது நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை. (படங்கள்:ஒளி அதிரன்)

# கடத்தப்பட்ட பணியாளரை விடுவிக்கக் கோரி புதனன்று யாழ்ப்பாணத்தில் அமைதிப் பேரணி

யாழ்ப்பாணம்,ஏப்.10

கடந்த ஜனவரி மாதம் கடத்தப்பட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகத் தொண்டர்களை விடுதலை செய்யுமாறு கோரி நாளைமறுதினம் புதன்கிழமை யாழ்ப்பாணத்தில் மாபெரும் அமைதிப் பேரணி ஒன்று நடத்தப்படவுள்ளது.

யாழ். கோயில் வீதியில் அமைந்துள்ள அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்தில் கடந்த வெள்ளியன்று இடம்பெற்ற அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையப்பிரதிநிதிகள் மற்றும் யாழ். மாவட்ட முன்பள்ளி இணைப்பாளர்களுடனான சந்திப்பின்போது இது தொடர்பான தீர்மானம் எடுக்கப்பட்டது.

எதிர்வரும் புதன்கிழமை காலை 9.30 மணிக்கு நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் முன்பாக இருந்து ஆரம்பமாகும். அமைதிப் பேரணி யாழ். மாவட்ட செயலகத்தைச் சென்றடையும்.

அங்கு யாழ். அரச அதிபருக்கும், அரச அதிபர் ஊடாக ஜனாதிபதிக்கும் மகஜர்கள் கையளிக்கப்படும். அத்துடன், இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகம் ஆகியவற்றிலும் மகஜர்கள் கையளிக்கப்படும்.

இந்த அமைதிப் பேரணியில் யாழ். மாவட்டத்தில் உள்ள முன்பள்ளி ஆசிரியர்கள், மாணவர்களின் பெற்றோர்கள் அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையப் பங்காளி நிறுவனங்களின் பிரதிநிதிகள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொள்வர்.

அமைதிப் பேரணிக்குரிய சகல ஏற்பாடுகளையும் அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம் மேற்கொள்ளவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

பேரணி தொடர்பாக, அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்தில் நடந்த கலந்துரையாடலில் அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத் தலைவர் ஏ.கே. சிவசுப்பிரமணியம், அதன் செயலாளர் ஸ்ரீ சக்திவேல், நாடாளுமன்ற உறுப்பினர் கி.சிவநேசன், தமிழர் புனர்வாழ்வுக் கழக யாழ். மாவட்டப் பணிப்பாளர் எஸ். ஜெயராஜ் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (எ-7)

## உதயவாக்கு

சிரிக்கும் திறமையுடன் படைக்கப்பட்டுள்ள ஒரே மிருகம் மனிதன்தான். அதே வேளை சிரிப்புக்குள்ளாகும் மிருகமும் மனிதன்தான். - *செஸ்டர் பீல்ட்பிரபு.*

## நாளை

பங்குனி 28
செவ்வாய்க்கிழமை
11.04.2006
திதி : திரயோதசி
முன்னிரவு 07.13
நட்சத்திரம் :உத்தரம்
முழுவதும்
சுபநேரம் : 10.36 - 12.06
ராகுகாலம் : 03.06 - 04.36
(யாவும் பழைய நேரப்படி)

# குருதிக் கொடையாளர் எண்ணிக்கையை அதிகரிக்க ஒழுங்கமைப்பாளர்களுக்கு செயலமர்வு

யாழ்ப்பாணம்,ஏப்.10

யாழ். போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கிப் பிரிவின் ஏற்பாட்டில் 'உதயன்' நிறுவனத்தின் அனுசரணையுடன் குருதிக் கொடையாளர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கான ஒழுங்கமைப்பாளர்களுக்கான செயலமர்வு நேற்றுக்காலை யாழ்.பொது நூலகக் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந் நிகழ்வுக்கு யாழ்.போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கிப் பிரிவு பொதுப் பரிசோதகர் ரி.ரவினதாஸ் தலைமை வகித்தார்.

மங்களவிளக்கை பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன், யாழ்.போதனா வைத்தியசாலை குருதியியல் நிபுணர் வைத்திய கலாநிதி து.புஸ்பராஜா, புற்றுநோயியல் நிபுணர் வைத்திய கலாநிதி ந.ஜெயக்குமாரன், இராமநாதன் நுண்கலைக் கல்லூரி மாணவி நிஷாந்தராகினி, ஒழுங்கமைப்பாளர் ரி.சக்திவேல், 'உதயன்' பத்திரிகை நிறுவனம் சார்பாக அதன் விளம்பர முகாமையாளர் ஜி.எஸ்.சுரேஸ் ஆகியோர் ஏற்றினர்.

அதனைத் தொடர்ந்து 'இரத்தமும் குருதி மீள் உருவாக்கமும்' என்ற தலைப்பில் வைத்திய கலாநிதி து.புஸ்பராஜாவும் 'மருத்துவத்தில் இரத்தத்தின் தேவை' என்ற தலைப்பில் வைத்திய கலாநிதி ந.ஜெயக்குமாரனும் -

இரத்த வங்கியின் கடந்த கால, எதிர்கால செயற்பாடுகள் என்ற தலைப்பில் வைத்திய அதிகாரி இ.சிவசங்கரும் உரை நிகழ்த்தினர்.

ஒழுங்கமைப்பாளர்கள் ஒன்றுகூடி குழுக் கலந்துரையாடலில் ஈடுபட்டு குழுத் தீர்மானங்களைச் சமர்ப்பித்தனர்.

இறுதியாக சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நடைபெற்றது. (3-7)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்


### விற்பனைக்கு

இறைச்சிக் கோழி புறோயிலர், கல்பேட் தினமும் சுத்தம்செய்து பெற்றுக்கொள்ள லாம். எலக்றோனிக் நிறுவைப்படி சுத்தம் செய்து பொதிசெய்யப்பட்ட கல்பேட் இறைச்சி 1Kg 200/- வீனஸ் பாம், திருநெல்வேலி சந்தி, நல்லூர் பிரதேச செயலகம் முன்பாக T.P.: 0214590484 (49179)

### காணி விற்பனைக்கு

அச்சுவேலி தெற்கு, பாம்புதூக்கியில் 6 பரப்புக் காணியும் காளிகோயிலடியில் வீடும் விற்பனைக்கு உண்டு.
T.P.: 0773151395, 0773151396 (49147)

நல்ல சூழலில் விவசாயம் செய்யக்கூடியதும் குடியிருக்கக் கூடியதுமான 4 1/2 பரப்புக் காணி திருநெல்வேலி, இராஜ வீதிக்கருகில் விற்பனைக்குண்டு தொடர்பு:
T.P.: 0773114495,0777286175 (49073)

### தவறிவிட்டது

விளைவேலி, நுணாவில் மேற்கு, சாவகச்சேரி என்ற முகவரியை உடைய ஜெகதீஸ்வரக் குருக்கள் மயூரன் என்பவருடைய தே.அ. அட்டை 850721742V மற்றும் சிறுதொகைப் பணம் அடங்கிய பேர்ஸ் சாவகச்சேரி பிரதேச செயலகத்திற்கும் நுணாவிலுக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்குறிப்பிட்ட முகவரியில் ஒப்படைத்துதவவும். (49195)

யாழ். போதனாவைத்தியசாலைப் பகுதியில் மணிப்பேர்ஸ், சிறுதொகைப் பணம் மற்றும் டயறி, மோட்டார் சைக்கிள் திறப்பு, 3 பவுண் பெறுமதியான நகை அடங்கிய கைப்பை கடந்த 07.04.2006 நண்பகல் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ் வரும் முகவரியில் ஒப்படைத்துதவவும். மகாலிங்கம் யோகேஸ்வரி அல்லது சி.க.பாலசுப்பிரமணியம், காளிகோயிலடி, வட்டுத்தெற்கு, வட்டுக்கோட்டை.
(தகுந்த சன்மானம் வழங்கப்படும்)
(49190)

### வாடகைக்கு

யாழ். நகரமத்தியில் பெரியகடையில் மாடிக் கட்டடத்தின் கீழ்ப்பகுதி மட்டும் (750 சதுர அடி) குத்தகைக்கு விடப்படும். சகல விதமான மொத்த சில்லறை வியாபாரங்களுக்கும் மற்றும் தனியார் நிறுவனங்களுக்கும் ஏற்றது.
தொடர்பு: T.P.: 0777311169 (49085)

**Organ/violin Notes**

200 சினிமாப் பாடல்களின் இசைக்குறிப்புகள், Keyboard exercise, Theory கேள்வி ஞானம் ஆகியன விற்பனையாகின்றன.
**Karaweena Isai Manram,**
131, Temple Rd, Nallur.
T.P.: 071 3055991, 0777 031293
(நல்லூர் ஆலயத்திலிருந்து 500m தெற்கே) (49012)


## கைதடி பிரதேச வயல் செய்கையாளர் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஏப்.10

கைதடிப் பிரதேச வயல் செய்கையாளர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு கைதடி கமநல கேந்திர நிலையத்தில் இடம்பெறவுள்ளது.

நாவற்குழி கிழக்கு விவசாயிகள் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் இடம்பெறும் இக்கலந்துரையாடலில் கைதடியைச் சேர்ந்த 6 கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்த நெற்செய்கையாளர்களையும் நெணியன், கோப்பாய் கிராய், மொட்டைஆலடி மேற்கு ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களையும் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

மானிய உரம் வழங்கல், காணி இடாப்புத் தயாரித்தல் ஆகியன குறித்து இக்கலந்துரையாடலில் ஆராயப்படவிருக்கின்றன.

(3)

## குட முழுக்கு விழா

தொல்புரம், ஏப்.10

சுழிபுரம் ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட வசந்த மண்டபத்தின் குடமுழுக்கு விழா இன்று காலை 9 மணிக்கு நடைபெறவிருக்கிறது.

தொடர்ந்து மகேஸ்வர பூசையும் நடைபெறும். இவ்வசந்த மண்டபம் 14 லட்சம் ரூபா செலவில் இந்தியச் சிற்பக் கலைஞர்களால் அமைக்கப்பட்டுள்ளது.

(3-119)


# VACANCIES

**Applications are invited from suitable candidates for the following positions for immediate engagement.**

**1. Programme Secretary (Sportsman Preferred)**
**2.Receptionist (1.00 p.m. to 9.00 p.m. Fluency in Languages - Preferred)**
**3.Accounts Clerk cum Typist.**

**Salary - Negotiabe.**

**Those interested shoud forward their Bio - Data to the under mentioned with contact Telephone number if any within (Ten) 10 days.**

General Secretary
Jaffna YMCA
109, kandy Road, Jaffna.

# UNIVERSITY OF JAFFNA

## *TENDER NOTICE*

### Printing Annual Reports & Accounts

Sealed Tenders are invited from reputed printers for printing of annual reports for 2003.

| | | |
|---|---|---|
| Number of Copies | - 425 | |
| Paper | - 70 GSM Bank Paper | |
| Size | - A4 | |
| Number of Pages | - | |
| Tamil | | 261 |
| Sinhala | | 352 |
| English | | 256 |

Printing materials could be inspected at the Finance Branch of the University of Jaffna during office hours from 19.04.2006 to 27.04.2006 Successful tenders should be prepared to complete the work within a short period.

Tenderers are requested to pay a non refundable tenedr fee of Rs.1000.00 and refundable tender fee of Rs.10,000.00 by Money Order drawn in favour of the "Bursar, University of Jaffna", payable at the Jaffna Post Office or in Cash at the Shroff Counter of the University of Jaffna. The receipt should be enclosed with the tender.

Tenders in duplicate should be sent by registered post to reach the Bursar or deposited in the Tender box available at the Bursar's Office, University of Jaffna on or before 2 p.m. on 28th April 2006. Tenders will be opened immediately after the closing at the Board Room, University of Jaffna. Tenderers or their authorized representative could be present at the opening time. The left hand top corner of the envelope should be marked as "Tender for Priniting of Annual Reports - UJ/SK/T/04/2006"

**Registrar**
**university of Jaffna**
**07-04-2006**

**CONDITIONS OF THE CONTRACT**

1. The successful tenderer shall be required to undertake the contract within 14 days of notification of the award of contract, by entering into an agreement with the University of Jaffna.
2. 5% of the contract value should be submitted by the Contractor before entering into the agreement to ensure the due and proper execution of the contract. This deposit can be made by way of a bank guarantee/ performance bond or in cash payment.
3. Sub contract will not be permitted.
4. Period of contract shall be 90 calender days commencing from the date of agreement. Liquidity, damages shall be recovered for each day by way of penalty late delivery equivalent to 0.5% of the contract price subject to a maximum of 15% of the total contract price.
5. If the contractor is confronted with any technical problem with regard to material and specification etc.after under taking the contract, the matter should immediately be brought to the notice of the Bursar, University for Appropriate Remedial Measures.
6. The contractor shall at all times guarantee the quality of work in every aspect.
7. All the Annual Reports should be transported to the University of Jaffna by the Supplier at their cost and the University will not bear any cost in connection with the transporting the items to the University of Jaffna.
8. Any further information or clarification may be obtained from the Senior Assistant Bursar (Supplies) during the normal office hours (TP No. 021 2222644)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


### கட்டைவேலி - நெல்லியடி ப.நோ.கூ.சங்கம், கரவெட்டி

**மீதிகளை உறுதிப்படுத்தல்**

மேற்படி சங்கத்தின் 2004/ 2005 நிதியாண்டுக்குரிய கணக்காய்வு தற்போது நடைபெற்று வருவதால் இச்சங்கத்திலும், இச்சங்க கிராமிய வங்கியிலும் கொடுக்கல் வாங்கல்களைமேற்கொண்டு வருபவர்கள் தங்களின் வருமதிகள், செல்மதிகள், வைப்புகள், கடன்கள் என்பவற்றின் 31.05.2005 இல் உள்ளவாறான மீதிகளை 10.04.2006, 11.04.2006, 12.04.2006 ஆகிய திகதிகளில் காரியாலய நேரத்தில் சங்க காரியாலயத்திலும் கிராமிய வங்கியிலும் உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

கந்தசாமி சசிகரன்,
கணக்காய்வாளர்,
கட்டைவேலி, நெல்லியடி.
ப.நோ.கூ.சங்கம்.
(சி.48779) (39)


## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியை செல்வி சு.சிவசாமி
அவர்களது அன்புத் தந்தை

### வேலுப்பிள்ளை சிவசாமி

அவர்கள் 07.04.2006 அன்று அமரத்துவம் அடைந்த செய்தி கேட்டு அதிர்ச்சியுறும் அதேவேளை, அன்னாரது குடும்பத்திற்கு எமது அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கல்லூரிக் குடும்பம்,
யா/யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை. (சி.48779) (39)

## அற்றோனித் தத்துவத்தை இரத்துச்செய்தல்

*இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசில் வசிக்கும் தெகிவளையைச் சேர்ந்த* **இராசரட்னம் தவேந்திரா** *ஆகிய நான், 1993.02.22 ஆம் திகதியிடப்பட்ட இல.1599 ஐக் கொண்ட கொழும்பு, பிரபல நொத்தாரிசு இராசரட்னம் பாலேந்திரா அவர்களினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு, கொக்குவில் கிழக்கு, கொக்குவிலில் வசிக்கும் பத்மினி இராசரட்கத்திற்கு (பத்மினி மகாதேவன்) என்னால் வழங்கப்பட்ட பொது அற்றோனித் தத்துவத்தை இரத்துச் செய்கின்றேன் என்பதை இத்தால் அறியத் தருகின்றேன்.*

(49130) (39) **இராசரட்னம் தவேந்திரா.**

## 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
04 - 05 - 1917



மறைவு
25 - 03 - 2002

### அமரர் நாகமணி நடராசா

**திதி: 10 - 04 - 2006**

ஆண்டுகள் நான்கு சென்றாலும்
உங்கள் நினைவுகள் மறையவில்லை.

அரியாலை,
யாழ்ப்பாணம்.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(49191) (27)

## 90 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அமரர்

### பசுபதி பழனி

(ஓட்டோச் சாரதி)

அன்னை மடியில்
10.07.1964

ஆண்டவன் அடியில்
11.01.2006



எமது அன்பான அப்பா
எம்மை வாழவைப்பார்
எம்மை விட்டு வானகம்தான் சென்றீரே!
கண் விழிகள் நீர் சுரக்க
கலங்குகின்றோம் நாம் இங்கு
கனவு போல் தொண்ணூறு
நாள் கடந்து சென்றதுவோ
அன்பான எங்கள் அப்பாவே!
உமது ஆன்மா சாந்தியடைய
ஆண்டவனை வேண்டுகின்றோம்.

குறிப்பு: இன்று (10.04.2006) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விற்கு தனிப்பட்ட அழைப்புக் கிடைக்காத உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

ஸ்ரேசன் றோட், கொக்குவில்.

அன்னாரின் பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்.

(49192) (39)

# வேண்டுவார்க்கு வேண்டுவன அருளும் பன்றித்தலைச்சி அம்மன்

**பங்குனித்திங்கள் உற்சவத்தின் இறுதிக் கிழமை உற்சவங்கள் இன்றைய தினம் ஆலயங்களில் நடைபெறுகின்றன. மேற்படி உற்சவங்களுக்கெனத் தனித்துவமும், வரலாற்றுப் பிரசித்தியும் பெற்ற மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் ஆலயத்தின் சிறப்புப் பற்றி விளக்குகின்றது இந்தக் கட்டுரை.**

**யாழ்.** குடாநாட்டில் உள்ள வரலாற்றுப் பிரசித்தி பெற்ற ஆலயங்களுள் மட்டுவில் பன்றித் தலைச்சி கண்ணகை அம்மன் ஆலயமும் ஒன்றாகும்.

தென்மராட்சி பெரு நிலப்பரப்பில் சாவகச்சேரி - புத்தூர் வீதியில் மட்டுவில் வடக்குப் பகுதியில் இந்த ஆலயம் அமைந்துள்ளது.

இந்த ஆலயம் வயலும் வயல் சார்ந்த இடத்தில் மருதமரமும், புளியமரமும் ஓங்கி வளர்ந்த பகுதியில் அமைந்துள்ளது.

அம்பாளின் ஆலயம் 1750 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நிர்மாணிக்கப்பட்டதாக சான்றுகள் கூறுகின்றன. இதனை ஆலயத்தின் மூலஸ்தானத்தின் பின்புறமாக பித்தளையில் பொறிக்கப்பட்ட எழுத்துக்கள் சான்றுபகிர்கின்றன.


ஆலயச் சூழல் இயற்கையுடன் ஒன்றித்து அழகு நிறைந்த இடமாக காட்சி தருகின்றது. ஓங்கி வளர்ந்த தென்னைகள், பனைகள் அதனுடன் கூடிய மரங்கள் பச்சைப் பசேலென அசைந்து ஆலயத்திற்கு மெருகூட்டுகின்றன. ஆலயத்தின் வரலாறு தனிச் சிறப்புக் கொண்டது. அம்பாளின் அற்புதங்கள் சொல்லில் அடங்காதவை. இதனால், ஆலயத்தில் திங்கள் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் ஆலயச் சூழலில் கூடும் அடியார்களின் எண்ணிக்கையோ அளவிடற்கரியது.

அம்பாளின் அற்புதங்கள் உட்பட அருளாட்சியும் தன்னை நாடி வருபவர்களுக்கு நற்பேறும் வழங்கி நல்வாழ்வளிக்கும் தாய்த் தெய்வம் இந்த அம்பிகை.

பன்றித்தலைச்சி என்றால் யாழ்ப்பாணம் மட்டுமல்ல நாடு பூராகவும், ஏ(ா)? உலகளாவிய ரீதியில் - அற்புத அன்னையை அறியாதவர்கள் எவருமில்லை என்றே கூறவேண்டும்.

ஆலயத்திற்கு வருகைதரும் அடியவர்கள் நீராடுவதற்கு வசதியாக ஆலயத்தின் தெற்குப் பக்கத்தில் 100 அடி நீள, அகலம் கொண்ட புனித தீர்த்தக் கேணி அமைந்துள்ளது. அந்த கேணியில் உள்ள தீர்த்தம் சல சலத்தபடி தூய்மையாக இதம் பரப்பும்.

அங்கு பொங்கல் பொங்கி அம்பாளுக்கு நிவேதித்து வரும் அடியவர்களுக்கும் வழங்கி இஷ்ட சித்திகளைப் பெறுவர். 'பன்றித்தலைச்சி' தாயே எங்கள் வல்வினையைப் போக்கிடு, எங்கள் துயர்களை களைந்து விடு என மனம் இரங்கி வணங்கிடுவர். இதனால் நினைத்த வரத்தைப் பெற்றிடும் பாக்கியத்தைப் பெற்றிடுவர். இந்த வகையான வழிபாடு இன்று நேற்றல்ல இவை பழமை வாய்ந்த வரலாற்றுடன் கூடிய வழிபாடு ஆகும்.



பன்றித்தலைச்சி அம்மன் ஆலய முகப்புத்தோற்றம்

முற்காலத்தில், அம்பாள் மட்டுவில் பகுதியில் இயற்கை வனப்பு நிறைந்த கிராமத்தில் உறைந்து பல அற்புதங்களையும் அருளாட்சியையும் வழங்கி வந்ததாக வரலாறுகள் கூறுகின்றன. அந்த நாள்களில் அம்பாளைச் சூழ வாழ்ந்த மக்கள் விவசாயம் செய்து நற்பண்புகள் நிறைந்தவர்களாக சைவ சமயத்தை பேணி முறையாக வாழ்ந்தார்கள். அந்த நேரத்தில் அந்தப் பகுதி மக்கள் அம்பாளை சிறு குடில் ஒன்றில் அமரச் செய்து விளக்குவைத்து நாளாந்தம் பூசை வழிபாடு செய்து வந்தார்கள். அம்பாளும் அவர்களுக்கு தனது அருளாட்சியையும் அள்ளி வழங்கினாள்.

இந்தக்கால கட்டத்தில் இந்தப் பகுதியில் அம்பாளைப் பூசிக்கும் ஏழை விவசாயி ஒருவருக்கு ஏற்பட்ட பிணக்கை அம்பாள் தீர்த்து அருள்பாலித்தாள் என்பது வரலாறு.

தோட்டப் பயிர்களை இப்பகுதியில் கட்டாக் காலியாகத் திரியும் மாடுகள் மேய்ந்து அழித்து வந்தன. இவ்வாறு மேய்ந்து வந்த மாடுகள், அம்பாளின் அடியவரான ஏழை விவசாயி ஒருவரின் தோட்டத்தில் பயிரிட்ட பயிர்களையும் அழித்து வந்தன . இதனால் இந்த விவசாயி மன வேதனையும் விரக்தியும் அடைந்தான். நாளாந்தம் இந்த மாடுகளை அவன் துரத்தி தனது பயிர்களை பாதுகாத்தான். ஆனால், இந்த கட்டாக்காலி மாடுகளின் தொல்லை நாளுக்கு நாள் அதிகரித்து வந்தது.

ஒரு நாள் இவ்வாறு மாடுகள் மேய்ந்து பயிர்களை அழித்துக்கொண்டு நின்றதைக் கண்ணுற்ற விவசாயி அந்த மாடுகளை துரத்து கையில் அகப்பட்டதால் எறிந்து கலைத்தான். என்ன அதிசயம் விவசாயி எறிந்த பொருளின் தாக்கத்தினால் பசுமாடு ஒன்று அகப்பட்டு அந்த இடத்திலேயே காயப்பட்டு அலறி வீழ்ந்து துடிதுடித்து இறந்தது. இதனால், அந்த ஏழை விவசாயி பெரும் கலக்கமடைந்தான். அம்பாளிடம் ஓடிச்சென்று நடந்ததைக் கூறி நெஞ்சுருகி வழிபட்டான்.

அடுத்து தனது தோட்டத்தில் இறந்த பசுமாட்டினை அதே இடத்தில் குழி தோண்டிப் புதைத்துவிட்டான். இந்த நேரத்தில் இறந்த பசுமாட்டின் சொந்தக்காரன் தனது மாட்டைக் காணாது அந்தப் பகுதி எங்கும் தேடி அலைந்து திரிந்தான். இறுதியாக மாட்டுச் சொந்தக்காரன் தனது பசுமாட்டுக்கு நேர்ந்த கதியை அறிந்தான் - ஆத்திரமடைந்தான்.

அக்காலப்பகுதியில் கிராமங்களில் மக்கள் மத்தியில் ஏற்படும் பிணக்குகளை தீர்க்கும் வகையில் பஞ்சாயத்துச் சபைகள் காணப்பட்டன. இதனால், மாட்டுச் சொந்தக்காரன் பஞ்சாயத்துச் சபையில் வழக்குத் தொடர அதாவது முறையீடு செய்ய முற்பட்டான். அப்படியே மாடு காணாதது தொடர்பாகவும் ஏழை விவசாயி மீதும் பஞ்சாயத்துச் சபையில் முறையிடப்பட்டது.

இந்த முறையீட்டைத் தொடர்ந்து பஞ்சாயத்துச் சபையால் ஏழை விவசாயிக்கு விளக்கத்திற்காக நாள் குறித்து அனுப்பப்பட்டது. ஏழை விவாசாயி பயம் காரணமாக அம்பாளிடம் ஓடோடிச் சென்று வணங்கினான் . தன்னைக் காப்பாற்றுமாறு அழுது புலம்பினான்.

பஞ்சாயத்து சபையில் குறித்த நாளன்று இந்த விவகாரம் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

''நான் மாடுகளைத் துரத்தினேன் ஆனால் பசுமாட்டைக் கொல்லவில்லை'' எனத் தயக்கத்துடன் பதிலளித்தான். ஆனால், பஞ்சாயத்துச் சபை அதனை ஏற்கவில்லை. பசுமாட்டை நீ கொன்று விட்டாய் என குற்றம் சுமத்தி சம்பந்தப்பட்ட விவசாயியின் தோட்டப் பகுதிக்கு பஞ்சாயத்துச் சபையினர் சென்றனர். அங்கு ஏற்கனவே பசுமாடு புதைக்கப்பட்ட இடம் என சந்தேகிக்கப்பட்ட இடம் கூலியாள்களின் உதவியுடன் தோண்டப்பட்டது. விவசாயி கலங்கினான். அம்பாளை வேண்டினான். பஞ்சாயத்து சபை அதிகாரிகள் குழுமி நின்றனர். பசுமாடு போன்ற உருவம் தோண்டி எடுக்கப்பட்டது. என்ன அதிசயம். அங்கு ''பன்றித்தலையுடன் கூடிய உருவம் ஒன்றே காணப்பட்டது. பஞ்சாயத்துச் சபையினர் அதிர்ச்சியும் ஏமாற்றமும் அடைந்தனர்.

**த.அருணன் மட்டுவில்**

இதனை அடுத்து மாட்டுச் சொந்தக்காரனும் ஏனையோரும் விவசாயியிடம் மன்னிப்புப் கோரிவிட்டு அங்கிருந்து கலைந்து சென்றனர். விவசாயியோ அம்பாளிடம் சென்றான். அந்தத் தாயை வணங்கினான். பொங்கல் செய்து நிவேதித்தான் - ஆனந்தம் அடைந்தான் அன்னையின் அற்புதத்தை மெச்சினான்.

அன்று தொடக்கம் மட்டுவில் அம்மன் மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் என அழைக்கப்பட்டு வருகின்றாள் என்பது எல்லையற்ற வரலாறு.

இன்றும். எல்லையற்ற துன்பங்களுடன் தன்னை நாடி வருபவர்களுக்கு அருளை வழங்கும் தாய்த்தெய்வமாக பன்றித்தலைச்சி அம்பாள் விளங்குகின்றாள். (27)

# தமிழ் - முஸ்லிம் உறவைச் சீர்குலைக்க முஸ்லிம்களுக்கென தனியான படையணி

இலங்கையில் இன முரண்பாடு கூர்மையடைந்துவரும் வேளையில், முஸ்லிம் படையணி என்றொரு மற்றுமொரு சதிமுயற்சி அரங்கேறி வருகிறது. பிரிட்டிஷ் காலனித்துவ எச்சங்கள் இன்னும் எம்மைவிட்டுப் போகவில்லை. அதாவது பிரித்தாளும் தந்திரம் இன்று மீண்டுமொருமுறை இலங்கை வரலாற்றில் மெதுவாக அரங்கேறுகிறது.

சிறுபான்மை இனங்களைப் பிரித்தாளுவதன் மூலம் பெரும்பான்மையினம் ஆட்சியை நகர்த்துவதோடு மட்டுமல்லாமல் சிறுபான்மைக்குரிய உரிமைகள், அதிகாரங்களை வழங்காமல் இழுத்தடிக்கவும் முடியும்.

இன்று இலங்கை அரசு ஒருதலைப்பட்சமாக முஸ்லிம் படையணிப்பிரிவொன்றை ஸ்தாபித்து வருகிறது. குறிப்பாக, அம்பாறை மாவட்டத்தை மையமாக வைத்து இப்புதிய சதிமுயற்சி அரங்கேறுகிறது.

அம்பாறை, அக்கரைப்பற்றில் கடந்த வியாழன், வெள்ளி தினங்களில் முஸ்லிம் படையணிக்கு ஆள்சேர்பதற்கான நேர்முகப் பரீட்சை நடைபெற்றது. ஆயிரத்துக்கும் அதிகமான முஸ்லிம் இளைஞர்கள் ஆர்வத்துடன் கலந்துகொண்டனர்.

அம்பாறை, கொண்டவட்டான் இராணுவ முகாமிலிருந்து வந்த இராணுவ உயரதிகாரிகள் இந்த நேர்முகத் தேர்வில் கலந்துகொண்டனர். இதில் ஆயிரம் முஸ்லிம் இளைஞர்கள் தெரிவாகியுள்ளதாகக் கூறப்படுகிறது.

பல்லினமுள்ள நாட்டில் இப்படி தனியொரு இனத்திற்கு என தனியான படையணி உருவாக்கப்படுவது அரசியல் யாப்பிற்கு உட்பட்டதா? இதனை எதிர்த்து நீதிமன்ற வழக்குகளை யாரும் தொடுக்கவில்லையா? என்றெல்லாம் வினாவெழுப்பப்படுகின்றன.

யாரும் விரும்பாத படையணி இதுவென்று கூறப்படுகின்றது. அதாவது முஸ்லிம் தலைவர்கள், தமிழ்த்தலைவர்கள், சிங்களத் தலைவர்களும் விரும்பாத படையணி என்றால் யார் விரும்பியது?

ஜனாதிபதியின் சகோதரரும், பாதுகாப்பு அமைச்சின் செயலாளருமான கோட்டபாய ராஜபக்ஷவின் தன்னிச்சையான முடிவுக்கு முழுநாடே தலைவணங்குகிறதா? அல்லது கண்மூடிக்கொண்டு ஒப்புக்கு கேள்வி எழுப்புவோம் என்ற போர்வையில் கேட்கிறார்களா?

ஜனாதிபதி சமாதானத்திற்காக தமது அதிகாரங்களை - மனவிருப்பை வெளிக்காட்டி

**அம்பாறை மடல்**

வரும் இவ்வேளையில், இதுபற்றி வாய் திறக்காது மௌனம் சாதிப்பது 1983 ஜூலை கலவரத்திலிருந்த அரசியலாளர்களை ஞாபகப்படுத்துகிறது. 1983 ஜூலைக் கலவரத்திற்கு நஷ்டஈடு 23 வருடங்களின் பின்னர் இன்று வழங்கப்படுகிறது.

இன்று உருவாகும் முஸ்லிம் படையணியில் உருவாகப்போகும் இழப்புகளுக்கு நஷ்டஈடு வழங்க எந்த அரசியல்வாதியுமில்லாத சூழ்நிலை உருவாகினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

1949களில் '...ருவான இலங்கை இரா...ணுவ அணியில் தனியொரு இனத்திற்கென படை உருவாகுவது ராஜபக்ஷ ஆட்சியில் தான் என்ற வரலாற்றுக்கறை ஏற்படுவதும் தவிர்க்கமுடியாததாகிவிடும்.

முஸ்லிம்களுக்குத் தனிப்படை உருவாகினால் தமிழருக்கு படைப்பிரிவு உருவாக்க நேரிடும் என்று கூறுவதில் அர்த்தமுள்ளது. அந்தக் கட்டத்தில் அரசு மறுக்கமுடியாத நிர்ப்பந்தமேற்படும்.

முஸ்லிம் படையணி இல்லாத 1985, 1990, 1991களில் அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களில் நடந்த இன முரண்பாடுகளுக்கு காரணம் யாது? இலங்கை இரணுவத்தை முன்னே விட்டு முஸ்லிம் தீவிரவாத இளைஞர்கள் பின்னே சென்று தமிழர்களைக் கொன்று குவித்து கோடிக்கணக்கான சொத்துக்களை அழித்த சம்பவங்களை மறக்க வரலாறு இடம்கொடுக்காது. இப்போது அந்த இளைஞர்களின் படையணி உருவானால்? இந்தநிலையில், ஜெனீவாப் பேச்சுவார்த்தைகள் முஸ்தீவுகள் இராஜதந்திரமாக நகர்த்தப்பட்டுவருகின்றன.

நோர்வேயின் சமாதான அனுசரணையாளராகவிருந்த எரிக்சொல்ஹெய்ம் போகும்போது 'ஒட்டுப்படைகளிடமிருந்து ஆயுதங்கள் களையப்படும்வரை நிரந்தர சமாதானத்தை எட்டமுடியாது என்று எச்சரித்துச் சென்றார்.

புதிய அனுசரணையாளர் ஹான்ஸன் போவர் ஒரு கடும் போக்காளராகக் கருதப்... ...ல் இறந்த ஜனாதிபதி மிலோசவிக்கின் நடவடிக்கைகளை அன்று கையாண்டவர் அவரென்று கூறப்படுகிறது.

முக்கிய காலகட்டத்தில் உள்ள இலங்கை இனமுரண்பாட்டுச் சூழலுக்கு போவர் பொருத்தமானவர் என்றும் கூறப்படுகிறது பொறுத்திருந்து பார்க்கலாம்.

அதனிடையே, திருமலையின் நீண்டகால தமிழ்த் தேசியபற்றாளர் விக்னேஸ்வரன் சுட்டுக் கொல்லப்பட்டமையும் வார இறுதியில் மட்டு.அம்பாறை மாவட்ட தமிழ் மக்களின் மத்தியில் சலனத்தை ஏற்படுத்தியது.

**இராஜபுத்திரன்**

பேரினவாதம் முடியுமானவரைக்கும் தமிழினத்தை நசுக்கவே முற்படுகிறது. அரசியலில் அதிக பலம் கொண்ட ஜே.ஆர்.ஜயவர்த்தனவோ பிரேமதாஸாவோ ஏன்? ராஜபக்ஷவோ இன்றைய இன பிரச்சினையைத் தீர்க்கப்போவதில்லை என்பது கண்கூடு. இதற்கு ரணிலும் விதிவிலக்கல்ல. இழுத்தடித்து ஆட்சியை தக்கவைத்து தமது காலத்தைக் கடத்துவதே எதிர்பார்ப்பும் திட்டமும்.

எனவே, பேச்சு என்பது வெறும் காலங்கடத்தும் நடவடிக்கை என்று கூறலாம். எனினும், அரசியல் சதுரங்கத்தில் காய்நகர்த்தல் இருசாராருக்கும் பொருத்தமானதே. வண்டில் பாரம் பூமியில் என்பதுபோல எல்லா பளுவையும் மக்களே சுமக்க வேண்டிய இழிநிலை இலங்கையில் நிலவுவது ஒன்றும் புதிதல்ல. (37, 23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம்- வண்ணார்பண்ணை ஸ்ரீமத் வ



# பஞ்சரதப் பவனி சிற

## வண்ணை வைத்தீஸ்வரன் வேண்டுவனவற்றைத் தருபவன்

ஒல்லாந்தர் ஆட்சி செய்த காலத்தில் தமது மனைவியாரோடு சோழ நாட்டில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு வந்து இங்கேயே குடியாக இருந்து ஒல்லாந்த அரசின் மொழிபெயர்ப்பாளராக இருந்தவர் கொச்சிக் கணேசையர்.இவரிடம் உத்தியோகம் பார்த்து வந்த கோபாலன் செட்டியார் கொச்சிக் கணேசையரிடம் இருந்து விலகி பலசரக்கு வியாபாரம் செய்து வந்தார். ஒல்லாந்த தேசாதிபதி வீட்டிற்கும் பலசரக்கு கொடுக்கும் வழக்கம் உடையவர் செட்டியார்.

இக்காலத்தில் இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வந்த கூழங்கைத் தம்பிரான் செட்டியாரின் நண்பராகிறார். இச்சமயம் செட்டியாருக்கு ஒரு மகன் பிறந்தார். புதல்வனைப் பார்த்த கூழங்கைத் தம்பிரான் ஆசீர் வதித்து ''இயன் பெரும் கருமங்கள் செய்யப் பிறந்துள்ளான். இவனுக்கு வைத்திலிங்கம் என்று பெயரிடுக'' என்றார். அவ்வண்ணமே அவர்களும் பெயரிட்டனர். 12 வயதான வைத்திலிங்கம் தேசாதிபதியாரின் மனைவியரிடம் அபிமானத்தைப் பெற்று அவர்களிடத்தில் சுவீகாரப் புதல்வன் போல வளர்ந்தார்.

18 வயதளவில் இளம் வயதில் முத்துக் குத்தகை எடுத்து முத்துவியாபாரம் செய்து பெரும் பொருள் ஈட்டியதுடன் யானை வாங்கி விற்கும் வியாபாரமும் செய்து இவர் பெரும் பொருள் ஈட்டினார். கூழங்கைத் தம்பிரானிடம் கல்வி பயின்ற வைத்திலிங்கம் செட்டியார் கூழங்கை தம்பிரானின் ஆலோசனைப்படி வைத்தியநாதர் பெருமானுக்கும் தையல் நாயகித் தாயாருக்கும் யாழ்ப்பாணத்தில் ஆலயம் அமைக்க முடிவெடுத்தார்.

சைவ ஆலயங்களை இடித்தும், சைவ சமயத்தினரை துன்புறுத்தியும் தங்கள் சமயத்தைப் பரப்பிவந்த ஒல்லாந்தர் மத்தியில் சைவத்தையும் தமிழையும் வளர்க்க முற்பட்ட வைத்திலிங்கம் செட்டியார் அவர்கள் தனது செல்வாக்கினைப் பாவித்து வண்ணை வைத்தீஸ்வரர் கோயிலைக் கட்டுவதற்கு ஒல்லாந்த அரசிடம் அனுமதியைப் பெற்றார். 1787 ஆம் ஆண்டு ஆரம்பித்து 1790 இல் கட்டட வேலையைப் பூர்த்தி செய்து வாலாம்பிகா சமேத வைத்தீஸ்வரர் பெருமானுக்கான பரிவாரக் கோவில்களையும் அமைத்து அதே ஆண்டில் (1790) சாதாரண வருடம் சித்திரை மாதம் பூர்வபட்ச சப்தமியோடு கூடிய புனர்பூச நட்சத்திரத்தில் கும்பாபிஷேகம் செய்வித்தார். நித்திய, நைமித்தியங்கள் கிரமமாக நடைபெறச் செய்தார். இவ்வாலயமும் இதனைச் சூழவுள்ள பரிவார ஆலயங்களும் இவரது வழித்தோன்றல்களால் பரிபாலிக்கப்பட்டு வருகிறது. இவர் வழியில் ஆறாவது தலைமுறையினரான கந்தப்பச் செட்டியார் அவர்களின் தனி முயற்சியால் 27.01.2002 இல் தை மாதம் 14 ஆம் நாள் ஆலயத்தில் புனராவர்த்தன பிரதிஸ்டா கும்பாபிஷேகம் நடைபெற்றது.

### சுவாமிமகோற்சவமும் பரிவாரக் கோயில்களும்

சுவாமி மகோற்சவம் வருடம் தோறும் பங்குனி உத்திர தினத்தை தீர்த்தமாகக் கொண்டு 19 தினங்கள் நடைபெறும். எனினும் உற்சவத்திற்கான பூர்வாங்கக் கிரியைகள் தை மாத பௌர்ணமி தினத்தன்றே ஆரம்பமாகிறது எனலாம். தை மாத பௌர்ணமி அன்று இக்கோயிலில் உள்ள ஐயனார், இதன் பரிவாரக் கோயிலாகிய தட்டாதெரு ஐயனார் கோயிலுக்கு எழுந்தருளி அங்கு விசேஷ அபிஷேகம்,பூஜைகள் என்பன செய்து காப்புக் கட்டும் வைபவத்துடன் மகோற்சவத்திற்கான பூர்வாங்கக் கிரியைகள் ஆரம்பமாகின்றன. பின்னர், மாசி மாதப் பௌர்ணமியன்று இங்கு எழுந்தருளியுள்ள காளியம்பாள், இதன் பரிவாரக் கோயிலாகிய தட்டாதெரு காளி கோயிலுக்கு எழுந்தருளிஅங்கு விஷேஷ அபிஷேகம், பூஜைகளுடன் காப்புக் கட்டும் வைபவம் நடைபெறும். தொடர்ந்து கொடியேற்றத்திற்கு முதல்வரும் செவ்வாய் அல்லது வெள்ளிக்கிழமையில் முறையே கோயில் எழுந்தருளியுள்ள ஸ்ரீ முத்துமாரி அம்மனுக்கு உற்சவமும் நடைபெறும். இவையாவும் இவ்வாலய பரிவாரத் தெய்வங்களாக இருந்து இக்கிராமத்தைக் காக்கும் தெய்வங்கள். மகோற்சவ காலத்திலும் எதுவித இடையூறுகளும் இன்றி காக்கவேண்டும் என்பதற்கான வழிபாடுகளேயாம்.



வண்ணை வைத்தீஸ்வரன் ஆலய எழில் மிகு முகப்புத் தோற்றம்

வண்ணை வை

வண்ணை வைத்திஸ்வரகு
அன்பரிடர் தீர்க்கவே - க
அழகான தேரில் ஏர்த்தே
நிழலாய் வலம் வருவார்

திருமுருகன் கொம் நெற்
259, K.K.S வீதி, யாழ்ப்பாணம். (ஆல்சிலோன் டிஸ்ரி பியூட்டர்ஸ் முன்பாக)
46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி. (நல்லூர் பல நோ. கூ.ச. முன்பாக)

SRIMURUGAN
TELECOMMUNICATION
& AGENCY POST OFFICE
303, K.K.S. ROAD,JAFFNA.
T.P: 222 2670, 5932
FAX NO: 021 222 3214, 3435

S.S. யசோதரன் ஆட்ஸ்
இல.212, கோயில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொ.பே.இ: 021 -222 9607, 0777 110810

அசல் 22 கரட் அழகிய தங்கப்பவுண் நகைகளுக்கு சிறந்த இடம்:
சாரங்கா நகைமாடம்
157/ 1, கஸ்தூரியார் வீதி,யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 222 6972, 021 222 2480

தரமான பொருள்களுக்கு தவறாமல் நாடுங்கள்
முத்துவிநாயகர் பல்பொருள்வாணிபம்
இல.418, கே.கே. எஸ். வீதி,யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 6126

பலசரக்கு மற்றும் மிக்சர் தயாரிக்கும் பொருள்கள் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெறுவதற்கு
ஜெகன் களஞ்சியம்
இல.285, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 2225035

புடைவைத் தினுசுகள், கூறைச் சேலைகள், பஞ்சாபி, ஸ்கேட் அன் பிளவுஸ், சேட்டிங் சூட்டிங், Tசேட், டெனிம் ஜீன்ஸ், சேட்(ரெடிமேட்) மற்றும் அனைத்து வகையான ஆடைத் தெரிவுகளுக்கும் சிறந்த ஸ்தாபனம்.
சிவாரெக்ஸ் ரைல்ஸ்
இல. 27, பெரிய கடை வீதி, யாழ்ப்பாணம்.

RG
HERO HONDA World No. 1 Two-Wheeler Company
இரத்தினகோபால்ஸ்
65, 63 கன்னாதிட்டி வீதி,யாழ்ப்பாணம்.
0777 340056, 021 222 6185

ஸ்ரீமதனா நகைமாளிகை
எழிலுறு தரமான அசல் 22 கரட் தங்க நகைகளுக்கு நாடுங்கள்
155/M, கஸ்தூரியார் வீதி,யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 7772,0777 300185
மதனா ஜூவலரி
177/3, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 222 5526

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நற்பண்பு நிறைந்த ஆசிரியரால்தான் சிறந்த மாணவரை உருவாக்க முடியும்

## வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் தெரிவிப்பு

அக்கராயன்,ஏப்.10

நற்பண்புகள் நிறைந்த ஆசிரியர்களினால்தான் வளமான சிறந்த மாணவர்களை உருவாக்க முடியும்.

இவ்வாறு கிளிநொச்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.முருகவேள் தெரிவித்தார்.

கிளிநொச்சி புனித திரேசா பெண்கள் கல்லூரியில் 25 ஆண்டுகள் பணிபுரிந்து ஓய்வு பெற்ற ஆசிரியை நாகேஸ்வரி திருநாவுக்கரசுவைப் பாராட்டும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

ஒரு நல்ல தாய் போன்று பண்புகளுடன் வழி நடத்தும் ஆசிரியர் இன்று ஓய்வுபெற்றுள்ளார். இந்த ஆசிரியரால் வளர்க்கப்பட்ட மாணவர்கள் நல்ல எதிர்காலத்தைப் பெற்ற வண்ணம் உள்ளனர்.

கிளிநொச்சி வலய பாடசாலைகளில் பலர் அர்ப்பணிப்புடன் பணியாற்றி வருகின்றனர். நல்ல பண்புகளை ஆசிரியர்களிடமிருந்தே மாணவர்கள் கற்றுக்கொள்கின்றனர்.

நல்ல பண்புகளை ஆசிரியர்கள் மாணவர்களுக்கு சொல்லிக்கொடுத்து வழிநடத்த வேண்டும் -என்றார். (த-420)(25)



கிளிநொச்சி புனிததிரேசா பெண்கள் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி அண்மையில் இடம்பெற்றது. இதில் வெற்றியீட்டிய மாணவி ஒருவருக்கு கிளிநொச்சி கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் பெ.கணேசன் பரிசில் வழங்குவதைப் படத்தில் காணலாம். (படம்: அக்கராயன் செய்தியாளர்)

# மீள்குடியமர்வுக்கும் விவசாயத்துக்கும் வெடிபொருள்களால் பெரும் இடையூறு

## கிளிநொச்சி மேலதிக அரச அதிபர் தகவல்

அக்கராயன், ஏப்.10

கிளிநொச்சி மாவட்ட மக்களின் மீள் குடியமர்வு விவசாய முயற்சிகளுக்கு வெடி பொருள்கள் பெரும் தடையாகவுள்ளன.

இவ்வாறு கிளிநொச்சி மேலதிக அரச அதிபர் நா. வேதநாயகன் தெரிவித்தார்.

கிளிநொச்சியில் இடம்பெற்ற சர்வதேச கண்ணிவெடி விழிப்புணர்வும் செயற்பாடுகளின் உதவிகளுக்குமான நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த ஐந்து ஆண்டுகளாகத்தான் கண்ணி




வெடிகளின் பாதிப்புகள் முழுமையாகத் தெரிந்தது எமக்கு. கண்ணிவெடிகளின் பாதிப்புகள் தெரிய முன்னரே பல நாடுகளில் இப்பாதிப்புகள் இருந்தன.

போர் இடம்பெற்றதன் காரணமாக கண்ணி வெடிகளின் பாதிப்புகள் எமக்குத் தெரியவந்தன. போர் காரணமாக மக்கள் இடம்பெயர்ந்து மீள்குடியமர்ந்தபோதே மக்கள் கண்ணிவெடிகளின் அச்சுறுத்தலை எதிர்கொண்டு வருகின்றனர்.

கண்ணி வெடிகளினால் மீளக்குடியமர முடியாத நிலை காணப்படுகிறது. கிளிநொச்சி மாவட்டத்தில் 80 வீதமான மக்கள் இடம்பெயர்ந்து மீளக் குடியமர்ந்த வண்ணமுள்ளனர்.

5ஆயிரம் குடும்பங்கள் கிளிநொச்சி மாவட்டத்தில் மீளக்குடியமர வேண்டியுள்ளனர்.

மீளக்குடியமர்ந்துவரும் மக்கள் வெடி பொருள்களின் அச்சுறுத்தல் காரணமாக விவசாய முயற்சிகளில் ஈடுபட முடியாத நிலையில் உள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் மிதி வெடிகள் உள்ள பிரதேசங்களில் 15வீதமான நிலப்பரப்பில் மிதிவெடிகள் அகற்றப்பட்டுள்ளன. 85வீதமான நிலப்பரப்பில் வெடிபொருள்களின் அச்சுறுத்தல் உள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தில் வெண்புறா, யுனிசெவ் ஆகியவற்றின் வெடிபொருள்கள் தொடர்பான செயற்பாடுகள் பாராட்டுக்குரியன.

வெடிபொருள்கள் தொடர்பான விழிப்புணர்வுச் செயற்பாடுகள் மக்களுக்கு அவசியமாகிறது.

கிளிநொச்சி மாவட்டத்தில் புதைக்கப்பட்டுள்ள வெடிபொருள்களை அகற்றுவதற்கு எல்லோரும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும்.

வெடிபொருள்களை முற்றாக அகற்றும் போதே மக்களின் மீள் குடியமர்வு விவசாய முயற்சிகள் விரைவாக இடம்பெறும்-என்றார் அவர். (த-420)(27)

# மாவீரர் நினைவு உதைபந்தாட்டம் இன்று ஆரம்பம்

பரந்தன், ஏப்.10

அக்கராயன் பிரதேச மாவீரர்கள் நினைவாக ஸ்கந்தா விளையாட்டுக் கழகம் நடத்தும் மாபெரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி இன்று ஆரம்பமாகவுள்ளது.

இப்போட்டியில் கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களைச் சேர்ந்த விளையாட்டுக்கழகங்கள் மோதவுள்ளன.

போட்டிகளில் வெற்றிபெறும் அணிகளுக்கு பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (3-352-203)(26)

# புதுக்குடியிருப்பில் பொது வசதிகள் இல்லாததால் மக்கள் சிரமம்

புதுக்குடியிருப்பு,ஏப்.10

புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் பொது மலசலகூடம், பொதுக்கிணறு போன்ற அடிப்படை வசதிகள் இன்மையால் பிரதேச மக்களும் பயணிகளும் பெருஞ் சிரமங்களை எதிர் கொள்கின்றனர்.

பல்வேறு தேவைகளுக்காக இப்பகுதிக்கு வரும் மக்கள் குடிதண்ணீர் பெறுவதற்கும் இயற்கைக் கடனைக் கழிப்பதற்கும் பெருஞ் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். தேசிய நீர் வடிகால் சபையினரும் குடிதண்ணீர் விநியோகத்தை இங்கு மேற்கொள்வதில்லை. இதனால் வர்த்தகர்கள், பொதுமக்கள் எனப் பலரும் அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர்.

இது தொடர்பாகச் சம்பந்தப்பட்டோரிடம் கோரிக்கைகள் விடுக்கப்பட்டும் எந்த விதமான ஆக்கபூர்வ நடவடிக்கைகளும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லையென விசனம் தெரிவிக்கப்படுகின்றது. (ஓ-353-202)(25)

# யுத்தத்தின் பின் வவுனியா வடக்கின் நிலைமை இன்னும் சீராகவில்லை

## அப்பிரதேச செயலர் கூறுகிறார்



வவுனியா வடக்குப் பிரதேசம் போர் அனர்த்தங்களால் கடந்த காலங்களில் பெரும் அழிவுகளைச் சந்தித்துள்ளது. இன்னும் நிலைமை முழுமையாகச் சீராகவில்லை.

1997ஆம் ஆண்டு அரச படையினர் மேற்கொண்ட 'ஜயசிக்குறு' படை நடவடிக்கையின்போது பாடசாலைகள், குளங்கள், அலுவலகக் கட்டடங்கள்,மருத்துவமனைகள் போன்றவை பாரிய சேதங்களுக்குள்ளாகின. இப்பிரதேச மக்களும் இடம்பெயர்ந்தனர்.

இப்பிரதேசத்தின் தற்போதைய நிலைமையை அறிய வவுனியா வடக்குப் பிரதேச செயலர் க.பரந்தாமனைச் சந்தித்தபோது...

***கேள்வி:-*** வவுனியா வடக்குப் பிரதேச செயலர் பிரிவின் தற்போதைய நிலைமை எப்படியுள்ளது?

***பதில்:-*** 1997 ஆம் ஆண்டு இடம்பெற்ற 'ஜயசிக்குறு' இராணுவ நடவடிக்கைக்கு முன்னர் வவுனியா வடக்கில் சுமார் 5 ஆயிரம் குடும்பங்கள் வாழ்ந்தன. தற்போது 4 ஆயிரத்து 139 குடும்பங்கள் மீளக்குடியமர்ந்துள்ளன. 15 ஆயிரத்து 576 பேர் வாழ்ந்து வருகின்றனர். இம்மக்களின் பிரதான தொழில் விவசாயமாகும். இவர்கள் அறுவடை செய்த நெல்லை சந்தைப்படுத்தமுடியாத நிலையுள்ளது. அரசு கடந்த ஆண்டு 12 மில்லியன் ரூபாவினை நெற்கொள்வனவிற்காக வழங்கியது. இதனைக்கொண்டு வவுனியா வடக்கு ப.நோ.கூ. சங்கம் நெல்லினைக் கொள்வனவு செய்து களஞ்சியப்படுத்தியுள்ளது. இந்த நெல்லினை அரிசியாக்கி கொழும்புக்கு அனுப்புவதற்கான நடவடிக்கை இடம்பெற்று வருகிறது.

***கேள்வி:-*** வவுனியா வடக்கின் கல்வி நிலை எப்படியுள்ளது?

***பதில்:-*** ஆசிரியர்கள் பற்றாக்குறை நிலவுகிறது. ஆசிரியர்களுக்குரிய போக்குவரத்து மற்றும் விடுதி வசதி போன்றவை பிரச்சினையாக உள்ளன. பாடசாலைகளின் கட்டடங்கள் மட்டும் அமைக்கப்படுகின்றன. ஆசிரியர்களுக்குரிய தங்குமிட வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டிய நிலையில் உள்ளோம்.

***கேள்வி:-*** மருத்துவ சேவை பற்றி?

***பதில்:-*** நெடுங்கேணி சுற்றயல்கூறு மருத்துவ மனையை புதிய கட்டடத்தில் இம்மாதத்தில் இயங்கவைக்கவுள்ளோம்.

நெடுங்கேணி சுற்றயல்கூறு மருத்துவமனையில் ஒரு மருத்துவர் மட்டும் பணியில் உள்ளார். இருவர் பணியில் இருக்கவேண்டும். இந்நிலை தொடர்பாக மாவட்ட பிரதி மாகாண சுகாதார பிரதிப் பணிப்பாளரிடம் கூறியபோது வவுனியா வடக்கில் பணிபுரிய மருத்துவர் முன்வருவதில்லை என்று கூறுகிறார். இப் பிரதேசத்தில் தீலீபன் மருத்துவமனை மருத்துவர்களின் பணி மெச்சத்தக்கது.

***கேள்வி:-*** வவுனியா வடக்கு பிரதேச செயலகத்தில் ஆளணி போதுமான அளவில் உள்ளதா?

***பதில்:-*** போர் காலத்தில் எமது பிரதேச செயலகம் முற்றாக அழிக்கப்பட்டு தற்போது 18 மில்லியன் ரூபா செலவில் மீண்டும் புதிய கட்டடம் அமைக்கப்பட்டுள்ளது. எமது பிரதேச செயலகத்தில் நிர்வாக அதிகாரி என்ற வகையில் நான் மட்டுமே பணிபுரிகிறேன். உதவித் திட்டப் பணிப்பாளர், கணக்காளர் பணியில். இல்லை. 21 எழுதுநர்கள் பணிபுரிய வேண்டிய இடத்தில் ஐவர் மட்டுமே பணியில் உள்ளனர். மக்களின் தேவைகளை உடன் நிறைவு செய்யக் கூடிய கணனி வளம் எமது பிரதேச செயலகத்தில் இல்லை.(26)

# கௌசல்யன் நினைவாக மன்னாரில் இரு நாள்கள் நடமாடும் மருத்துவசேவை

மன்னார்,ஏப்.10

மன்னார் மாவட்டத்தில் லெப்.கேணல் கௌசல்யன் நினைவாக இருநாள்கள் நடமாடும் மருத்துவ சேவை அண்மையில் இடம்பெற்றது.

மன்னார் அரசியல் துறையினரின் அனுசரணையுடன் தமிழீழ சுகாதார சேவைகள் பிரிவினரும், தமிழீழ மருத்துவப் பிரிவினரும் இணைந்து இந்த மருத்துவ சேவையை நடத்தினர்.

மன்னாரில் மருத்துவ வசதிகுறைந்த வெள்ளாங்குளம், இலுப்பைக் கடவை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த மக்களுக்கான இம் மருத்துவசேவை வெள்ளாங்குளம் அ.த.க. பாடசாலையிலும் இலுப்பைக்கடவை அ.த.க. பாடசாலையிலும் நடைபெற்றது.

இச்சேவையில் பொது மருத்துவம், கண், பல், தோல், சுதேசமருத்துவம் ஆகியதுறைகளில் சிகிச்சைகள் வழங்கப்பட்டன.

அத்துடன் காசநோய், பற்சுகாதாரம் ஆகியவை சம்பந்தமான கண்காட்சிகளும் விழிப்புணர்வுக் கருத்தூட்டல்களும் நடத்தப்பட்டன. மாணவர்களிடையே மருத்துவம் தொடர்பான வினாடிவினாப்போட்டிகள் நடத்தப்பட்டு பரிசில்களும் வழங்கப்பட்டன. (ஓ)(26)

# உபதபாலகம் தரமுயர்வு

புதுக்குடியிருப்பு, ஏப்.10

புதுக்குடியிருப்பு உபதபாலகம் எதிர் வரும் 10ஆம் திகதி முதல் தபாலகமாக தரம் உயர்த்தப்படவுள்ளது.

முல்லைத்தீவு-புதுக்குடியிருப்பு சிவன் ஆலயத்தின் அருகில் அமைந்துள்ள தனியார் கட்டடத்தில் எதிர்வரும் 10ஆம் திகதி முதல் தரமுயர்த்தப்பட்ட தபாலகம் இயங்கவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஓ-353) (27)



கிளிநொச்சி வன்னேரிக்குளம் ஐயனார்புரம் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி அண்மையில் நடைபெற்றது. அதில் இடைவேளையின் போது மாணவர்கள் வழங்கிய உடற்பயிற்சிக் கண்காட்சியைப் படத்தில் காணலாம். (படம்: அக்கராயன் செய்தியாளர்)(26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதன் முறையாக யாழ் நகரில் Tally

பல்கலைக்கழக மாணவர்கள், AAT, CIMA, CMA, IAB, HND(UK), HNDA, Charted(SL), A/L வர்த்தக பிரிவு மாணவர்கள் மற்றும் கணக்கியலில் ஆர்வமுடையவர்கள் இத்தேர்வில் பங்குபற்றலாம்.

30 நிமிடங்களில் 30 வணிகம் மற்றும் கணக்கியல் கேள்விகளுக்கு விடையளித்து 60% வரையான கட்டணக்கழிவை பெறுங்கள்.



கணக்கியல் மென்பொருள் கற்கைநெறி
(Certified Computer Accountant)

Tally GRADUATE
ies 7.2

AIT 2006
ACCOUNTANCY INTELLIGENCE TEST

Super Exclusive Offer
March 15th to April 20th

முன்பு கல்விக்கு ஏற்றவேலை
இனி வேலைக்கு ஏற்றகல்வி

VAT Enabled Tally

பரீட்சை பற்றிய மேலதிக விபரங்களுக்கு கீழ்குறிப்பிட்ட எமது நிலையங்களை நாடுங்கள்

ASIAN - CSC COMPUTER EDUCATION
101, 2ம் மாடி, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். Tel : 021-222 8196
2G, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 021-222 5677


## இலவச பயிற்சி வகுப்பு

தலை அலங்காரம், பூவேலை, கேக் ஐசிங் ஆகிய பயிற்சி நெறிகளுக்கான இலவச பயிற்சி வகுப்புகள் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு மானிப்பாய் மகளிர் இந்துக் கல்லூரியில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இந்தப் பயிற்சி நெறியில் இணைந்து கொள்ள விரும்பும் மாணவர்களை அன்றையதினம் பாடசாலைக்குச் சமுகமளிக்குமாறு பாடசாலை அதிபர் கேட்டுள்ளார். (எ-14)

## குடில் எரிந்து புகையிலை நாசம்

புகையிலைக் குடில் எரிந்ததில் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான புகையிலை எரிந்து நாசமாகியுள்ளது. வேலணை, 7 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த சி.கந்தசாமி என்பவருடைய வீட்டில் கடந்த புதனன்று இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. குடில் மற்றும் கொட்டகை என்பன தீயில் எரிந்து நாசமாகியுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது. (எ-188)


# வைதீக பூர்வ, அபர வகுப்புகள்

தர்மசாஸ்தா குருகுலத்தில் பூர்வ, அபர வைதீக வகுப்புகள் ஆரம்புமாகியிருக்கின்றன. தினசரி காலை 5.30 மணிக்கு வ[illegible]ப்புகள் ஆரம்பமாகும். கற்றுக்கொள்ள விரும்புபவர்கள் அழைக்கப்படுகிறார்கள்.

(49180) (24-11-45) சிவஸ்ரீ தா.மகாதேவக் குருக்கள்.

# புத்தூர் அருள்மிகு காரைக்கூடல் வைரவர் தேவஸ்தான

வருடாந்த அலங்கார உற்சவம் [12 நாள்கள்] -2006

ஆரம்பம்:

**11.04.2006 பங்குனி உத்தரம் விழாவும் 1008 சங்காபிஷேகமும்**

நேரம்:
காலை 8 மணி - 12 மணிவரை
பிற்பகல் 5.30 மணிக்கு வசந்த மண்டபப் பூசை ஆரம்பமாகும்.
22.04.2006 1008 சங்காபிசேகமும் தீர்த்த உற்சவமும் இடம்பெறும்.
தினமும் அருள்மிகு வைரவப் பெருமான் வீதியுலா வருவார்.

**பிரம்மஸ்ரீ S.சோமசுந்தரக் குருக்கள்**
தலைமையில் கிரியைகளும் விழாக்களும் நடைபெறும்.

காரைக்கூடல் வைரவர் தேவஸ்தான
(49109) (24-11-45) அறங்காவலரும், உபயகாரரும், பொதுமக்களும்.



எமது தாயக மண்ணில் நூறுவீதம் செய்முறைப் பயிற்சியுடன் எமது மாணவர்களும் கணனித்துறையில் பாரிய விற்பனர்கள் ஆக வேண்டுமென்ற கனவை நினைவாக்கும் நோக்குடன் சிறந்த செய்முறைப் பயிற்சிக்கூடத்துடன் அமைக்கப்பட்டுள்ளது.

**நாங்கள் யார்?**

- இந்தியாவை தலைமையிடமாகக் கொண்டு செயற்படுபவர்கள்.
- இந்திய பொறியியல் துறையில் எலக்ட்ரோனிக்ஸ் அண்ட் கொமுனிக்கேசன் துறையில் சிறப்புப் பட்டம் பெற்றவர்கள்.
- 2 தசாப்த காலமாக இந்திய மற்றும் உலக முன்னணி நிறுவனங்களில் வேலைசெய்து அனுபவம் பெற்றவர்கள்.
- உலக முன்னணி நிறுவனங்களான IBM, Compaq, Dell, Bell Labs, Dlink, Link sys, Microtek, Cisco மற்றும் Gateway போன்ற நிறுவனங்களுடன் இணை Hardware & Network பொருட்கள் தயாரிப்பில் பாரிய பங்காற்றியவர்கள்.
- உலக முன்னணி நிறுவனங்களான Microsoft, Sun microsystems, Lotus Intl, AT& T Labs, SCO, Oracle மற்றும் Infosys நிறுவனங்களுடன் மென்பொருள் இணைத் தயாரிப்பில் ஈடுபட்டவர்கள்.
- கடந்த ஒரு வருடகாலமாக UNIT நிறுவனமூடாக கணனி உதிரிகள், வலைப் பின்னலமைப்பிற்கான உதிரிகள் மற்றும் அதற்குரிய சேவைகளையும் வழங்கிக் கொண்டிருப்பவர்கள்.

கணனிக் கல்வியில் எமது முதல் கல்

## BIT Syllabus Included

### HARDWARE

PC Components, Features, and System Design · Microprocessor Types and Specifications · Motherboards and Buses · BIOS & CMOS RAM · Memory Types and Cache Memory · The IDE, SCSI, SATA Interfaces · Magnetic HDD, FDD Storage Principles · Optical Storage · Video and Audio Hardware · Local Area Networking, Internet Builds-up and Tune ups · SMPS, Assembling & Evaluating a System · BIOS and CMOS Configuration, Setups and Fine Tunings · PC Diagnostics, Testing, and Maintenance · Operating System Installation, Configuration and Repairing · Dos Commands, Virus Scanners, Cleaner Installation and Operation · Trouble Shooting · Remote and Mobile Interfaces · Chip Level and Card Level Trouble Shooting · Mother Board repairing, Scope diagnostics, Chip Level Servicing · Software based Diagnostics system · Infrared, Blue Tooth Connectivity

### NETWORK

Simplex, Duplex Types · The Ethernet System · The Media Access Control Protocol · Full-Duplex & Auto-Negotiation · Twisted-Pair, Fiber Optic, Fast Ethernet, Gigabit Ethernet Media System · Multi-Segment Configuration Guidelines · Structured Cabling · Ethernet Repeater, Switching, Router Hubs · Network OS Installation & Configuration (WinXP, Win2000 & Win98) · LAN, WAN & MAN fundamentals · Troubleshooting · Configuring the Interface, Routing, DNS & Network Servers · Send mail · Memory Buffers · Interface Layer · Interfaces: Ethernet, SLIP and Loop Back · IP Addressing · Domains and Protocols · Internet Protocol · Option Processing · Fragmentation and Reassembly · Internet Control Message Protocol · Multicasting · IGMP: Internet Group Management Protocol · IP Multicast Routing · Socket Layer, I/O & Options · Radix Tree Routing Tables · Routing Requests and Routing Messages · Routing Sockets · ARP, UDP & TCP · TCP Timers, Output, Functions, Input & User Requests · BPF, Raw IP · Trouble shooting TCP/IP · Network Security · Internet Information Resources · PPP Tools · Campus Network Design Models · Basic Switch and Port Configuration · VLANs and Trunking · Redundant Switch Links · Trunking with ATM LANE · Inter VLAN Routing · Multilayer Switching · Configuring Multicast Networks & Access in the Campus Environment · Monitoring and Troubleshooting · Scenarios for Final Preparation · Routing Principles · Extending IP Addresses · Configuring OSPF in a single Area · Interconnecting Multiple OSPF Area · Configuring EIGRP · Configuring Basic Border Gateway Protocol · Implementing BGP in Scalable Networks · Optimizing Routing Update Operation · Implementing Scalability Features in Internet work

Field Offices: UNIT, India. Aram Menporulagam, India. Zensoft, Malaysia. Zensoft, USA. WinCisco Labs, Canada.

பயிற்சிகள் பற்றிய விபரங்களுக்கு தொடர்பு நிர்வாகம்
UNIT Education
16/1, Killnar Lane,
Jaffna.

Free Course Material

15 மாணவர்கள் மாத்திரம் அனுமதிக்கப்படுவர்

100% JOB ASSISTANCE
Next Batch starts on 15/04
இதில் Admission எடுப்பவர்களுக்கு 50% பயிற்சிக்கட்டண கழிவு வழங்கப்படும்

100% Field Training

Near Jaffna Hindu College,Opp Lane to PandiKottu Pillayar Kovil, K.K.S. Road. Opp Lane to Velankanni Church, Kasthuriyar Road, Jaffna.



ஆடிப்பிறப்பை முன்னிட்டு.

**அராலி தெற்கு களவத்துறை விளையாட்டுக்கழகம் நடத்தும் 59 ஆவது ஆண்டுவிழா**

மாபெரும் மென்பந்து துடுப்பாட்டம், கரப்பந்தாட்டம் [சேற் அப் கேம்], வலைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி - 2006

- துடுப்பாட்டம் 7 பேர் பங்குபற்றும் 12 பந்துப் பரிமாற்றத்தைக் கொண்டதாக அமையும்.
- சகல போட்டிகளுக்கும் பதிவுக்கட்டணம் 200/= ரூபா (முற்பதிவுக்கட்டணம் உட்பட)
- விண்ணப்பப்படிவம் பெற்றுக்கொள்ளும்போது முற்பணமாக ரூபா 50/= செலுத்தவேண்டும்.
- பதிவுகளின் இறுதி திகதி: 25/04/2006
- மேலதிக விவரங்கள் விண்ணப்பபடிவத்தில்.

**விண்ணப்பப் படிவம் கிடைக்கும் இடங்கள்.**

1. இந்திரன் ஹாட்வெயர் - கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
2. திலகா ஸ்ரோர்ஸ் - அராலி தெற்கு
3. S.T.R மல்ரி சென்ரர் - இல. 45, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.
4. Free Birds தொலைத்தொடர்பகம் - மானிப்பாய் வீதி, ஆறுகால் மடம், ஆனைக்கோட்டை.
5. ஒளிக்கதிர் அழகுமாடம் - தெல்லிப்பழை வீதி, வட்டுக்கோட்டை (சங்கரத்தைச்சந்தி). (49151)
6. சுதா கிரபிக்ஸ் - சித்தன்கேணி சந்தி. (24-11-45)

களவத்துறை விளையாட்டுக் கழகம், அராலி தெற்கு. - தலைவர்.



# 14ஆம் ஆண்டு நினைவலைகள்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 10 | 15 |
| 05 | 03 |
| 1926 | 1992 |

**அமரர் காசிப்பிள்ளை சபாரத்தினம்**

திதி: 10.04.2006

பரிவோடு எம்மை வளர்த்து
பாசமாய் அரவணைத்த பப்பாவே!
காலமெல்லாம் எமைவிட்டுப் போனதேனோ?
கண்ட கனவுகள் நனவாகும் முன்னே
காலனவன் சடுதியாய் அழைத்தானோ?

சுன்னாகம் தெற்கு, சுன்னாகம்.
(49161) (24-11-45)

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.





# கிறீன் பலஸ் எம்போறியம்


யாழ் நகரில் குறைந்த விலையில்
நிறைந்த ரகங்கள்! நிகரில்லாத தரங்கள்! அழகிய
புடைவைத் தினுசுகளின் குளிரூட்டப்பட்ட சாம்ராஜ்யம்

பலாலி வீதி, திருநெல்வேலிச் சந்தி, திருநெல்வேலி.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலாம்பிகா சமேத ஸ்ரீவைத்தீஸ்வரன் கோயில்
# ப்புமலர் - 10.04.2006


புதிதாக நிர்மாணிக்கப்பட்ட சித்திரத்தேர்

**வைத்தீஸ்வரர் தேர்**
ரும் வாழ்தையலாம்பிகையும் எண்ணிறைந்த
கண்ணாம்
யருளம்
நேர்ந்து.
*முதுபெரும் புலவர் வை.க. சிற்றம்பலம்*

## ரதோற்சவம்

சுவாமி மகோற்சவத்தின 18 ஆம் நாள் பஞ்ச ரதோற்சவம் நடைபெறும். அன்று விநாயகர், சுப்பிரமணியர், அம்பாள், சண்டேஸ்வரர் ஆகிய மூர்த்திகளுடன் ஸ்ரீ சோமாஸ் கந்தப் பெருமான் வசந்த மண்டபத்தில் காட்சி கொடுப்பார். பின்னர் மேற்சொன்ன பஞ்ச மூர்த்திகள் ஐந்து தேர்களில் வீதிவலம் வருவர். மாலை நடைபெறும் உள் வீதி உற்சவத்துடன் சோமாஸ்கந்தரின் உற்சவம் நிறைவடையும்.

கோயில் கட்டப்பட்ட காலம் தொடக்கம் நடைபெற்று வந்த பஞ்சரத பவனியில் வலம் வரும் தேர்கள், திருவிழா ஆரம்பித்த காலங்களில் மாதக் கணக்கில் திறமை மிக்க ஆச்சாரியர்களால் நெடுந்தோங்கிய உயரங்களில் அமைக்கப்படுகின்ற கட்டுத் தேர்களாகும். ஆலயத்தின் மூன்றாம் வீதியால் சுற்றிவரும் கட்டுத் தேர்களில் உச்சப் பகுதி யாழ் நகரில் பெரும் பகுதிகளிலிருந்தும் பார்க்கக் கூடிய கண் கொள்ளாக் காட்சியாக விளங்கியது.

1987 ஆம் ஆண்டில் யாழ்நகருக்கு வந்த இன்னல்களை தன்மேல் தாங்கி ஸ்ரீலங்கா இராணுவத்தினர் நடத்திய தாக்குதலுக்கு வண்ணை வைத்தீஸ்வரன் கோயில் இலக்கானது. அச்சமயத்தில் ஏற்பட்ட சேதங்களின் போது இந்த பழம் பெரும் தேர்களும் முற்றாகச் சேதமடைந்தன. அக்காட்சி இன்றைக்கும் மனதை விட்டு அகலாத அகோரக் காட்சிகளில் ஒன்றாகும்..

வைத்தீஸ்வரனினதும் தையல் நாயகியினதும் அனுக்கிரகத்துடன்-விடாமுயற்சியுடன்-தெய்வநம்பிக்கையுடன் வைத்தீஸ் வரனுக்கு தேர்கள் அமைக்க எண்ணிய கந்தப்பச் செட்டியார் அவர்களால் உருவாக்கப்பட்ட இரண்டாவது சித்திரத்தேர் வெள்ளோட்டம் கண்டு இன்று ரத பவனியில் சோமாஸ்கந்த மூர்த்தத்தைத் தாங்கி வர இருப்பது இறைவனின் மேல் எமக்குள்ள நம்பிக்கையை இன்னும் வளர்க்கின்றது என்பது யதார்த்தமானது. இங்கு குறிப்பிட வேண்டிய விடயம் யாதெனில் 1987 இல் ஏற்பட்ட சேதங்களுக்கான நஷ்ட ஈடுகள் ஏதும் கிடைக்கப்பெறாத கட்டத்தில் வைத்திலிங்கம் செட்டியார், கந்தப்பச்செட்டியாரின் தனி முயற்சியினால் உருவாகத் தொடங்கிய இந்த இரண்டாவது சித்திரத் தேர் இன்று குறுகிய காலத்துள் முழுமை பெற்று இன்று பவனி வர இருப்பது எம் பெருமான் வைத்தீஸ் வரனின் அருள் பாலிப்பைப் புலப்படுத்துகின்றது இந்த உண்மை எமது மனதை நிறைவடையச் செய்கிறது. அடியார்கள் பஞ்சரத பவனியில் வாலாம்பிகை சமேத வைத்தீஸ்வரனின் அனுக்கிரகங்களைப் பெற அவரைப் பிரார்த்திக்கின்றேன்.

*சிவனடியான்.*

### தரமுடை வாழ்விந்தத் தரணியில் அருள்வாய்

*பல்லவி*

வரமருள்வாய் வண்ணை வயித்தீசா - திரி
புரமதை எரிசெய்த புண்ணி மூர்த்தியே
(வரம)

*அநுபல்லவி*

கரமணி சூலாலென் கடுவினைகள் களைந்தே
தரமுடை வாழ்விந்தத் தரணியில் நானடைய
(வரம)

*சரணம்*

தையல்வா லாம்பிகையாள் தனையிடங் கொண்டவனே
பொய்யிலா அருள்வாரி பூதலத் தருள்பவனே
உய்வதே உலகெய்த உயர்வண்ணையமர்ந்தவனே
செய்யசீர் திருவடியைச் சேவித்தேன் மனமிரங்கி
(வரம)

*இராசையா குகதாசன்*


**த.குமாரசாமி**
**ரெக்ஸ் ரைல்ஸ்**
44, 42, பெரியகடை,
யாழ்ப்பாணம்.
T.P: 222 2985

சிறந்த நவீன வடிவமைப்பிலான மூக்குக் கண்ணாடி வகைகளுக்கு நாடுங்கள்:
**எரிக்கணேஸ்**
ERIC GANESH OPTICIANS
இல.564, 566, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே:021 222 2486

உத்தரவாதம் மிக்க நவீன அழகிய தங்கப் பவுண் நகைகளுக்குச் சிறந்த ஸ்தாபனம்
**சிறி சிவாஞ்சனா நகையகம்**
149 A, கஸ்தூரியார் வீதி,யாழ்ப்பாணம்.தொ.பே.: 021 222 5481.

மூலிகைகளாலான மருந்து வகைகளுக்கும் எண்ணெய் வகைகளுக்கும் மற்றும் பொருள்களுக்கும் நாடுங்கள்:
**சிவா நறுமணப் பூங்கா**
288, ஆஸ்பத்திரி வீதி,யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 222 2567

அழகுக்கு அழகு தரும் நவ நாகரிக ஆடைகளுக்கு நம்பகமான ஸ்தாபனம்.
அழகுமிக்க காவேரிக்கு விஜயஞ் செய்யுங்கள்
**காவேரி சில்க்ஸ்**
இல. 48, பெரிய கடை, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 222 2888

அன்பளிப்பு, அழகுசாதன, இலத்திரனியல் பொருள்கள் விற்பனையாளர்
**டாட் என்ரப் பிறைஸ்**
இல. 11,12, நவீன சந்தை(உட்புறம்), யாழ்ப்பாணம்.
தொ.பே: 3098, 7622
பிரத்தியேகக் காட்சியறை
இல. 2,நவீன சந்தை (மேல்மாடி),
மக்கள் வங்கிக்கு அருகில் யாழ்ப்பாணம்.

தங்க நகைகளுக்கு தரம் மிக்கோர் தவறாமல் நாடுமிடம் மிகப் பழைமை வாய்ந்த நம்பிக்கையான ஸ்தாபனம்
**பொ.அம்பலவாணர் நகைமாளிகை**
இல.119, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.:2264

**சிவன் மோட்டார் ஸ்ரோர்ஸ்**
SIVAN MOTOR STORES
70/1, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 2765

உங்களுக்குத் தேவையான மருந்து வகைகளைப் பெற்றுக் கொள்ள சிறந்த இடம்:
**பிரபா பார்மஸி**
இல.315, ஸ்ரான்லி வீதி(நாகவிகாரையடி)
ஆரியகுளம் சந்திக்கு அருகில்,யாழ்ப்பாணம்.
தொ.பே.:021 4590463


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சீனிக்கப்பல் பருத்தித்துறைத் துறைமுகம் வருகின்றது!

இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட சீனி பருத்தித்துறை துறைமுகத்திற்கு வருகின்றது. தேவையானோர் கீழ்க்காணும் முகவரியில் தொடர்புகொள்ளவும்.

தொடர்புகளுக்கு: ஈஸ்வரபகவான் அன் கம்பனி
இல.91/1, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.இல.: 222 2350, 222 7603

(49169)
(24-17-14)


## நினைவுச் சுவடுகள் நாளை வெளியீடு

யாழ்ப்பாணம்,ஏப்.10

கவிஞர் சோ.பத்மநாதனின் 'நினைவுச் சுவடுகள்' என்னும் கவிதைத் தொகுப்பு வெளியீட்டு விழா நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. பேராசிரியர் அ.சண்முகதாஸ் தலைமையில் இடம் பெறும் இந்நிகழ்வில் பேராசிரியர் சி.சிவலிங்கராஜா வெளியீட்டுரையையும் திருமதி கோகிலா மகேந்திரன், பா.அகிலன் ஆகியோர் ஆய்வுரைகளையும் நிகழ்த்துவர். (3) (24)


## கண்ணீர் அஞ்சலி

எமது சங்கத்தின் அங்கத்தவரும் முன்னாள் பொருளாளருமாகிய **மு.கந்தையா** அவர்கள் 07.04.2006 இல் காலமானதையிட்டு எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்தி அவரின் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மாவைக் கந்தன் சிக்கனக் கடனுதவு சங்கம்,
மாவிட்டபுரம்.

(49165)
(24-17-14)



அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்

770 சிவப்பு

துலாம்

07-04-2006

செல்லுபடியாகும் தொடர் இல. 5109637-5124359

வெற்றி இலக்கங்கள் **05 30 37 48**

ஜக்பொட் பரிசு ரூபா 10,00,000/- வெல்லப்பட்டுள்ளது

மொத்தப் பரிசுத் தொகை ரூபா 80,10,200/-
தொடர் இல. 4204068 க்கு மேற்பட்ட நீல நிற டிக்கெட்டுக்கள் 2006 ஏப்ரல் 11 ஆம் திகதி செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கெட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்.

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்தப் பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 3,24,289 | 10/- | 32,42,890/- |
| 2 இலக்கங்கள் | 29,791 | 20/- | 5,95,820/- |
| 1 இல+லக்கினம் | 29,398 | 30/- | 8,81,940/- |
| 2 இல+லக்கினம் | 2,698 | 100/- | 2,69,800/- |
| 3 இலக்கங்கள் | 785 | 500/- | 3,92,500/- |
| 3 இல+லக்கினம் | 75 | 5,000/- | 3,75,000/- |
| 4 இலக்கங்கள் | 2 | 1,00,000/- | 2,00,000/- |
| 4 இல+லக்கினம் | 1 | 10,00,000/- | 10,00,000/- |
| மொத்தம் | | | 69,57,950/- |
| முச்சக்கர வண்டிகள் | 5 | 2,10,450/- | 10,52,250/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 3,87,044 | | 80,10,200/- |

இந்த செவ்வாய்க்கிழமை ரூபா 10,00,000/-

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கெட்டுக்களில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 05 டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| கொழும்பு | 5124104-7-78 |
| மாத்தறை | 5111478-8-80 |
| பொலன்னறுவை | 5120523-8-96 |
| குருநாகல் | 5118236-6-66 |
| கேகாலை | 5117433-6-05 |

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி
கொள்ளுப்பிட்டி, கொழும்பு-03


## பதிவுகளை மேற்கொள்ள அறிவுறுத்து

தென்மராட்சி,ஏப்.10

தென்மராட்சி தெற்கு தனங்களப்பு, மறவன்புலோ ஆகிய பகுதிகளில் நெல் வயல்கள் உள்ளோர் வயல் பற்றிய விவரங்களை இதுவரை பதிவுசெய்யாதோர் நாளை மறுதினம் கைதடி கமநலசேவைகள் நிலையத்தில் பதிவினை மேற்கொள்ளுமாறு பெரும்பாக உத்தியோகத்தர் கேட்டுள்ளார்.(3-117) (24)

## சுகாதாரம்பேணும் நடவடிக்கை

சாவகச்சேரி பிரதேச சபை நிர்வாகப் பிரதேசத்தில் சுகாதார நடவடிக்கைகளைப் பேணவும் குடிதண்ணீரைப் பாதுகாக்கவும் பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் பொருள்களைக் கண்ட கண்ட இடங்களில் வீசுவதைத் தடுக்கவும் சாவகச்சேரி பிரதேச சபை நிர்வாகம் நடவடிக்கைகளைமேற்கொண்டுள்ளது என சாவகச்சேரிப் பிரதேச சபைச் செயலாளர் கு.ந.பாலச்சந்திரன் தெரிவித்தார். (3-31)




சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு மலிவு விற்பனையும் அன்பளிப்பும்

★ குழந்தைகளுக்கான நற்பின் பம்பஸ் வகைகள்
★ குழந்தைகளுக்கான Johnson baby தயாரிப்புகள்
★ குழந்தைகளுக்கான பால்மா செறலக் வகைகள்
★ குழந்தைகளுக்கான வோக்கர், கட்டில், சொகுசு மெத்தைகள்
★ பிரசவத் தாய்மாருக்கான பொருள்கள்
★ அனைத்து ஆங்கில மருந்து வகைகள்
★ இலங்கையிலேயே முதல்தரமான வைத்தியர்களால் சிபார்சு செய்யப்படுகின்ற

யாழ். பேபி நீட்ஸ் அன் பார்மசி ஸ்தாபனத்தில் கொள்வனவு செய்யும் குழந்தைகளின் உடுபுடைவைகளுக்கு - தரமான குழந்தைகளின் விளையாட்டுப் பொருள்களும் முந்துங்கள். கையிருப்பு உள்ளவரை மட்டுமே.

'Walkrite' ஸ்தாபனத்தாரின் நடக்க முடியாதவர்கள் பாவிக்கக்கூடிய வீல் செயர் (Wheel Chair) Walking Sticks மற்றும் உபகரணங்கள் மலிவு விலையில் பெற்றுக்கொள்ள ஒரே ஸ்தாபனம்.



யாழ்.பேபி நீட்ஸ் அன் பார்மசி
388, ஆஸ்பத்திரி வீதி
(பஸ் நிலைய வைரவர் கோயில் முன்பாக),
யாழ்ப்பாணம்.

(49176)
(24-17-14)



வடமராட்சி மக்களுக்கோர் அரியவாய்ப்பு!




துரித கதியில் அழுக்கினைப் போக்கி,
ஆடைகளிலுள்ள கறையினை அகற்றி
நறுமணம் தரும் Surf Excel 20 g பைக்கற்று
இரண்டு வாங்கினால் ஒன்று இலவசம்.
இச்சலுகை யாழ். குடாநாட்டிலும்
வன்னிப் பெருநிலப்பரப்பிலுமுள்ள
அனைத்து சில்லறை விற்பனை
நிலையங்களிலும் கிடைக்கும்.
பாவனையாளர்களே!
உங்கள் தெரிவுக்கு முந்துங்கள். இச்சலுகை
கையிருப்பு உள்ளவரை மட்டுமே.
Surf Excel unilever Srilanka Ltd இன்
ஒரு தயாரிப்பு

விநியோகஸ்தர்கள்:

**S.V.முருகேசு,**
154, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
021 222 2202

**ஸ்ரீ விக்னேஸ்வரா களஞ்சியம்**
148, கண்டி வீதி, சாவகச்சேரி.
060 2212257

**தும்பிக்கையான் களஞ்சியம்**
117, கண்டி வீதி, கிளிநொச்சி.
021 228 5840

இரண்டு பைக்கற்றுகள் வாங்கினால் ஒன்று இலவசம்

(49182)
(24-17-14)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இரண்டாம் கட்டப் பேச்சில் முஸ்லிம்களை தனித்தரப்பாகப் பங்கேற்க அழையுங்கள்!

## அம்பாறை பள்ளிவாசல் சம்மேளனம் தேசியத் தலைவருக்குக் கடிதம்

அம்பாறை,ஏப்.10

ஜெனீவாவில் நடைபெறவுள்ள இரண்டாம் கட்டப் பேச்சுகளில் முஸ்லிம்கள் தனித்தரப்பாகப் பங்கேற்க அழைப்பு விடுக்குமாறு தேசியத் தலைவர் வே.பிரபாகரனிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்ட அனைத்துப் பள்ளிவாசல்கள் சம்மேளனம் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளது. மேற்படி சம்மேளனத்தின் சார்பில் அதன் தலைவர் மௌலவி எஸ்.எஸ்.எம்.ஹனீபா இது தொடர்பான விரிவான கடிதம் ஒன்றை தேசியத் தலைவருக்கு அனுப்பிவைத்துள்ளார்.

அந்தக் கடிதம் வருமாறு:-

இனிய தமிழ் அன்னையின் என் உடன் பிறவா சகோதரனுக்கு நான் மனம் திறந்து எழுதும் தீர்வு மடல் இது.

உங்கள் மீதும் என்மீதும் நம் எல்லோர் மீதும் புரிந்துணர்வும் சமாதானமும் தோன்ற இறைவனைப் பிரார்த்தித்தவனாகவும், பிறக்கவிருக்கும் புதுவருடத்துக்கான வாழ்த்துக்களை முன்கூட்டியே தெரிவித்தவனாகவும் என் உணர்வுகளை உங்களோடு பகிர்ந்து கொள்ள விரும்புகின்றேன்.

இத்தேசம் தேடிக்கொண்டிருக்கும் சமாதானத்தின் மீது கொண்ட மிகுந்த கரிசனையினதும், கடந்த 29.03.2006 ஆம் திகதி சாய்ந்தமருது ஜும்ஆ பெரிய பள்ளிவாசலில் நடைபெற்ற கிழக்கு மாகாண பள்ளிவாசல்கள் சம்மேளனக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தினதும் வெளிப்பாடே இக் கடிதம்.

தமிழ்பேசும் மக்களின் தாயகமான வடக்கு-கிழக்கு மண்ணில் தமிழர்களும் முஸ்லிம்களும் சகோதர வாஞ்சையோடும் சமாதான மேலுணர்வோடும் வாழ்ந்து வந்த வரலாறு பல நூற்றாண்டுகள் பழமை மிக்கது. இந்த யதார்த்தத்தில் நாம் அனைவரும் உடன்படுகின்றோம். தமிழ், முஸ்லிம் இனங்களுக்கிடையில் இருந்து வந்த கலாசாரப் பிணைவுகள் இன்றும் இதனைச் சான்றுப்படுத்திக் கொண்டிருக்கின்றன.

### சமாதானத்தில் கரும்புள்ளிகள்

தமிழ் பேசுவோரின் தாயகமான அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை, வவுனியா போன்ற மாவட்டங்களில் சிங்கள மேலாதிக்கவாதிகளினால் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட குடியேற்ற நடவடிக்கையும், தமிழ்மொழிப் புறக்கணிப்பும், சமமற்ற பங்கீடும் சுதந்திரத்துக்குப் பிற்பட்ட காலப்பகுதிகளில் எம்மண்ணின் சமாதானத்தில் கரும்புள்ளிகளைத் தோற்றுவிக்கக் காரணமாய் இருந்தவை என்பதை நாம் அறிவோம்.

வடக்கு - கிழக்கு மண்ணில் பெரும்பான்மையாய் வாழ்ந்து வரும் தமிழ் மக்களைச் சிறுபான்மைப்படுத்துவதற்காகச் செயற்பட்டு வந்த அரசின், இன ஒதுக்கலுக்கெதிரான போராட்டத்தைக் கொச்சைப்படுத்தக் கூடாதென்பதில் முஸ்லிம் இளைஞர்களும் முனைப்புடன் செயற்பட்டுவந்தனர் என்பதைத் தாங்களும் அறிவீர்கள்.

இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக நடைபெற்றுவரும் உரிமைக்கான யுத்தத்தின் ஆரம்ப காலம் தொட்டே முஸ்லிம் இளைஞர்கள் காட்டிய ஒத்துழைப்பும், புரிந்த தியாகங்களும் தமிழீழத்துக்கான போராட்ட வரலாற்றுப் பக்கங்களில் பதிவு செய்யப்பட்டிருக்கும் என்பதை நான் திடமாக நம்புகின்றேன்.

### இன ஒதுக்கலுக்கு எதிரான போரில் முஸ்லிம்களின் பங்கு

சிங்கள பெரும்பான்மையினது இன ஒதுக்கலுக்கெதிரான போராட்டத்தில் தமிழ் போராளிகளின் பங்கு தன்னிகரில்லாதது என்பதில் இரண்டாம் பட்சமான கருத்துக்கு இடமில்லை. இருப்பினும் முஸ்லிம்களுக்கு இப் போராட்டத்தில் முற்றுமுழுதாகப் பங்கில்லை என்று ஒதுக்கிவிடவும் முடியாது. யுத்தத்தின் பிடிக்குள் சிக்குண்டு தமிழ்ச் சமூகம் அனுபவித்துக்கொண்டிருக்கின்ற அவஸ்தைகளைப் பட்டியல்படுத்தினால் உலகத்தில் அதுவே ஒரு பெரிய பட்டியல் என்ற பெயரைத்தட்டிக் கொள்ளும்.

களமிறங்கிப் போராடிய தமிழ் இளைஞர்களின் இழப்பும், தமிழ் மக்களின் சமூக பொருளாதார பாதிப்புக்களும் அதிகமதிகம். இருப்பினும் அண்மைக்காலக் கணிப்பீடுகளின்படி முஸ்லிம்களும் இந்த யுத்தத்தால் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதை அவதானிக்க முடிகிறது. முஸ்லிம்கள் தரப்பில் ஏழாயிரத்துக்குமதிகமான உயிரிழப்புக்களும் எட்டாயிரம் கோடி ரூபாய்க்கும் அதிகமான பெறுமதிமிக்க பொருளாதார நஷ்டங்களும் ஏற்பட்டிருப்பதோடு பயிர்செய்கை, பண்ணை வளர்ப்புபோன்ற விவசாய நடவடிக்கைகளிலும் ஈடுபடமுடியாத நிலைக்குள்ளாக்கப்பட்டிருப்பதும் இனங்காணப்பட்டுள்ளது.

இருபது வருடங்களுக்கு மேலாகத் தமிழ் பேசும் சமூகம் அனுபவித்துக்கொண்டிருக்கும் இன்னல்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கக் கூடிய நாள் இன்று வராதா? நாளை வராதா? என்ற ஏக்கம் மட்டும் தான் எம்மோடு மிஞ்சி இருக்கிறது.

எமது ஏக்கத்தைப் போக்கு நோக்கோடு கடந்த 2002ஆம் வருடத்தில் சமாதானப் பேச்சுக்கான அடித்தளம் மீண்டும் போடப்பட்டு உங்களுக்கும் - ஸ்ரீலங்கா அரசுக்கும் இடையில் யுத்தநிறுத்த ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. மேற்படி சமாதான பேச்சுக்கான அத்திபாரம் இடப்பட்ட நாளில் இருந்து பேச்சு மேசையில் முஸ்லிம்களும் தனித்தரப்பாகப் பங்குபற்ற வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டு வந்தது.

துரதிஷ்டவசமாக யாழ்ப்பாணத்திலிருந்து முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டமை, பள்ளிவாசல்களில் தொழுகையின் போது முஸ்லிம்கள் படுகொலை செய்யப்பட்டமை, மாகாணசபை மட்டத்தில் இடம்பெறுகின்ற முஸ்லிம்கள் சார்பான மாற்றாந்தாய் மனப்பான்மை போன்ற சம்பவங்கள் முஸ்லிம்களின் தனித்தரப்புக் கோரிக்கையை அவர்கள் மத்தியில் மேலும் கூர்மைப்படுத்தி இருப்பதனை உணரக்கூடியதாகவிருக்கிறது. ''ஒரு சிறுபான்மை இனத்தவரால் தான் இன்னொரு சிறுபான்மை இனத்தவரின் உணர்வுகளைப் புரிந்து கொள்ள முடியும்'' என்ற கோட்பாட்டை மிகுந்த எதிர்பார்ப்புடன் இத்தருணத்தில் உங்கள் முன் நினைவுபடுத்துகின்றேன்.

பேச்சு மேசையில் முஸ்லிம்கள் தனித்தரப்பாகப் பங்குபற்ற வேண்டும் என்ற கோரிக்கையை இனவாதப் போக்கற்ற எல்லோரும் ஏற்றுக்கொண்டிருக்கின்றனர். சமாதானப் பேச்சையே விரும்பாத இனவாதக் கட்சிகளான மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.), ஹெல உறுமய தவிர்ந்த ஏனைய சிங்களவர்களும் மற்றும் இங்கு இணைந்து வாழும் தமிழ் மக்களும் முஸ்லிம்கள் தனித்தரப்பாகப் பங்கு கொள்வதில் சம்மதம் மிக்கவர்களாக உள்ளனர் என்பதை உங்கள் கவனத்துக்குக் கொண்டுவருகின்றேன்.

சமாதானத்திற்காக சதாவும் பிரார்த்தித்துக் கொண்டிருக்கும் எங்களது நியாயமானதும் உருக்கமானதுமான வேண்டுகோளைக் கவனத்தில் எடுத்துத் தமிழைத் தாய் மொழியாகக் கொண்டு கலாசார, மத வழிபாடுகளில் பிரத்தியேக அடையாளங்களை கொண்டுள்ள முஸ்லிம்களை பேச்சு மேசையில் தனித்தரப்பாக அங்கம் பெற ஆவன செய்வீர்கள் என்ற எதிர்பார்ப்பு எம் மத்தியில் மிகப்பலம் பெற்றிருக்கிறது என்பதை தங்களுக்குத் தெரியப்படுத்துகிறேன்.

### வீரத் தலைவன் நீங்கள்

விடுதலைப் புலிகளின் வீரத்தலைவனாக விளங்கும் நீங்கள் பெருமனம் கொண்டு இவ்விடயத்தில் முன்னுதாரணமாக நடந்து கொள்வீர்கள் என்ற நம்பிக்கையோடு உங்களிடம் இருந்து பதிலை எதிர்பார்க்கிறேன். எதிர்வரும் பேச்சு மேசைக்கு முஸ்லிம்களையும் தனித்தரப்பாய் அழைப்பீர்கள் அதனூடே சமாதானத்தை வளர்ப்பீர்கள் என்ற மிகுந்த எதிர்பார்ப்போடுதான் என் பேனா உங்களோடு இதுவரையும் பேசிக்கொண்டிருந்தது. ஆம் இம் மண்ணில் வாழும் அனைத்து முஸ்லிம்களினதும் உணர்வுகளையும் மையமாகக் கொண்டுதான் இம்மடல் வரையப்பட்டிருக்கிறது.

நிறைந்த வேலைப்பளுவுக்கு மத்தியில் இருக்கும் உங்களது பதிலை ஜெனீவாவில் நடக்கவிருக்கும் பேச்சு தினமான ஏப்ரல் மாதம் பத்தொன்பதிற்கு முன் நன்றியுடன் எதிர்பார்க்கிறேன். வரலாற்று முக்கியத்துவம் மிக்க இப் பணியை மேற்கொள்வதற்கான ஆரோக்கியத்தையும் ஆன்ம பலத்தையும் எல்லாம் வல்ல இறைவன் உங்களுக்கு வழங்க வேண்டும் என்ற பிரார்த்தனையோடு விடை பெறுகிறேன் - என்று அதில் உள்ளது.

(எ)(18-26)

# மாமனிதர் விக்னேஸ்வரன் படுகொலைக்கு பொது அமைப்புகள் கடும் கண்டனம்

யாழ்ப்பாணம், ஏப்.10

திருமலை தமிழ் மக்கள் பேரவையின் தலைவர் விக்னேஸ்வரன் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தை பொது அமைப்புகள், வங்கியாளர் சங்கங்கள் வன்மையாகக் கண்டித்துள்ளன.

இது தொடர்பாக மேற்படி பொது அமைப்புகள் விடுத்த செய்திக் குறிப்புகளில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

### கிளிநொச்சி மாவட்ட வெகுசன அமைப்புகளின் ஒன்றியம்

ஸ்ரீலங்கா இராணுவ புலனாய்வுத் துறையினரும் அவர்களுடன் செயற்படும் ஒட்டுக் குழுவினரும் இணைந்து திருகோணமலை தமிழ் மக்கள் பேரவைத் தலைவரும் தமிழ் தேசியப்பற்றாளருமாகிய வ.விக்னேஸ்வரன் அவர்களை படுகொலை செய்தமை தமிழ் மக்கள் மத்தியில் பெரும் கவலையை ஏற்படுத்தியுள்ளது. அதேவேளை- கொந்தளிப்பு நிலையினையும் உருவாக்கியுள்ளது. தமிழ் மக்களின் குரலாக ஓங்கி ஒலித்த உரிமைக்குரலினை அணைத்து விடுவதன் மூலம் சிங்களப் பேரினவாதம் தனது பேரினவாதப் போக்கினை தமிழ் மக்கள் மீது திணிக்கலாம் எனக் கனவு காண்பது பாரதூரமான விளைவுகளையே ஏற்படுத்தும்.

ஜெனீவாப் பேச்சுகள் நடைபெறவுள்ள இவ் வேளையில் இந்தப் படுகொலையானது பல்வேறு சந்தேகங்களையும் ஊகங்களையும் ஏற்படுத்தியுள்ளது. தமிழ் மக்கள் ஜெனீவாப் பேச்சுகளை புறக்கணிக்கக்கூடிய புறச்சூழலையே இப்படுகொலை ஏற்படுத்தியுள்ளது.

ஒட்டுக்குழுக்களின் ஆயுதக்களைவை உதாசீனம் செய்து ஜெனீவாப் பேச்சு உடன்பாட்டில் இருந்து அரசு விலகியமையே இப் படுகொலைக்கு வெளிப்பாடு என நாம் கருதுகின்றோம். இப்படுகொலை வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டியது.

### வெகுஜன அமைப்புகளின் ஒன்றியம் வவுனியா மாவட்டம்

தமிழீழத் தலைநகரில் மீண்டுமொரு தமிழ்த் தேசியப் பற்றுள்ள தமிழ் மக்களுக்காக குரல்கொடுத்த திருகோணமலை மாவட்ட தமிழ்மக்கள் பேரவையின் தலைவர் வி.விக்னேஸ்வரன் அவர்களின் கொலை இராணுவ கடற்படையின் மிகக்கடுமையான பாதுகாப்புப் பிரதேசத்திற்குள் வைத்து இடம்பெற்றுள்ளது. இதனை நாம் இராணுவத்தின் திட்டமிட்ட செயற்பாடாக கருதுகின்றோம். இதனை மிகவன்மையாகக் கண்டிக்கின்றோம்.

வ.விக்னேஸ்வரன் திருகோணமலை தமிழ் மக்கள் பேரவையின் தலைவர். நீண்ட காலமாக தேசிய உணர்வுடன் செயற்பட்டவர். இதனால், அவரின் வீட்டுக்கு பலதடைவைகள் கைக்குண்டு வீச்சுக்களும் உயிருக்கு அச்சுறுத்தல்களும் விடுக்கப்பட்ட போதிலும் திருகோணமலைத் தமிழர்களின் ஒருங்கிணைப்புக்கும், ஒற்றுமைக்கும் முன்னின்று உழைத்தவர். தாயகம் தழுவிய தாயகக் கோட்பாட்டை முதன்மைப் படுத்தி நடத்தப்பட்ட வவுனியா பிரகடன மாநாட்டுக்குத் தலைமைப் பொறுப்பேற்று நடத்தியவரும் இவரே.

''விக்கி அண்ணா'' என்று எல்லோராலும் சிறப்பாக அழைக்கப்பட்ட இவர், பதவிகளும் பட்டங்களும் விரும்பாத ஒருவராவார். தேசப்பற்றுமிக்க ஒரு மனிதத்தின் படுகொலையினை வவுனியா மாவட்ட மக்களாகிய நாம் வெகுசன அமைப்புகளின் ஒன்றியம் ஊடாக மிக வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

### விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்க சமாசம்

தமிழ்த் தேசியத்தின் விடுதலைக்காக தமது வாழ்நாளை அர்ப்பணித்த விக்னேஸ்வரன் சுட்டுக்கொல்லப்பட்டதை வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

ஜனநாயக ரீதியாக செயற்பட்ட விக்னேஸ்வரன், திருகோணமலையினதும் கிழக்கு மாகாணத்தில் தமிழ் மக்கள் இனவன்முறைக்கு ஆளானபோதெல்லாம் துணிந்து குரல்கொடுத்தவர்.

தனது உயிருக்கு ஆபத்து எப்போதும் சாது இனவிடுதலைக்கு குரல் கொடுத்து வந்துள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த [illegible] தமிழ் மக்களின் அரசியல் உரிமையை அங்கீகரித்து தீர்வை முன்வைக்க வேண்டும். எனவே, திருமலையில் பட்டப்பகலில் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட காட்டுமிராண்டிச் செயல் தமிழ் மக்களை கொதித்தெழச் செய்துள்ளது.

நிச்சயம் இதன் எதிர்விளைவு பெரிதாக இருக்கும் - என்று யாழ். மாவட்ட விவசாய கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் தெரிவித்துள்ளது.

### ஊர்காவற்றுறை பல.நோ.கூ சங்கம்

திருமலை மாவட்ட தமிழ் மக்கள் பேரவைத் தலைவரும் தமிழ்த் தேசிய பற்றாளருமாகிய விக்னேஸ்வரன் படுகொலை செய்யப்பட்டதை ஊர்காவற்றுறை பல நோ.கூ. சங்க பணியாளராகிய நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

திருமலையில் சிங்கள பேரினவாதிகளின் இன வெறி ஆக்கிரமிப்புக்கு எதிராக துணிச்சலோடு குரல் கொடுத்து தமிழ்த் தேசியத்துக்காக கடுமையாக உழைத்த தமிழ்த் தேசிய பற்றாளரான விக்னேஸ்வரனை இராணுவத்தினரும் அவர்களுடன் சேர்ந்து இயங்கும் ஒட்டுப்படைகளுமே படுகொலை செய்துள்ளனர்.

மனித நாகரிகமற்ற இந்தக் கொடூரக் கொலையை வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

### இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்

இந்தப் படுகொலையானது ஜனநாயக ரீதியாகவும் அகிம்சை முறையிலும் விடுதலைப்போராட்டத்தை முன்னெடுப்போரை ஆயுதம் கொண்டு அழித்தொழிக்கும் கொடூரமான ஜனநாயக விரோத செயல் மட்டுமல்ல, ஜனநாயக செயற்பாடுகளுக்கு அடிக்கப்படும் சாவு மணியாகும்.

மேலும், அரச உச்சப்பாதுகாப்புக்கும் இலங்கை வங்கியின் பிராந்திய அலுவலகத்துக்கும் மத்தியில் கடமை நேரத்தில் நடைபெற்றிருக்கும் இப்படுகொலை அரச உத்தியோகத்தர், உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் திணைக்களங்களில் கடமையாற்றும் தமிழ் ஊழியர்களின் பாதுகாப்புக்கு விடுக்கப்பட்டுள்ள பாரிய அச்சுறுத்தலாகும்.

இக்கொலையில் சம்பந்தப்பட்டவர்களை அரசு கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்தி ஜனநாயக குரல்களை பாதுகாப்பதோடு கூட்டுத்தாபன, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சுகள், திணைக்களங்களின் கடமையாற்றும் தமிழ் ஊழியர்களின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் அளிக்கவேண்டும் என்று தமிழர் ஆசிரிய சங்கம் கோரியுள்ளது.

### தீவக பொது அமைப்புகளின் ஒன்றியம்

மிலேச்சத்தனமான காட்டுமிராண்டித்தனமான படுகொலைகள் மூலம் தமிழ்த் தேசியத்தின் வலுவான உறுதியையும் ஒற்றுமையையும் சமாதானத்தையும் சிதைத்துவிட முடியாது என்பதனை சம்பந்தப்பட்டோர் உணரவேண்டும்.

தமிழத் தலைநகரான திருகோணமலையின் தமிழ்க் காவலன் தமிழ்மக்கள் பேரவைத் தலைவர்விக்னேஸ்வரன் படுகொலையானது - மிலேச்சத்தனமான- காட்டுமிராண்டித்தமான- கோழைத்தனமான- கஞ்சத்தனமான சிறிலங்கா அரசினரும் இராணுவத்தினரும் ஒட்டுப்படைகளினதும் கயமத்தனமான, வெறித்தனமானதுமான அதி உச்சப் பயங்கரவாதம் ஆகும்.

கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் போது திருகோணமலை தமிழ்த்தேசியத்திற்கு தந்தவெற்றியை பொறுக்க முடியாமையின் ஆற்றாமைதான் தமிழ்க் காவலன் விக்னேஸ்வரன் படுகொலையாகும். அமரர் அண்மைக் காலங்களில் தமிழ்த் தேசியத்திற்கு ஆற்றிய தொண்டினை நாம் எளிதில் மறந்துவிட முடியாது.

இவ்வாறான படுகொலைச் செயற்பாடுகள் இதுதான் முதற்தடைவையல்ல. சமாதானச் செயற்பாடுகள் தொடங்கிய காலம் முதல் சிறிலங்கா அரசும், இராணுவமும், ஒட்டுப்படைகளும் செய்து வந்த அநியாயமான அக்கிரமக் கொலைகளை, தமிழீழமும் சர்வதேசமும் நன்கு அறியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிறந்த நாள் வாழ்த்து



கிளிநொச்சி திருநகரில் வசிக்கும்
**முருகேசு இராசையா**
அவர்கள் இன்று (10-04-2006)
திங்கட்கிழமை தனது 75 ஆவது
பிறந்த நாளை அவரது இல்லத்தில்
வெகுவிமரிசையாகக்
கொண்டாடுகின்றார். அவரைப்
பல்லாண்டு காலம் வாழ்க வாழ்க
வாழ்கவென வாழ்த்துபவர்கள்:
மனைவி கண்மணி,
பிள்ளைகளான கனடாவில்
வசிக்கும் கலாமோகன் குடும்பம்,
ஜெயந்தா குடும்பம், பிரான்ஸில்
வசிக்கும் பாப்பா குடும்பம், தங்கா
குடும்பம், கென்சி குடும்பம்,
சுவிஸில் வசிக்கும் மதி குடும்பம்,
கிளிநொச்சியில் வசிக்கும் வேவி
குடும்பம், ஜெயா குடும்பம்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்
இவரை வாழ்த்துகின்றனர்.

**முருகேசு இராசையா**

இல.166,
திருநகர்,
கிளிநொச்சி.

(சி/48783)(26.17.14)

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 12 | 11 |
| 06 | 03 |
| 1942 | 2006 |



## திருமதி சின்னத்துரை நேசமணி
(லட்சுமி)

கடந்த 11.03.2006 அன்று காலமான எமது குடும்பத்தலைவியின் இறுதிக்கிரியையில் கலந்து கொண்டோருக்கும் அனுதாபச் செய்திகளை வழங்கியோருக்கும் சகல வழிகளிலும் உதவியும் ஒத்துழைப்பும் நல்கிய உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்வதுடன் இன்று 10.04.2006 திங்கட்கிழமை காலை நடைபெறும் அன்னாரின் ஆத்மசாந்தி பிரார்த்தனையிலும் தொடர்ந்துநடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கைதடி சந்தி
கைதடி

குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்



## குட்டித்தம்பி கார்த்திகேசு (AD)
(முன்னாள் வர்த்தகர்)

சந்தையடி ஒழுங்கை, மானிப்பாயைச் சேர்ந்த குட்டித்தம்பி கார்த்திகேசு அவர்கள் நேற்று (09-04-2006) ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற குட்டித்தம்பி-சின்னப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு புத்திரனும் காலஞ்சென்ற பார்வதிப்பிள்ளை, சதாசிவம், காலஞ்சென்ற கந்தசாமி, காலஞ்சென்ற கனகசபை, சுப்பையா, சின்னத்தம்பி ஆகியோரின் அன்புச் சகோதரரும் வைரவநாதன், செந்தில்நாதன், காலஞ்சென்ற விமலநாதன், கணேசதேவி, விஜயநாதன், இரகுநாதன் ஆகியோரின்பாசமிகு தந்தையும் ஜனனி, றஞ்சனி, குமரகுரு, கலாராணி, தர்மலதா ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆரணி, சயந்தன், ஞானரூபன், சியாமளன், மாதங்கி, சுகுணன், சுகிர்தன், விஷ்ணுகாந்த, துவாரகன், சுவாங் கர், மிருஷாணி, மதுராகன், அபிமன்யு ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10-04-2006) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தீகனக் கிரியைகளுக்காக காலை 9 மணியளவில் மானிப்பாய், பிப்பிலி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சந்தையடி, ஒழுங்கை,
மானிப்பாய்.
(49023)(26.17.14) **மனைவி, பிள்ளைகள்.**

# ஆசிரியர்களுக்கு பதவி உயர்வு

சாவகச்சேரி. ஏப்.10

தென்மராட்சி வலயக் கல்விப் பணிமனைக்குட்பட்ட பாடசாலைகளில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களில் இவ்வருடம் 91 ஆசிரியர்கள் பதவி உயர்வுகளைப் பெற்றுள்ளனர்.

தென்மராட்சி வலயக் கல்விப்பணிமனை அதிகாரிகள் இதனைத் தெரிவித்தனர்.

பதவிஉயர்வு பெற்ற ஆசிரியர்கள்:

வகுப்பு II தரம் I இற்கு உயர்வு பெற்றவர்கள்- 14 பேர்

வகுப்பு II தரம் II இற்கு உயர்வு பெற்றவர்கள்- 33 பேர்

வகுப்பு III தரம் I இற்கு உயர்வு பெற்றவர்கள் - 42 பேர்,

வகுப்பு III தரம் II இற்கு உயர்வு பெற்றவர்கள்- 02 பேர். (எ-31)(26)

# அம்பன் ஆஸ்பத்திரி மீண்டும் மக்கள் பாவனைக்கு

வடமராட்சி. ஏப்.10

அம்பன் அரசினர் வைத்தியசாலை திருத்த வேலைகள் பூர்த்தியடைந்துள்ளதை அடுத்து எதிர்வரும் புத்தாண்டுடன் திறந்து வைக்கப் படவுள்ளது.

நாகர்கோயில் உயர்பாதுகாப்பு வலயத்துடன் இணைக்கப்பட்டிருந்த இந்த வைத்தியசாலையை படையினர் யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்திடம் கையளித்ததையடுத்து வைத்தியசாலையின் புனரமைப்புப்பணிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

'நிக்கொட்' திட்டத்தின் கீழ் இந்தப் புனரமைப்புக்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. (எ-173)(26)

# அரியாலையில் சுயதொழில் ஊக்குவிப்புக் கடனுதவி

யாழ்ப்பாணம். ஏப்.10

தமிழர் புனர்வாழ்வுக் கழகம் 'நிக்கொட்' திட்டத்தின் நிதியுதவியுடன் அரியாலை கிராம மக்களுக்கு சுயதொழில் ஊக்குவிப்புக் கடன்களை வழங்கியுள்ளது.

மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் ஊடாக 41 பயனாளிகளுக்கு 4 லட்சத்து 75 ஆயிரம் ரூபா கடனாக வழங்கப்பட்டுள்ளது.

இருபத்தெட்டு லட்சம் ரூபா செலவில் கிராம அபிவிருத்திப் பணிமனை ஒன்றும் நிக்கொட்டின் நிதியுதவியுடன் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் அமைக்கப்பட்டு அரியாலை கிராம அபிவிருத்திச் சங்கத்திடம் கையளிக்கப்பட்டுள்ளது என்று தமிழர் புனர்வாழ்வுக் கழகம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-202)(26)


## புதிய பிரிவுகள்

பிரிவு I :14.04.2006
பிரிவு II :15.04.2006
பகல் 10.00 மணி

அனைத்து Diploma
கற்கை நெறிகளுக்குமான வார,
வாரஇறுதிநாள் பிரிவுகள்
ஆரம்பமாக உள்ளன என்பதை
அறியத்தருகின்றோம்.

இயக்குநர்
IIS, யாழ்ப்பாணம்


## Community Based Health Project, Jaffna
### Assistant Project Coordinator

Sri Lanka Red Cross Society, Jaffna Branch is calling application for the post of Assistant Project Coordinator. Application should be sent under registered cover to reach on before 17 April 2006 to:

**The Branch Executive Officer**
**Sri Lankan Red Cross Society**
**Jaffna District Branch,**
**No.73, Kandy Rd., Jaffna.**

**Professional requirements:**
- Diploma or Degree in Public Health, Social Seience or related field
- Experience with community development projects
- Experience with working in NGO's

Experience can be substituted for qualifications.

**Personal requirements:**
- Fluent in Tamil and English
- Excellent communication skills
- Good reporting and computer skills
- Ability to work in a team
- Motivated to work in rural areas
- Committed to work undre pressure and difficult con ditions
- Ability to frequently travel within Jaffna district
- Motorbike driving licence

**Women are encouraged to apply**
**Only short listed candidates will be informed.**


சீட்டிழுப்பு இல. 1700

08.04.2006 ஆம் திகதி சனிக்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள்

**வெற்றி எண்கள்** சுப்பர் எண்

**26 40 54 65 (15)**

செல்லுபடியாகும் டிக்கெட் தொடர் இல. 301016727 இலிருந்து 301032933

**சுப்பர் ஜக்பொட் பரிசு ரூபா 42,26,650/-வெல்லப்படவில்லை**

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 4 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | - | 42,26,650/- | - |
| 4 வெற்றி எண்கள் மட்டும் | 02 | 10,00,000/- | 20,00,000/- |
| 3 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 22 | 5,000/- | 1,10,000/- |
| 3 வெற்றி எண்கள் மட்டும் | 443 | 1,000/- | 4,43,000/- |
| 2 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 1,363 | 500/- | 6,81,500/- |
| 2 வெற்றி எண்கள் மட்டும் | 21,012 | 40/- | 8,40,480/- |
| 1 வெற்றி எண்ணுடன் சுப்பர் இல. | 19,927 | 20/- | 3,98,540/- |
| 1 வெற்றி எண் மட்டும் | 2,98,802 | 10/- | 29,88,020/- |
| மொத்தம் | | | 74,61,540/- |
| தங்க நகைகள், தையல் இயந்திரம், பைசிக்கிள் | 5 | 1,20,000/- | 6,00,000/- |
| [illegible] மொத்த பரிசுத் தொகை | 3,41,576 | | 80,61,540/- |

தொடர் இல. 201093502 க்கு மேற்பட்ட [illegible] டிக்கெட்டுக்கள் 2006 ஏப்ரல் 12 ஆம் திகதி புதன்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கெட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்.

**இந்த புதன்கிழமை**
**சுப்பர் ஜக்பொட் பரிசு ரூபா. 50,24,650/-**

| | |
|---|---|
| திருகோணமலை | 301017419-6-47 |
| கம்பஹா | 301030673-9-78 |
| நுவரெலியா | 301025965-2-30 |
| மாத்தளை | 301025270-4-78 |
| மட்டக்களப்பு | 301019303-9-77 |

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி
கொள்ளுப்பிட்டி கொழும்பு-03



# இதோ!
## புதிய அறிமுகம்



மிகப்பெரிய அளவுகளில்(5,2 அடி) உங்கள் நிறுவன விளம்பரங்கள் மற்றும் திருமணம், பட்டமளிப்புவிழா ஆகிய நிகழ்வுகளை மிகவும் துல்லியமான உயர்தர டிஜிற்றல் பிறிண்ட் மூலம் X shape stand வகைகளாக பெற்றுக்கொள்ள நாடவேண்டிய முகவரி...

இச்சலுகை ஏப்ரல் 14 மட்டுமே!

புதுவருடத்தை முன்னிட்டு ANDRA வழங்கும் 10 % விலைக் கழிவுகளில் டிஜிட்டல் பிறிண்ட் வகைகளின் மூலம்.

- டிஜிட்டல் கட் அவுட்
- டிஜிட்டல் போர்ட்
- பிளெக்ஸ் போர்ட்
- பிளெக்ஸ் பனர்கள்

உயர் துல்லியத்துடனான பிறிண்ட் வகைகளை வழங்கும் ஒரே நிறுவனம்.

**ANDRA DIGITAL IMAGE**
கே.கே.எஸ் [illegible] கோண்டாவில்.T.P:021-4590268,0776622981


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனாவுக்கு யாத்திரை செல்லவிரும்பும் திபெத்திய ஆன்மீகத்தலைவர் தலாய்லாமா



பாப்பரசர் 16ஆவது பெனடிக்ற் அண்மையில் கம்யூனிஸ்ட் சீனாவுக்கு விஜயம் மேற்கொள்ள விருப்பம் தெரிவித்திருந்தாரல்லவா? அதே போல் திபெத்திய ஆன்மீகத் தலைவர் தலாய்லாமாவும் சீனாவுக்கு விஜயம் மேற்கொள்ள விருப்பம் கொண்டுள்ளார்.

சீனாவுக்கும் - வத்திக்கானுக்குமிடையில் இருந்துவரும் பிணக்கினைத் தீர்த்துக் கொள்ள பாப்பரசர் விரும்புவது போலவே தலாய்லாமாவும் திபெத்திற்கும் சீனாவுக்குமிடையிலான பிணக்கில் ஓர் உடன்பாட்டைச் செய்து கொள்ள விரும்பக் கூடும். ஆனால், இரு நாடுகளுக்கும் சீனாவுடனுள்ள முரண்பாடுகளில் வேறுபாடுகள் உண்டு.

வத்திக்கானுக்கு சீனாவிலுள்ள கத்தோலிக்கப் பிரிவு மக்கள் தொடர்பான விட



யங்களிலேயே அக்கறை. ஆனால், தலாய்லமாவுக்கு தமது பாரம்பரிய தாயகமான திபெத்தின் இறைமை விடயமே முக்கியம். 1950 ஆம் ஆண்டு திபெத்தை சீனப் படைகள் ஆக்கிரமித்துக்கொண்டு விடுவித்துவிட்டதாக அறிவித்ததையடுத்துத் தலாய்லாமா - அந்த நாட் டின் ஆன்மீகத் தலைவரும் ஆட்சியாளராகவுமிருந்தவர் - சீனப் படைகளிடமிருந்து தப்பித் தமது பாதுகாவலர்கள் மற்றும் ஆதரவாளர்களுடன் இந்தியாவுக்கு ஓடினார். இளம் வயதினராகவிருந்த தலாய்லாமா இந்தியாவில் வட பகுதியில் மலைநாட்டு நகரமான 'தரும சாலா' என்ற இடத்தில் நாடு கடந்த அரசு ஒன்றை நிறுவினார். இதற்குச் சீனா கடும் எதிர்ப்பைத் தெரிவித்திருந்தது. தலாய்லாமாவுக்கு அடைக்கலம் கொடுத்தமைக்காக இந்தியா மீதும் சீனா சீற்றம் கொண்டிருந்தது.

தலாய்லாமா தமது நாட்டை ஆளவும் மக்களை விடுவிக்கவும் இந்தியாவில் இருந்தபடி முயற்சிகள் எடுத்துவந்தார். அமெரிக்கா போன்ற பல நாடுகளுக்கும் சென்று உலக அளவில் தமது நிலையை ...த்து இயம்பினார். ஆனால் அதனால் ...வித பயனும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை.

### திபெத்திற்கு சுயாட்சி

சமீப காலத்தில் திபெத்தின் முழு அளவிலான சுதந்திரத்தைக் கோரும் தமது கொள்கையை அவர் விட்டுவிட்டதாகத் தெரிகின்றது. சீன ஆட்சிக்குள்ளேயே திபெத்திற்கு சுயாட்சி உரிமை வேண்டும் என்பதை தலாய்லாமா முன்வைத்திருக்கிறார். இதன் அடிப்படையில் சீனாவுக்கு யாத்திரை மேற்கொள்ளவும் அவர் விருப்பம் தெரிவித்துள்ளார். தலாய்லாமாவின் இந்த விருப்பம் சீன அதிகாரிகளுக்கு தலாய்லாமாவின் தூதர்கள் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சீனர்களைப் பொறுத்தவரை தலாய்லாமாவின் சுயாட்சி கோரிக்கையில் அவர்கள் நம்பிக்கை வைக்கத்தயாராய் இல்லை. தலாய்லாமா தனது முழுஅளவிலான சுதந்திர வேட்கையைக் கைவிட்டால் அல்லாமல் சீனாவுக்கு யாத்திரை செய்ய அனுமதிக்கப்படமாட்டார். இந்தத் தகவலை சீன சமய விவகாரங்களுக்கான அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் பீஜிங்கில் வெளியிட்டுள்ளார்.

திபெத்தின் விடுதலைக்கான ஆசையைத் தலாய்லாமா முழுமையாகக் கைவிட்டால் மாத்திரமே அவர் சீனாவுக்கு யாத்திரை செய்ய அனுமதிக்கப்படுவார் என்று அந்த அதிகாரி தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

தலாய்லாமாவின் யாத்திரையை அனுமதிப்பது பற்றி ஆலோசிக்கலாம் - விவாதிக்கலாம். அது பெரிய விடயமல்ல. என்றார். தலாய்லாமா திபெத் குறித்த தமது நிலைப்பாட்டை இன்னமும் தெளிவாக வெளியிட்வில்லையென்று சீனா கருதுகிறது. திபெத்துக்கு சுயாட்சி கோரும் அவரது நிலைப்பாட்டில் சீனாவுக்கு இன்னமும் சந்தேகம் இருந்தே வருகிறது.

## கடந்த ஆண்டு பத்திரிகையாளர் கொலை சற்றுக் குறைவு

### விசாரணை ஆரம்பம்

மேற்கு ஆசியாவில் பயங்கர கொடுங்கோல் ஆட்சி நடத்தி மனிதவர்க்கத்துக்கு கெதிராக பாரிய போர்க் குற்றங்களைப் புரிந்தவர் என்று கூறப்படும் லைபீரியாவின் முன்னாள் அதிபர் சார்ல்ஸ்டெய்லருக்கு எதிரான விசாரணைகள் சீயராலியோனில் ஆரம்ப மாகியுள்ளன.

பத்து வருடங்களுக்கு மேலாக லைபீரியாவில் ஆட்சி நடத்தியுள்ள ஆபிரிக்காவின் மிக மோசமான ஆட்சியாளர் என்று கருதப்பட்ட இவருக்கு எதிராக பத்து குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. படுகொலைகள் புரிந்தமை, மனிதர்களை உருக்குலைத்தமை, பாலியல் வல்லுறவுகள் புரிந்தமை, 15 வயதுக்குட்பட்டவர்களையும் படை அணிகளில் சேர்த்தமை போன்ற குற்றச்சாட் டுகள் இதில் அடங்கும்.

விசாரணைகளை சியாரிலியோனில் வசதிகளும் பாதுகாப்பும் போதாமை காரணமாக ஹேக்கிற்கு மாற்றும்படி கோரப்படுவதால் முறையான விசாரணைகள் ஆரம்பமாவதற்கு இன்னும் பல மாதங்கள் ஆகலாம் என்று ஐ.நா. அதிகாரிகள் கருதுகிறார்கள்.

* * *

## நைல் நதியின் ஊற்றுக்கண் கண்டுபிடிப்பு

உலகின் மிக நீளமான நதியாகக் கருதப்படும் நைல் நதியின் மிகத் தொலைவிலுள்ள மூலத்தைக் கண்டுபிடித்துவிட்டதாக ஆய்வாளர் குழுவொன்று அறிவித்துள்ளது.

தீவிரவாதிகள் குழுவொன்றின் தாக்குதலில் இருந்து உயிர்த்தப்பியும், முதலைகள் நிறைந்த நீர்ப்பகுதிகளைக் கடந்தும் நைல் நதியின் மூலத்தைத் தேடி 80 நாள்கள் நடத்திய பயணத்தின் முடிவில் அதன் ஆரம்ப ஊற்றுக்கண்ணைக் கண்டுபிடித்துவிட்டதாக அந்த மூன்று பேர் அடங்கிய ஆய்வாளர் குழு அறிவித்துள்ளது. பிரித்தானியாவையும் நியூஸிலாந்தையும் சேர்ந்த இக்குழுவினர் நைல் நதியின் ஊற்றுக் கண்ணை ருவண்டாவின் நியுங்வே காட்டில் கண்டிபிடித்துள்ள னர். தொடர்ந்து மழை பெய்யும் காட்டுப் பகுதியாகும் இது.

மக்கிறிகர் (பிரித்தானியர்) மற்றும் கேம்மக்லீ, கார்த் மக்கின்டய ஆகிய நியூஸிலாந்து நாட்டவர்கள் தமது பயணத்தின் போர்து உகண்டா காட்டுப்பகுதியில் தீவிரவாதிகளின் தாக்குதலில் இருந்து தப்பியதாகவும் இத்தாக்குதலில் தங்கள் குழுவில் ஒருவர் கொல்லப்பட்டதாகவும் அறிவித்துள்ளனர். இறுதிக்கட்டத்தில் தாங்கள் பயணம் செய்த படகுகளைக் கைவிட்டு கால் நடையாக 70 கிலோமீற்றர் தூரம் நடந்து சென்றதாக வும் கூறியுள்ளனர்.

நைல்நதியில் ஏற்கனவே அறியப்பட்டிருந்த நீளத்தைவிட தாங்கள் கண்டிபிடித்துள்ள இப்போதைய விபரங்ளின் படி அது குறைந்தது 107 கிலேமீற்றார் (66 மைல்) தூரம் அதிக நீளத்தையும் கொண்டுள்ளது என்கிறார்கள் அவர்கள்.

* * *

### பத்திரிகையாளர் கொலை குறைவு

2004 ஆம் ஆண்டைவிட 2005 ஆம் ஆண்டு குறைந்த அளவில் அதாவது 13 பேர் குறைவாக பத்திரிகையாளர்கள் கொல்லப் பட்டுள்ளார்கள். இருந்தபோதிலும் பல நாடுகளில் ஊடகங்கள் இன்னும் அச்சுறுத்தல்களை எதிர்நோக்கியபடியே இருந்து வருகின்றன. இத்தகவலை ஊடகத்துறைக் கண்காணிப்பு அமைப்பான சர்வதேச பத்திரிகை நிறுவனம் (**I.P.I.**) வெளியிட்டுள்ளது.

ஈராக்கில் 23 பத்திரிக்கையாளர்கள் கடந்த வருடம் கொல்லப்பட்டுள்ளார்கள். பத்திரிகையாளர் பணிபுரிவதற்கு பயங்கரக் கொலைக் களமாக விளங்கும் நாடு ஈராக் ஆகும் என்று குறிப்பிட்டுள்ள இப்பத்தி ரிகைத்துறைக் கண்காணிப்புக் குழு 175 நாடுகளின் நிலவரங்கள் பற்றி ஆராய்ந்துள்ளது.

அநேகமான அரசுகள் ஊடகத்துறைகளைகத் கட்டுப்படுத்துவதிலும், அவைகளுக்கெதிரான வன்செயல்களிலும் அச்சுறுத்தல்களிலும் இறங்கியுள்ளன என்பது அதன் கணிப்பீடு.

2005 ஆம் ஆண்டில் வேறு நாடுகளை விட அதிக அளவில் பத்திரிகையாளர்கள் நேபாளத்தில் காவலில் வைக்கப்பட்டார்கள் என்று குறிப்பிடும் அக்குழுவின் அறிக்கை,

பத்திரிகையாளர்கள் தமது செய்திமூலங்களை வெளியிடாமைக்காக அமெரிக்கா, பிரான்ஸ் போன்ற நாடுகளில் விசாரணைக் குட்படுத்தப்பட்டார்கள் என்றும் கண்டித்துள்ளது.

ஆபிரிக்காவில் பத்திரிகை சுதந்திரம் கடு மையாக நெடிக்கடிக்குள்ளாகியுள்ளது. குறிப்பாக சிம்பாப்வேயில் பத்திரிகைகளை மூச்சு விடாமலிருக்க செய்தவற்காக அரசு தன்கையிலுள்ள எல்லா சத்திகளையும் பயன்படுதியது என்று அறிக்கை கண்டித்துள்ளது.

* * *

## ஹமாஸின் அயல் நாட்டுக் கொள்கை

### அயலவர்களுடன் அருகருகே இருந்து வாழ விருப்பம்

பலஸ்தீனத்தின் 'ஹமாஸ்' அமைப்பின் தலைமையிலான அரசு இஸ்ரேலை அங்கீகரிக்காமல் போனாலும் அதன் அயல் நாடுகளுடன் அருகருகே இருந்து வாழவதற்குத் தயாராய் இருப்பதாக அறிவித்திருப்பது ஒருமுறையில் திருப்திதருவதாக இருந்தாலும் இஸ்ரேலை பெயர் குறிப்பிடாமல் அண்டை நாடுகளுடன் அருகருகே வாழத்தயாராய் இருப்பதாக அறிவித்திருப்பது அது ஒரு சிக்கலான நிலையில் இருப்பதை வெளிப்படுத்துவதாகவும் கருதப்படுகின்றது.

கடுமையான பொருளாதார நெருக்கடிக்குள் தள்ளப்பட்டிருக்கும் ஹமாஸ் அரசு அரச ஊழியர்களின் சம்பளங்களை வழங்குவதற்கும் கூட நிதித் தட்டுப்பாட்டுக்குள் சிக்கியுள்ளது. அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் நிதி வழங்கத்தயாராய் இருந்தாலும் இஸ்ரேலை அது அங்கீகரிப்பதும் வன் முறையைக் கைவிடுவதும் நிபந்தனையாக முன் நிற்கின்றது.

இந்நிலையில் அண்டைநாடுகள் என்று குறிப்பிட்டு இஸ்ரேலுடனும் அருகருகே உடனிருந்து வாழத்தயாராய் இருப்பதாக ஹமாஸ் சொல்லாமல் சொல்கின்றதா என்ற கேள்வி எழுகின்றது. இப்படி கூறுவதன் மூலம் வெளிநாட்டு நன்கொடைகளை பலஸ்தீனம் பெற்றுக்கொள்ள முயல்கிறதா என்ற கேள்வியும் எழுந்துள்ளது.

ஐ.நா.செயலாளர் நாயகத்துக்கு பலஸ்தீன வெளியுறவு அமைச்சர் மக்மூத் அல்சஹார் எழுதியுள்ள கடிதத்தில் அண்டை



நாடுகளுடன் அருகருகே இருந்து வாழ பலஸ்தீனம் தயாராய் இருக்கின்றது என்று குறிப்பிட்டுள் ளார்.

இந்தக் கடிதத்தில் 'இரண்டு நாடுகள்' தீர்வு திட்டம் ஒன்று பற்றியும் அவர் குறிப்பிட்டிருப்பதாகத் தெரிகின்றது. அவ்வாறாயின் இஸ்ரேலை ஹமாஸ் அங்கீகரிப்பதாய் இருக்க வேண்டும். ஆனால், ஹமாஸின் கொள்கைப்படி இஸ்ரேல் என்ற நாடு தரித்திருப்பதற்கே உரிமை கிடையாது. ஆனால் அனானுக்கு அனுப்பட்டுள்ள கடிதத்தில் 'எமது அண்டை நாடுகளுடன் சுதந்திரமாகவும் சுயேச்சையாகவும் வாழ்வதை எதிர்நோக்குகின்றோம். 'குவாட்டட்' என்றழைக்கப்படும் அனுசரணை நாடுகளுடன் காத்திரமான பேச்சுகள் நடத்தவும் விரும்புகின்றோம்'' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

குவாட்டட் என்றழைக்கப்படும் குழுவில் அமெரிக்கா, ஐரோப்பிய யூனியன் ரஷ்யா, ஐ.நா.ஆகியவை இடம் பெற்றுள்ளன.




இதேவேளை, பலஸ்தீன பிரதமர் இஸ்மாயில் ஹானியெஹ் தமது அரசு பெரும் நிதி நெருக்கடியை எதிர்நோக்கியிருப்பதை வெளிப்படையாக ஒப்புக்கொண்டு சர்வதேச நாடுகளின் உதவியை அவசரமாக நாடியி ருக்கிறார்.

பலஸ்தீனத்தின் ஹமாஸ் அமைச்சரவையின் முதலாவது கூட்டத்தில் இந்தக் கொள்கையை அவர் முன்வைத்தார்.

சவூதி அரேபியா, குவைத் மற்றும் எமிரேட்ஸ் நாடுகளிடமிருந்து உதவிகள் கிடைக்கும் என்று தெரிகின்றது. எப்பொழுது என்பது இன்னமும் சரியாகத் தெரியவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹரிஹர புத்திர ஐயனாரே! தேரேறி வருக!



*வேலணை துறையூரில் உறை ஐயப்பனே தேரேறி வருக!*
*வேண்டுவரமெலாம் தரும் கையனே தேரேறி வருக!*
*காலமெல்லாம் காக்கும் ஹரிஹரனே தேரேறி வருக!*
*காட்சிக்கெளிய காரணக்கடவுளே தேரேறி வருக!*
*பூரணை புட்கலை சகிதமாய் தேரேறி வருக!*
*புவனமெல்லாம் போற்றும் நாயகனே தேரேறி வருக!*
*ஆரணச் சுருதியோர் சார் அடலுருத்திரனே தேரேறி வருக!*
*அற்புதமாய் வேலணை துறையூர் திருப்பதியில் தேரேறி வருக!*

கவியாக்கம்:
-மதுரகவி காரை. எம்.பி. அருளானந்தன்.

* வேலணை தெற்கு துறையூர் இலந்தவனம் அருள்மிகு பூரணை புட்கலை சமேத ஹரிஹர புத்திர ஐயனார் தேர்த்திருவிழா இன்று 10.04.2006 இல் நடைபெறுகின்றது.

* சிறப்பு நிகழ்ச்சி
பகல் 11.30 மணிக்கு 'தெய்வீகப்பேருரை' வழங்குபவர் கவிமாமணி மதுரகவி காரை எம்.பி. அருளானந்தன்B.A.(Hons)
விடயம்: ஐயனார் வழிபாடு

(சி-48759) (18-17-14)
-ஆலய பரிபாலன சபையினர்.



அண்மையில் யாழ்ப்பாணம் விஜயம் செய்த

# ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர்ஜியின்

# வாழும் கலைப்பயிற்சி இலவச அறிமுக உரை

இன்று(10.04.2006) திங்கட்கிழமை மாலை 6 மணி

| | |
|---|---|
| இடம்: குமாரசாமி மண்டபம் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி. | கம்பன் கோட்டம், நல்லூர் பின்வீதி நல்லூர். |

பயிற்சி நாள்கள்: 11.04.2006 முதல் 16.04.2006 வரை
பயிற்சிநேரம் : காலை 6 மணி முதல் 8.30 மணி வரை
அல்லது மாலை 6 மணி முதல் 8.30 மணி வரை
*அன்பில் உணருங்கள் உங்களை உணருங்கள்*
மேலும் தொடர்புகளுக்கு: 0779059549, 0779059544,0777157281
(சி-48761) (18-17-14)

# பணிநிலை வேண்டுகை

01. ஒளிப்படப்பிடிப்பாளர் (VIDEO)
தகைமை : உரிய கல்வித் தகைமைகளுடன் இத்துறையில் அனுபவம் (ஆண்/ பெண்)

02. ஒளிப்படத் தொகுப்பாளர்
தகைமை: இத்துறையில் முறைப்படி பயின்றவர்களும் அனுபவம் உள்ளவர்களும் (ஆண்/ பெண்)

தகுதியானவர்கள் நாளை(11.04.2006) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு உரிய சான்றிதழ்களுடன் அறிவமுது புத்தகசாலை கிளிநொச்சிக்கு நேரில் சமுகம் தரவும். அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். (சி-48768) (18-17-14)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

மண் மகிழ 08 - 03 1947



மண் நெகிழ 11 - 03 2006

## அமரர் மகேந்திரன் பரமேஸ்வரி

*(காரைநகர் -கோவளம் )*

*உனை கைபிடித்த நாள்முதல் கலங்காதவிழி*
*தற்போது புலம்புகின்றேன் கணவர் நான்....*
*ஆசையாய் பெயர் வைத்தீர்கள் கருணாநிதி என*
*அம்மாவைக் காணாது கதறுகிறேன் நான்...*
*பெற்றகடன் தீர்க்காமல் கடல்கடந்து*
*புலம்புகின்றேன் கொள்ளிப்பிள்ளை சிறீதரன் நான்..*
*கௌரி என பெயர் சூட்டி ஆசைக்கோர்*
*தங்கை அவளும் உங்கள் முன்விரைந்தாளே!*
*ஐயகோ !நாம் யாது செய்வோம்*

இன்று (10.04.2006) திங்கட்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து அவரது ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்குமாறு அனைவரையும் அழைக்கிறோம்.

கோவளம், காரைநகர். (48800) (18-17-14)
தகவல்: கணவர், பிள்ளைகள்.

# மேலும் 15 வீடுகளை கையளிக்க ஏற்பாடு

தென்மராட்சி, ஏப்.10

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கென பருத்தித்துறை, கற்கோவளம் புனித நகரில் கே.பி.எம்.ஜீ. நிறுவனத்தினரால் அமைக்கப்பட்டு வரும் 100 வீட்டுத்திட்டத்தில் மேலும் 15 வீடுகள் பயனாளிகளுக்கு வழங்கப்படவுள்ளன.

எதிர்வரும் 25 ஆம் திகதி இந்த வீடுகள் கையளிக்கப்படவுள்ளன.

யாழ். அரச அதிபர் க.கணேஸ் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் கே.பி.எம்.ஜீ. நிறுவன உயர் அதிகாரிகள், நாடாளுமன்ற உறுப்பினர் ந.இரவிராஜ் உட்பட பலர் கலந்துகொள்வர் என இவ் வீடமைப்புத் திட்ட இணைப்பாளர் எம்.ஏ.எம். பேணார்ட் தெரிவித்தார்.

இப்பகுதியில் நிர்மாணிக்கப்பட்டு பூர்த்தியடைந்த வீடுகள் பயனாளிகளுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(எ-117)(18)

# தனிப்பட்ட வகுப்புகள்

ஆங்கிலம்
ஆண்டு 6 முதல் *G.C.E. (O/L)* வரை
தொடர்பு:
0777 858139,
021 222 3923
(49166) (18-17-14)

# வைத்தியம்

செங்கண்மாரி, அல்சர், ஆஸ்துமா, வாதநோய்கள், வலிப்பு நோய், பீனிசம், தலையிடி, தலைகால் அவியல், சருமநோய்கள், மாதவிடாய்க் குத்து, மகப்பேறின்மை, குழந்தை வைத்தியம், வீரியக்குறைவு, மூலவியாதிகள், மூத்திர ரோகங்களில் பிரபல்யமானவர்.
சகல வியாதிகளையும் குணப்படுத்துபவர்:

வேலணை வைத்திய கலாநிதி
சி.இராசரத்தினம்
121, 2 ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.
தொலைபேசி எண்: 222 2459
(49170)-(39-18-17-14)

# மணமகள் தேவை

யாழ்.இந்துகௌரவ குடும்பம், வயது 32, பரணி நட்சத்திரம் 4 இல் செவ்வாய், இலக்கின பாவம் 7 உடைய அரச தொழில் புரியும் M.B.B.S. பட்டதாரிக்கு வைத்தியர் அல்லாத பட்டம் அல்லது வேறு உயர்கல்வி பெற்றுத் தொழில் புரியும் அசைவபோசனை உடைய மணமகளை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.

சாதகக் குறிப்புடன் தொடர்பு கொள்ளவும்.

விளம்பர இல. 2847,
C/O உதயன்.
(49183) (39-18-17-14)

# இறைவரிப் பரிசோதகர் நியமனம்

யாழ்ப்பாணம், ஏப்.10

யாழ். மாவட்ட உள்ளூராட்சி சபைகளில் வெற்றிடமாக உள்ள இறைவரிப் பரிசோதகர் வகுப்பு II பதவிகளுக்கு மாகாண பொது நிர்வாக அமைச்சினால் உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த மூன்றாம் திகதி தொடக்கம் இந்த நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இப்பதவிக்கு ஆள்சேர்ப்பதற்காக கடந்த வருடம் நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் சித்தி பெற்றவர்களிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட 6 பேர் இந்தப் பதவிகளுக்கு நியமிக்கப்பட்டுள்ளனர்.

போட்டிப் பரீட்சையில் சித்திபெற்ற உள்ளூராட்சி சபைகளில்பணியாற்றும் இறைவரி மேற்பார்வையாளர்கள் மூவருக்கும் பட்டதாரிகள் மூவருக்கும் இந்த நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

(எ-117)(18)

# மணிவிழா நாயகனை வாழ்த்துகிறோம்



மணிவிழாக்காணும் எமது முன்னாள் தமிழ் விரிவுரையாளரும் யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவருமான பேராசிரியர்

**எஸ். சிவலிங்கராஜா**

அவர்கள் பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம்.

இயக்குநர்,
விரிவுரையாளர்கள்,
பட்டப்படிப்புகள் கல்லூரி.
57/18, ஸ்ரான்லி வீதி,யாழ்ப்பாணம்.
(சி-48770) (18-17-14)

# விற்பனைக்குண்டு

Alumex தயாரிப்பிலான Secksen Bar வகைகளும்
Box பார் வகைகளும் விற்பனைக்குள்ளன
**70 mm Sliding Windoor**
**100 mm Doors**
**Shop Front**
**Partition**
**Casement**
**Louvers** அனைத்து SECN BAR வகைகளும்
அனைத்து BORD வகைகளும் விற்பனைக்குண்டு.
தொடர்பு: **பட்டாபி படமாடம்**
இல. 64, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். T.P.: 021 222 7821
(49082) (18-17-14)

# மீண்டும் குறைந்த கட்டணத்தில் சர்வதேச நாடுகளுக்கான பொதிகள் (PAR CEL) சேவை

பிரான்ஸ், ஜேர்மனி, சுவிஸ், இத்தாலி, நோர்வே, டென்மார்க், லண்டன், கனடா, அமெரிக்கா, ஆஸ்திரேலியா, நியூசிலாந்து

வெளிநாடுகளில் வசிக்கும் உங்கள் உறவினர், நண்பர்களுக்கு அனுப்பவேண்டிய உணவு, உடை, அலங்காரப் பொருள்கள், வீடியோ நாடாக்கள், கடிதங்கள் ஆகியவற்றை நாமே பொதிசெய்து அனுப்புகின்றோம். இதற்காக சிறிய கட்டணம் அறவிடப்படும். ஒரு பொதியின் நிறை இரண்டு கிலோவுக்கு மேல் இருத்தல் வேண்டும்.

ஒரு கிலோவுக்குரிய கட்டணம் 1400/- மட்டும்

ஐந்து நாள்களில் பொதிகள் ஒப்படைக்கப்படும்.

*விசேட விலைக் கழிவு*

5 கிலோவுக்கு மேல் அனுப்பும் பொதிகளுக்கு கட்டணம்
ஒரு கிலோவுக்கு லண்டன் 450/-
சுவிஸ் 600/-

RAINBOW TRAVELS & TOURS
32-1/ 2, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 222 3237, 0777 328219.
(அபிநயா நகை மாடத்துக்கு மேல்)
(சி/48767)

உ
சிவமயம்



மிருசுவில் படித்த மகளிர் திட்டம் துர்க்காபுரம்
அருள்மிகு ஸ்ரீஞான துர்க்கை அம்பாள் திருக்கோயில்

## மணவாளக் கோல நவகுண்ட பக்ஷ சகஸ்ர 1008 கலச சங்காபிஷேக விஞ்ஞாபனம்

பார்த்திப வருஷம் பங்குனி உத்தரம் 28 ஆம் நாள்
செவ்வாய்க்கிழமை (11.04.2006)

பார்த்திப வருஷம் பங்குனி மாதம் 28 ஆம் நாள் நாளை(11.04.2006) செவ்வாய்க்கிழமை அதிகாலை 5 மணி முதல் விநாயகர் வழிபாடு, யாகபூசை, தீபாராதனை, வேதவஸ்தோத்தி, திருமுறை பாராயணம், அனந்த கோடி நமஸ்காரம் அந்தர்பலி பகிர்பலி தானாதிகள் சர்வமங்கள வாத்திய சகிதம் பிரதான கும்பங்கள் வீதி பிரதக்ஷணம் 10 மணியளவில் சங்காபிஷேகம் நடைபெறும். தொடர்ந்து மஹாஹவீர் நிவேதனம் யாக உத்வாசனம் எஜமான் அபிஷேகம் விஷேட பூசை அம்பாள் திருவீதி உலா வரும்போது வாக்களிக்கும் தாயானவள் சூரியவாளின் மீது ஏறிவரும் கண்கொள்ளாக் காட்சியைக் கண்டு அம்பிகையின் நிகழ்வினைக் கண்டு அகமகிழ்வீராக.

*திஷ்டா குரு:*
சிவஸ்ரீ து.விவேகானந்தக்குருக்கள்,
கலட்டி விக்கினேஸ்வரா தேவாலயம்.

*சங்காபிஷேக பிரதம குரு:*
சிவஸ்ரீ க.வீரபத்திரக் குருக்கள்
கிரியா கலாமணி
மீசாலை மேற்கு நரசிங்க வைரவர் தேவஸ்தான பிரதம குரு.

*அருளாசியுரை*
* சிவஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்
(2 ஆவது குருமகா சந்நிதானம் நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனம்)

* சி.கா.கமலநாதன்
யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி.
மிருசுவில், துர்க்காபுரம்.

*உபயம்:*
திரு.க.க.தியாகராசா குடும்பம்
சங்கத்தானை - சாவகச்சேரி.

திரு.க.உதயன்
மீசாலை வடக்கு, கொடிகாமம்.

*தேவஸ்தான பிரதமகுருவும் தர்மகர்த்தாவும்*
* சிவத்திரு சி.நவரத்தினம் ஐயா
* சிவத்திரு ந.முகுந்தன் ஐயா
வாக்களிக்கும் தாய்
சிவத்திருமதி நவரத்தினம் மனோன்மணி அம்மா

ஆதீனதர்மகர்த்தா.

11.04.2006 (49024)(39-11-17-18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுன்னாகம்
தாளையடி, ஸ்ரீ பூரணை புஷ்கலை சமேத
அரிகரபுத்திர ஐயனார் ஆலய

## மணிமண்டபத் திருப்பணி ஆரம்ப வைபவம்

வரலாற்றுச் சிறப்புடையதும் பிரசித்தி பெற்றதுமாகிய சுன்னாகம் தாளையடி ஐயனார் தேவஸ்தானத்தில் முன் மணிமண்டபம் அமைப்பதற்கான திருவருள் கைகூட்டி சுன்னாகத்தைச் சேர்ந்தவரும் ஐயனார் பக்தருமாகிய லண்டனில் வசித்துவரும் திருவாளர் மார்க்கண்டன் கௌரிகரன் அவர்களினதும் அவரது முயற்சியினால் பல அடியார்கள் ஒருங்கிணைந்து பொருளுதவி செய்ய முன்வந்து மணி மண்டப வேலைகள் நிகழும் மங்களமிகு பார்த்திப வருடம் பங்குனி மாதம் 27ஆம் திகதி 10.04.2006 (தேர்த் திருவிழா அன்று) திங்கட்கிழமை நண்பகல் 12 மணியளவில் நாள் வேலை ஆரம்ப நிகழ்வு நடைபெறத் திருவருள் பாலித்துள்ளது. அனை வரும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் வேண்டுகின்றோம்.

**வைபவம் சிறப்புற நல்லாசி வழங்கி ஆசீர்வதிப்பவர்கள்**
கிரியாகலாபமணி — முத்தமிழ் குருமணி
சிவஸ்ரீ நா.சோமஸ்கந்தக்குருக்கள், சிவஸ்ரீ நா.சர்வேஸ்வரக்குருக்கள்
ஐயனார் தேவஸ்தான மகோற்சவ குருமார்

**மணி மண்டப வடிவமைப்பு:** உருத்திரா பொறியியல் கட்டக் கலை, மதியுரையகம், நல்லூரடி, யாழ்ப்பாணம்.

ஐயனார் கோயில், சுன்னாகம். (49207)
திரு சி.ஐ.கந்தசாமி, திரு பெ.வாமதேவன் — ஆதீன கர்த்தர்கள்
பரிபாலன சபையினர் — ஐயனார் தேவஸ்தானம்



உயிரியல் பாடத்திற்கான
பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்கு
**2006 A/L**

| நடைபெறும் இடம்: | ஆரம்ப தினம்: |
|---|---|
| NEW SCIENCE HALL KANNATHIDDY, JAFFNA. | 11.04.2006 (செவ்.) மு.ப. 10.00 மணி |
| BEACON STUDY CENTRE VATHIRY, KARAVEDDY. | 11.04.2006 (செவ்.) பி.ப. 2.00 மணி |

வழங்குபவர் :
**திரு R. ஈஸ்வரதாசன்**
ஆசிரியர் - கொழும்பு இந்துக் கல்லூரி
(யாழ். இந்துக் கல்லூரி முன்னாள் ஆசிரியர்)

* கருத்தரங்கு தொடர்ந்து மூன்று தினங்கள் நடைபெறும்.
* சகல அலகுகளும் சுருக்கக் குறிப்புடன் மீட்டல் செய்யப்படும்.
* அனுமதிகள் வரையறுக்கப்பட்டிருப்பதனால் பெயர்களை முன் பதிவு செய்துகொள்ளவும்.

(49201)


# மரண அறிவித்தல்கள்

## ஆன்யரிந்தா (ராஜி)



அரியாலையைச் சேர்ந்த ஆன்யரிந்தா (ராஜி) அவர்கள் நேற்று (09.04.2006) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் அரியாலையை வசிப்பிடமாகக் கொண்ட அம்பு றோஸ் குலசிங்கம் (முன்னாள் ஒட்டுப்பலகை கூட்டுத்தாபனம், இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் நல்லூர் பிரிவின் பொருளாளர்)- செல்வரூபாராணி தம்பதியரின் அன்பு மகளும் அன்ரன் குலேந்திரராஜா (கனடா), ஜெனீவர்மதிவதனி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் றெயினோல்ட், டிலானி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஜோன் தாசன் (சட்டத்தரணி, மன்னார்), அம்புறோஸ், அன்னமலர், புஸ்பமலர் ஆகியோரின் பெறாமகளும், Dr.பாலசேகரம் (மலேசியா), குணசேகரம் (மலேசியா), ஞானசேகரம் (மலேசியா), தர்மசேகரம் (மலேசியா), திருச்செல்வசேகரம் (மலேசியா) ஆகியோரின் அன்பு மருமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

392, பிரதான வீதி,
யாழ்ப்பாணம். (49206)

தகவல்:
அம்புறோஸ் குலசிங்கம் (தந்தை).

## திருமதி மாரிமுத்து இராசாத்தி

சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் கலைவாணி வீதி, சித்தன்கேணியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மாரிமுத்து இராசாத்தி அவர்கள் நேற்று (09.04.2006) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி - பொன்னு தம்பதியரின்அன்பு மகளும் காலஞ்சென்ற மாரிமுத்துவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற கந்தசாமியின் அன்புச் சகோதரியும் தனபாலசிங்கம் (யாழ். சிறைச்சாலை உத்தியோகத்தர்), தனம் (பிரான்ஸ்), திலகம் (ஜேர்மனி), சசிதரன் (பிரான்ஸ்), ஜெயந்தினி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயும் றஞ்சித மலர், இசிதோர், செல்வராசா, பாலகிருஸ்ணன், ஜீவமலர் ஆகியோரின் அன்பு மாமியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.04.2006) திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக விளாவெளி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கலைவாணி வீதி,
சித்தன்கேணி. (49209)

தகவல்:
மா.தனபாலசிங்கம் (மகன்).

## சங்காபிஷேகம்

யாழ்ப்பாணம்,ஏப்.10

யாழ். கோட்டை முனீஸ்வரன் ஆலயத்தில் நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 9 மணிக்கு சங்காபிஷேகமும், நண்பகல் 12 மணிக்கு விசேட பூசையும், அன்னதானமும் இடம்பெறும். (ஒ)(30)

## சிந்து நடைக்கூத்து

குடத்தனை,ஏப்.10

குடத்தனை கிழக்கு, மாளிகைத்திடல் கண்ணகை அம்மன் ஆலயத்தில் இன்று திங்கட்கிழமை இரவு 8 மணிக்கு 'காத்த வராயன் சிந்து நடைக்கூத்து'' மேடையேற்றப்படவுள்ளது. (ஒ-78)(30)

## கட்சிமாறினார் சேடபட்டி

தமிழக சட்டசபையின் முன்னாள் சபாநாயகர் சேடப்பட்டி முத்தையா அ.தி.மு.கவை விட்டு விலகி தி.மு.க.வில் இணைந்தார். தமிழகத் தில் சட்டசபைத்தேர்தல் வரும் மே மாதம் 08ம் திகதி நடைபெற உள்ள நிலையில், சென்னை அண்ணா அறிவாலயத்தில் தி.மு.க., தலைவர் கருணாநிதியை நேரில் சந்தித்து நேற்று தி.மு.க., வில் இணைந்தார். மேலும், அவருடன் அவரது ஆதரவாளர்களும் தி.மு.க.வில் இணைந்தனர். (ஒ)(30)


புத்தாண்டில் புதுப் பொலிவுடன்
**Microsoft**
நிறுவனத்தின் அங்கீகாரத்துடன்
முதற்கட்டமாக
50 மாணவர்களுக்கான
தொழில் வாய்ப்புக்களை பெற்றுத்தரக் கூடிய
கணனிக்கற்கை நெறிகள் அரம்பமாகிறது
16-04-2006.
CIC Computer Education
Tel-0214591765
Main Street, Atchuvely
Point Pedro Road Siruppiddy
பருத்தித்துறை வீதி சிறுப்பிட்டி.

**Vacation @ AIMS**
Career Development Program
*Work as you like*
**Pc Applications**
இக் கற்கை நெறி தனிமனிதர் சார்ந்த அல்லது அலுவலக தேவைகளை பூர்த்தி செய்து கொள்ளக் கூடிய செம்முறையுடன் கூடிய கற்கை நெறியாக அமையும்
மட்டுப்படுத்தப்பட்ட பதிவுகள்
*Handle as you like*
**Pc Maintenance**
Start on : 15-04-06
Batch I : 9.00 am
Batch II : 4.00 pm
இக் கற்கை நெறியின் மூலம் உங்களது கணனிகளில் ஏற்படும் பிரச்சினைகளை நீங்களே திருத்திக் கொள்ள முடியும்
#118, பலாலி வீதி, தபாற்பெட்டிச் சந்தி, திருநெல்வேலி
Center for FOSS & LAMP

**AIMS**
ACADEMY OF INFORMATION MANAGEMENT & SYSTEM STUDIES
அநேகரின் வேண்டுகோளுக்கிணங்க......
Batch IV — Start on :11.04.06 4.30 pm
Diploma in GNU/Linux Administration
- Redhat/Fedora/Mandrake Linux Installation
- Open Source world Introduction
- Open Source Software Installation & Configuration
- Fundamentals of Command Line Operations.
- Networking using Linux Environment
மேலதிக விபரங்களுக்கு:
# 118, பலாலி வீதி, தபாற்பெட்டிசந்தி, திருநெல்வேலி
Center for FOSS & LAMP

**ராஜா** யாழ்ப்பாணம்
இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடு
ஸ்ரீகாந், மீராஜஸ்மின், கருணாஸ் நடித்த
**மெர்க்குரிப் பூக்கள்**
காட்சி நேரம் மாற்றப்பட்டுள்ளது
10.30,2.30,6.30,9.00,(பி.நே.) ரிக்கற் முற்பதிவு செய்துகொள்ளலாம்.

**நாகம்ஸ்** சுன்னாகம்
விஜயகாந்த் நடித்த **சுதேசி**
அடுத்த வெளியீடு: **டிஸ்யும்**
காட்சி நேரம்: 11.00, 3.00, 7.00

**நாதன்ஸ்** சினிமா யாழ்ப்பாணம்
அர்ஜுன், மீனா, ஜோதிகா, மணிவண்ணன் நடித்த
**ரிதம்**
14.04.2006 அன்று
**கள்வனின் காதலி**
காட்சிநேரம்: 10.30, 2.30, 6.30, 9.30 (பி.நே.)


# மரண அறிவித்தல்கள்

## திருமதி றோஸ் ஜெயமணி ராஜரட்ணம்

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவரும் கொழும்பில் வசித்த வருமான திருமதி றோஸ் ஜெயமணி ராஜரட்ணம் அவர்கள் 04.04.2006 அன்று கர்த்தருக்குள் நித்திரை அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற யாழ். மத்திய கல்லூரி அதிபர் ஜே. டபிள்யூ.அருட்பிரகாசம் - பாக்கியம் தம்பதியரின் அருமை மகளும் காலஞ்சென்ற ஏ.ஜி.ராஜரட்ணம் (இளைப்பாறிய ஆசிரியர்) அவர்களின் அன்பு மனைவியும் டாக்டர் ஜெயராஜா (U.K.), லலித்தா (கொழும்பு), விக்னராஜா (U.S.A) ஆகியோரின் அருமைத் தாயும் டாக்டர் சாவித்திரி, ஜெயா ஆகியோரின் அன்பு மாமியாரும் நோயல் வசீகரன், சித்ரஞ்சன், நட்டாலி, எஸ்தர் சந்திரிக்கா, தானியா, சமந்தா, ஜோசப் றிக்காடோ ஆகியோரின் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (11.04.2006) செவ்வாய்க் கிழமை பொரளை வாணி ரேமண்ட்ஸ் மலர்ச் சாலையில் வைக்கப்பட்டு, 12ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு நல்லடக்க ஆராதனை நடைபெறும்.

இந்த அறிவித்தலை, உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

A3, அன்டர்சன் பிளட்ஸ்,
215, பாக் றோட், கொழும்பு - 5,
தொ.பே.: 011 2581102

தகவல்:
எஸ்தர் சந்திரிக்கா.
(சி-48791)

## செல்லப்பா பாலரெட்ணம் (ராசலிங்கம்)

(யாழ். போதனா வைத்தியசாலையின் ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்)



ஈச்சமோட்டையைச் சேர்ந்த செல்லப்பா பாலரெட்ணம் (ராசலிங்கம்) அவர்கள் நேற்று (09.04.2006) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லப்பா - கனகம்மா தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற கேதீஸ்வரியின் அன்புக் கணவரும் மங்கையற்கரசியின் அன்புக் கணவரும் சிவபாலன், ராகுலன், ஆஜா சந்துரு ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற நல்லம்மா மற்றும் சிவபாக்கியம், சபாரெட்ணம் காலஞ்சென்ற குணரெட்ணம் மற்றும் வடிவம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்றவர்களான நடராசா, செல்லத்துரை, லெட்சுமி மற்றும் கண்ணம்மா, காலஞ்சென்ற நாகராசா மற்றும் மல்லிகாதேவி, மனோன்மணி, சற்குணம், பூபாலசிங்கம், உலகநாதன் ஆகியோரின் மைத்துனரும் அலோசியஸின் சகலனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.04.2006) திங்கட்கிழமை மு.ப. 10 மணிக்கு (ப.நே) இல.20/4, புங்கன்குளம் வீதியில் உள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக துண்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொ.பே.: 0714223380
(48208)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்,
சிவபாலன் (மகன்)
(யாழ். போதனாவைத்தியசாலை உத்தியோகத்தர்).

## திருமதி மயில்வாகனம் தேனீயம்மா

(ஓய்வுபெற்ற ஆசிரியர்)



தோப்புக்காடு, காரைநகரைப் பிறப்பிடமாகவும் கரம்பொன் மேற்கு, ஊர்காவற்றுறையை வதிவிடமாகவும் கொண்ட திருமதி மயில்வாகனம் தேனியம்மா அவர்கள் நேற்று (09.04.2006) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் சோதிநாதன் (துஷா கட்டட ஒப்பந்த காரர்), உலகநாதன், கமலாதேவி, சந்திராதேவி, இந்திராதேவி, கோகுலாதேவி ஆகியோரின் பாசமிகு தாயாரும் மாலினி (I.S.A- திருகோணமலை), காலஞ்சென்ற மகேஸ்வரி, சுகுமார் மற்றும் வரதா, பேரின்பநாதன் (வீதி அபிவிருத்தி அதிகார சபை), கந்தசிவநாதன், சிறிரங்கநாதன் ஆகியோரின் அன்பு மாமியும் குவா, அரவிந், பிறேமா, தேவி, அருள், பரமன், கேமா, லோஜினி, ராசா, குமார், புவர்ணா, சுயா, மதி, நிரோ, சுகந்தி, உசா, யாழினி, கஜா ழினி, கயன் ஆகியோரின் பேர்த்தியும் தர்சன், ஜனா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறியத்தரப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கரம்பொன் மேற்கு,
ஊர்காவற்றுறை. (49212)

தகவல்:
பேரன், பேர்த்தி,
மகாலிங்கம்,பிறேமலதா.

## திருமதி நடராஜா பாக்கியம்

கொக்குவில் மேற்கு, புதுவீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நடராஜா பாக்கியம் அவர்கள் நேற்று (09.04.2006) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நடராஜா (ராசா அண்ணை) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற நடராசா காலஞ்சென்ற விநாயகமூர்த்தி, காலஞ்சென்ற கனகசபாபதி, குமாரசாமி, பராசக்தி ஆகியோரின் சகோதரியும் குகதாசன் (ஜேர்மனி), தயாபரன் (கனடா), பவி, சறோ ஆகியோரின் தயாரும் சிவகலா (ஜேர்மனி), கௌரி (கனடா), தேவறஞ்சன், சிவகுமார் (கொழும்பு) ஆகியோரின் மாமியாரும் தினேஸ், சஞ்சீவ் (கனடா), பவித்திரா, ஹயாணன், ராம், விக்னா (ஜேர்மனி), சிகாஸ் (கொழும்பு) ஆகியோரின் பாட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (10.04.2006) திங்கட்கிழமை பிற்பகல் 2 மணியளவில் இறுதிக்கிரியைகளின் பின்னர் தகனக்கிரியைகளுக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புதுவீதி, கொக்குவில் மேற்கு,
கொக்குவில். (49215)

தகவல்:
மருமகன், செ.தேவறஞ்சன்
(யாழ். இந்துக் கல்லூரி).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தவறைத் திருத்த ஜே.வி.பி. வலியுறுத்துமாம்

"ஏற்கனவே ஜெனீவாப் பேச்சுகளின்போது சில தவறான விடயங்களுக்கு அரசு உடன்பட்டுவிட்டது. அந்தத் தவறுகளை இம்முறைப் பேச்சுகளின்போது திருத்திக்கொள்ளுமாறு அரசை நாம் வலியுறுத்துவோம். இன்றைய அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் இதனை விவரமாக எடுத்துக் கூறுவோம்."

- இவ்வாறு நேற்று 'உதயனு'க்கு கருத்துத் தெரிவித்தார் ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத்.

விஜித ஹேரத் மேலும் கூறியதாவது:-

நோர்வே அனுசரணையாளர்களின் செயற்பாடுகளை நாம் விமர்சித்தாலும், அமைதி முயற்சிகளுக்கான எமது ஆதரவை தொடர்ந்து வழங்குவோம். இதற்காகவே நாம் அமைதி முயற்சிகளுக்கான இந்த அனைத்துக் கட்சி மாநாட்டிலும் பங்குபற்றுகிறோம்.

ஆனாலும், ஏற்கனவே ஜெனீவாப் பேச்சுகளின்போது உடன்பாடு கண்ட விடயங்களைத் திருத்திக்கொள்ளுமாறு நாம் அரசை வலியுறுத்துகின்றோம்.

ஜெனீவாப் பேச்சுகளின்போது இறுதியாகக் காணப்பட்ட உடன்படிக்கையின்படி அரசு போர்நிறுத்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தை ஏற்றுக்கொண்டுவிட்டது. அதில் திருத்தம் செய்யப்படவும் இல்லை. எனவே இந்தத் தவறுகளை இம்முறைப் பேச்சின்போது திருத்திக் கொள்ள வேண்டும். இதனையே அனைத்துக் கட்சிக் கூட்டத்திலும் இன்று வலியுறுத்துவோம்.

- இவ்வாறு கூறினார் விஜித ஹேரத். (க)

# இந்திய உதவியுடன் புலமைப் பரிசில் திட்டம்

ஜி.சீ.ஈ. உயர்தர வகுப்புகளில் கல்வி பயிலும் திறமையுள்ள மாணவர்களுக்கென புலமைப் பரிசில் திட்டம் ஒன்றை இலங்கையிலுள்ள இந்திய தூதரகமும், கல்வி அமைச்சும் இணைந்து நடைமுறைப்படுத்தியிருக்கிறது என கல்வி அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

'மகாத்மா காந்தி புலமைப் பரிசில் திட்டம்' எனப் பெயரிடப்பட்டுள்ள இத்திட்டத்தின் மூலம் வருடாந்தம் 100 திறமையான மாணவர்கள் நாடளாவிய ரீதியில் தெரிவுசெய்யப்படுவார்கள். இவ்வாறு தெரிவுசெய்யப்படும் மாணவர்களுக்கு மாதாந்தம் 500 ரூபா வீதம் வருடம் ஒன்றுக்கு 5000 ரூபா வழங்கப்படும்.

ஜி.சீ.ஈ (சாதாரண) தரப் பரீட்சையில் 70 வீதம் பரீட்சைப் பெறுபேற்றைப் பெற்றுள்ள குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களைச் சேர்ந்தோர் இப்புலமைப் பரிசிலுக்கு விண்ணப்பிக்க முடியும். இத்திட்டம் இவ்வாண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்படும். இதற்கான திறந்த விண்ணப்பம் எதிர்வரும் ஆகஸ்ட மாதத்தில் கோரப்படும் எனவும் அந்த அதிகாரி தெரிவித்தார். (க)

# மாமனிதருக்கு மக்கள் படை அஞ்சலி

கொழும்பு, ஏப்.10

"திருமலை தமிழ் மக்கள் பேரவைத் தலைவரின் அகோர மரணத்திற்காக கண்ணீரைக் காணிக்கையாக்குகிறோம்"

- இவ்வாறு திருமலை மாவட்ட பொங்கியெழும் மக்கள் படையணி அஞ்சலி செலுத்தியுள்ளது. அறிக்கையில் இயக்கம் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

திருகோணமலையின் அதியுயர் பாதுகாப்பு வலையம் என வர்ணிக்கப்படும் கடற்படைத்தள வாயிலில் அமைந்துள்ள இலங்கை வங்கி பிரதான காரியாலயத்தினுள் ஸ்ரீலங்கா அரச படையின் ஒத்துழைப்போடு ஒட்டுப்படைகளால் சுட்டுக்கொல்லப்பட்டார் திருமலை தமிழ் மக்கள் பேரவையின் தலைவர் விக்னேஸ்வரன்.

திருகோணமலை மாவட்ட வங்கித் துறையில் மூத்த அனுபவசாலியும், கவிஞருமாகிய அமரர் வன்னியசிங்கம் விக்னேஸ்வரனுக்கு எமது கண்ணீர் பூக்களைக் காணிக்கையாக்குகிறோம்.

சர்வதேச சமூகமே, ஸ்ரீலங்கா அரசே, தமிழ்த் தேசியத்தைப் பாதுகாக்கும் ஒரே வழி துப்பாக்கிதான் என்றால் நாம் அதற்கும் தயார். தேசிய தலைவரே! இனியும் பொறுமை காக்க வேண்டாம். உங்கள் போர் முரசு ஒலியை எதிர்பார்த்து, தங்கள் வழிவர தயாராகவுள்ளோம்

"அண்ணனே உங்களின் அகால மரணம்
எங்களுக்கு மனரணம்
அந்த இறுதித்துடிப்பு வந்த உந்துருளி
சல்லடையாகிப்போன கபால ஓடுகள்
இறுதி நேர மரண ஓலம் துறைமுக உப்புக்காற்றில்
கரைந்துபோன எதிர்காலம்
மறக்காது இவற்றை தலைநகர் சமூகம்"

- இவ்வாறு திருகோணமலை மாவட்ட பொங்கியெழும் மக்கள் படையணி தனது செய்தியில் தெரிவித்துள்ளது. (ம)

# கடற்படையினரின் கப்பலில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வர் என்றும் -

அந்த யோசனையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதனை கண்காணிப்புக் குழுவினர் நேற்று விடுதலைப் புலிகளிடம் கடிதம் மூலம் தெரிவித்தனர். இந்த யோசனையை விடுதலைப் புலிகள் அடியோடு நிராகரித்துள்ளனர்.

இதுகுறித்து விடுதலைப் புலிகளின் நிலைப்பாட்டை உடனடியாக - நேற்று - கண்காணிப்புக் குழுவின் தலைவர் மேஜர் ஜெனரல் உல்வ் ஹென்றிஸனுக்கு அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் கடிதம் மூலம் தெரிவித்துள்ளார்.

அக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

எமது கிழக்குப் பிராந்தியத் தளபதிகளது போக்குவரத்து நடைமுறை தொடர்பாக ஸ்ரீலங்கா அரசு அறிவித்துள்ள அறிவிப்பு எமது தலைமைப் பீடத்தை மிகவும் ஆத்திரத்திற்கும் அதிர்ச்சிக்கும் உள்ளாக்கியுள்ளது.

நான்கு வருடங்களுக்கும் மேலாக மேற்கொள்ளப்பட்டுவந்த நடைமுறைகள், எமது யோசனைகள் அனைத்தையும் நிராகரித்து, எவ்விதத்திலும் நடைமுறைக்குச் சாத்தியமற்ற, நல்லெண்ண முயற்சிகளைச் சிதறடிக்கும் ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் போக்கானது எவ்விதத்திலும் அமைதி முயற்சிகளிற்கு ஊக்கமளிக்கும் என நாம் நம்பவில்லை.

யுத்த நிறுத்தம் அமுலாக்கப்பட்டதிலிருந்து எமது தளபதிகள் திருகோணமலை மற்றும் மட்டக்களப்புக்குச் சென்று வருவதற்கு வான் வழிப் போக்குவரத்தே நடத்தப்பட்டு வந்தது.

ஆனால், அண்மையில் ஸ்ரீலங்கா அரசாங்கத்தினதும், படைத் துறையினதும் கடும்போக்குக் காரணமாகத் திட்டமிடப்பட்டு, மறுக்கப்பட்டமையினாலேயே நாம் கடல் வழிப் போக்குவரத்தினை கேட்டிருந்தோம்.

எம்மிடம் மிகவும் வலுவான கடற்படையொன்று உள்ளது. முன்னைய தடவைகளில் எமது போராளிகள் கடல் வழிப் பயணங்களை மேற்கொண்டபோது எமது கடற்படையின் கடற் கலங்களையே பயன்படுத்தியிருந்தோம் என்பதைத் தங்களுக்கு நினைவூட்ட விரும்புகின்றேன். ஆயினும் இந்தத் தடவை ஸ்ரீலங்காவின் கடற்படையின் கடற் கலத்திலேயே நாம் பயணிக்க வேண்டும் என்பதை எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது. அதில் பயணிப்பதற்கு எமது தளபதிகளும், போராளிகளும் தயாராக இல்லை என்பதையும் தங்களுக்கு தெரியப்படுத்திக்கொள்கின்றேன்.

ஆகவே, எமது முன்னைய தடவைகளில் கடைப்பிடிக்கப்பட்டது போன்று, இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் வழித்துணையுடன் எமது கடற் கலங்களில் எமது தளபதிகள் பயணம் செய்வதற்குரிய ஒழுங்கினை விரைவாகச் செய்துதரும்படி கேட்டுக் கொள்கின்றேன்.

மாறாக, இக் கோரிக்கை இழுத்தடிக்கப்பட்டு, நிராகரிக்கப்படுமாக இருந்தால், முன்னரைப் போன்று எமது சொந்த முறையினைப் பயன்படுத்தி எமது பயணத்தினை மேற்கொள்வோம் என்பதைத் தங்களுக்குத் தெரியப்படுத்திக்கொள்ள விரும்புகின்றேன். இப் பயணத்தினை வழிமறித்து இடையூறு செய்ய சிறிலங்காக் கடற்படை எத்தனிக்குமாக இருந்தால், அது பாரிய யுத்த நிறுத்த மீறலாகவே அமையும். அத்துடன் அவ்வாறான நிலைமை ஏற்படுமாக இருந்தால் எதிர் காலத்தில் ஸ்ரீலங்கா கடற்படைக்கும் அதே நிலைமைதான் ஏற்படும் என்பதையும் தங்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இந்நிலைமை யுத்தநிறுத்த முறிவிற்கே இட்டுச் செல்லும் எனவும் நாம் அஞ்சுகின்றோம். ஆகவே, எமது தளபதிகளின் பயண ஒழுங்கினை விரைவாக ஏற்படுத்தித் தரும்படி பணிவுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

- இவ்வாறு அரசியற்துறைப் பொறுப்பாளர் தெரிவித்துள்ளார். (ஒ-7)

# அரசும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திட்டமொன்றை முன்வைக்கவேண்டும். சமாதான அனுசரணை தேவை என்றால் இந்தியா தரத் தயாராக இருக்கிறது. ஆனால் ஜனாதிபதியும், ஐ.தே.க. தலைமையும் கூட்டாக இதற்கு விண்ணப்பித்தால் மட்டுமே இந்தியா விருப்புடன் அனுசரணைப் பணியை முன்னெடுக்கவரும் என்று பிரதமர் கூறியதாகவும் தெரியவருகிறது.

ஐ.தே.கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்க நாளை செவ்வாய்க்கிழமை ஆறு நாள் சுற்றுப்பயணமொன்றை மேற்கொண்டு அமெரிக்கா பயணமாகிறார்.

இதற்கு முன்னர் அவர் ஜனாதிபதியை சந்தித்து இந்தியப் பிரதமர் தெரிவித்த பொது வேலைத் திட்டயோசனை தொடர்பாகவும் கலந்துரையாடுவார் என அறியப்படுகிறது.

# கொள்ளைகளில்...

(முதலாம் பக்கத்-தொடர்ச்சி)

களினால் குடாநாட்டு மக்கள் இரவு நேரங்களில் வீடுகளுக்கு வெளியேகூட வர அஞ்சி வாழும் சூழலை தமக்குச் சாதகமாக்கிக் கொண்ட சில புல்லுருவிகளும் திருடர்களும் துப்பாக்கிகள், கொட்டன்கள், வாள்கள், கத்திகள் கொண்டு மக்களை அச்சுறுத்தி திருட்டு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்கள் பற்றிய விவரங்கள் சில எமக்குக் கிடைக்கப்பெற்றுள்ளன. இவர்களின் செயற்பாட்டினையும் அச்சுறுத்தல்களையும் நாம் ஒருபோதும் அனுமதிக்கப்போவதில்லை. எனவே, இவர்கள் பற்றிய தகவல்களை உடனுக்குடன் எமது கவனத்திற்கு அறியத்தருமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ) (25)

# முல்லைக் கடலில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவருக்கு இது தொடர்பாக அனுப்பிவைத்துள்ள முறைப்பாட்டுக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

முல்லைத்தீவு மாவட்டக் கடற்பரப்பில் கடந்த ஜனவரி மாதம் தொடக்கம் கடற்படையினரின் அச்சுறுத்தல்களும், தாக்குதல்களும் அதிகரித்து வருகின்றன. ஜனவரி மாதம் 23ஆம் திகதி கடற்றொழிலுக்குச் சென்ற மீனவர்கள் இருவரை இன்றுவரை காணவில்லை. இவர்கள் தொடர்பில் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு, மனித உரிமைகள் மையம், அரச அதிபர் ஆகியோரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டும் எந்தவித பலனும் கிடைக்கவில்லை.

கடந்த மாதம் 18ஆம் திகதி வண்ணாங்குளம் பகுதியில் இருந்து மீன்பிடிக்கச்சென்ற செபஸ்தியாம்பிள்ளை ரவிக்குமார் என்பவரது வலைகள் கடற்படையினரால் அறுத்து கடலில் வீசப்பட்டன. கடந்த 3ஆம் திகதி வலைஞர் மடம் பகுதியில் இருந்து மீன்பிடிக்கச் சென்ற செபமாலை இரத்தினசிங்கம், இரத்தினசிங்கம் சிவகுமார் ஆகிய மீனவர்களின் வலைகளும் கடற்படையினரால் அறுத்துக் கடலில் வீசப்பட்டன.

இந்தச் சம்பவங்களின்போது மீனவர்களை எச்சரிக்கும் வகையில் கடற்படையினரால் துப்பாக்கிச் சூடும் மேற்கொள்ளப்பட்டது. மீனவர்களின் தொழில் உபகரணங்களுக்கான இழப்பீடுகள் எதுவும் இதுவரையில் கிடைக்கப் பெறவில்லை.

- இவ்வாறு அந்தக் கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (க)

# தயா சந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கான ஆயுதக் கொள்வனவு குறித்து விசாரணை நடத்த, இரு வாரங்களுக்கு முன்னர் தனிநபர் விசாரணைக்குழுவொன்றை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நியமித்திருந்தார்.

நீதிபதி நிமல்காமினி அமரதுங்க தலைமையிலான இந்த விசாரணைக்குழு எதிர்வரும் 17 ஆம் திகதி வரை பொதுமக்களின் கருத்துகளை கேட்டறியவுள்ளது. இதன் பின்னரே சந்தகிரி மீதான இரகசிய விசாரணை இடம்பெறும். இந்த நிலையிலேயே தயா சந்தகிரியை பாகிஸ்தான் தூதுவராக நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. (க)

# அனைத்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்கனவே ஜெனீவாப் பேச்சுகளுக்கு முன்னரும் பின்னரும் அனைத்துக் கட்சித் தலைவர்களின் கூட்டத்தைக் கூட்டி அமைதிப் பேச்சுகள் குறித்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விளக்கமளித்திருந்தார். அதன் ஓர் அம்சமாகவே அடுத்தகட்ட அமைதிப் பேச்சுகளுக்கு முன்னர் ஜனாதிபதி இக்கூட்டத்தைக் கூட்டியிருப்பது குறிப்பிடத்தக்கது. (க)

# மரண அறிவித்தல்கள்

## வன்னியசிங்கம் விக்னேஸ்வரன் (விக்கி)

(நிறைவேற்று அதிகாரி - இலங்கை வங்கி, தலைவர் - தமிழ் மக்கள் எழுச்சிப் பேரவை - திருகோணமலை)



நயினாதீவு, 6ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் திருகோணமலை அன்பு வழிபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட வன்னியசிங்கம் விக்னேஸ்வரன் அவர்கள் 07.04.2006 வெள்ளிக்கிழமை திருகோணமலையில் அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற வன்னியசிங்கம் - தனலெட்சுமி தம்பதியரின் சிரேஷ்ட புதல்வரும் சண்முகராசா - காலஞ்சென்ற தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் மணிமொழியின் அன்புக் கணவரும் தட்சாயினி, மாதுமையாள், ஜனார்தனன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் பரமேஸ்வரன் (கனடா), கலாஸ்ரீ சிவஞானலெட்சுமி, நீதிமணி (ஆசிரியை), கதிரேசபிள்ளை (பிரான்ஸ்), இராசேஸ்வரி (கனடா), பேரின்பநாதன் (பிரதேச சபை, புங்குடுதீவு), இராஜேஸ்வரன் (ஆசிரியர்), விநோதினி, மணிவண்ணன், சுமதினி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.04.2006) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் அன்பு வழிபுரம் இந்து மயானத்துக்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

6ஆம் வட்டாரம்,
நயினாதீவு. (49218)

தகவல்:
இ.பேரின்பநாதன் (மைத்துனர்).

## திருமதி செல்வம் கிறிஸ்தோப்பர்



தோலகட்டி, வசாவிளானைப் பிறப்பிடமாகவும் கச்சேரி வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்வம் கிறிஸ்தோப்பர் அவர்கள் நேற்று (09.04.2006) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் வைரமுத்து தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற கிறிஸ்தோப்பரின் (ரெயிலர்) அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான செபமாலை, அன்னம் ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்றவர்களான துரைராசா, சின்னராசா ஆகியோரின் அன்புத் தாயும் அதிசயராணி (சோதி), செல்வமலர் ஆகியோரின் மாமியாரும் சந்திரன் - விநோதினி (லண்டன்), சுரேஷ் - ஜெனிற் எமில்டா (ஆஷா), வினோதன், இளங்கோ (ஜேர்மனி), நிச்சன், நிஷாந்தி, ரிஷான், வெஸ்லி, நிதர்ஷா ஆகியோரின் பேர்த்தியும் சங்கவி, பவித் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நன்றித் திருப்பலிக்காக இன்று (10.04.2006) திங்கட்கிழமை நண்பகல் ஒரு மணிக்கு அடைக்கலநாயகி ஆலயத்திற்கு (OLR) எடுத்துச் செல்லப்பட்டு மல்வம், உடுவில் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல: 20, கச்சேரி வீதி,
யாழ்ப்பாணம். (49217)

தகவல்:
T.சுரேஸ் (பேரன்).

324, Palaly Road, Jaffna.
MCS
Diploma in Auto CAD With Manual Drawing
புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன, அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது
பதிவுகளை முற்கூட்டியே மேற்கொள்ளவும்
*****Supported by UNDP/JRRP*****

• SPOKEN ENGLISH With GRAMMEAR
• GENERAL ENGLISH
BY: B.RUBAN (B.B.A)
ஆரம்பம்:
11.04.2006 4 p.m.
ஒரு பிரிவில் 10 மாணவர்களுக்கு மட்டும் அனுமதி வழங்கப்படும்.
திகழ் கல்வி நிறுவனம்
கே.கே.எஸ். வீதி, இணுவில்.

துரித மீட்டல் வகுப்புகள்
G.A.Q., B.A. Part - I
அனைத்துப் பாட விரிவுரைகள் விடுமுறைக்கால வகுப்புகள்.
11.04.2006 4 p.m.
திகழ் கல்வி நிறுவனம்
கே.கே.எஸ். வீதி, இணுவில்.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 10.04.2006இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர)ப் பரீட்சை,

2006 மே

வெளியீடு 02

## மாதிரி வினாப்பத்திரம்

### வணிகக்கல்வி II

திரு. B.கஜென். B.Com. *(Hons)*.வவுனியா.

### பகுதி I

01. முயற்சியாளர் ஒருவரின் அடிப்படையான தொழிற்பாடு யாது?
 1) புதிய வணிகத்தை ஆரம்பித்தமை.
 2) புதிய உற்பத்திப் பொருளை அறிமுகம் செய்தமை.
 3) புத்தாக்கம் செய்தல்.
 4) புதிய பங்குதாரர்களைச் சேர்த்தல்.
 5) புதிய தந்திரோபாயங்களைப் பிரயோகித்தல்.

02. அரசாங்கம் தொடர்பில் வணிகத்திற்கு உள்ள ஒரு பொறுப்பு யாது?
 1) பொருத்தமான வரிகளைச் செலுத்துதல்.
 2) தொழில்களை வழங்குதல்.
 3) அந்நியச் செலாவணியை ஈட்டுதல்.
 4) இலாபத்தைச் சம்பாதித்தல்.
 5) உள்ளூர் வளங்களைப் பயன்படுத்துதல்.

03. பின்வருவனவற்றுள் எது ஊழியர் ஒருவரின் கடமை ஆகும்?
 1) விதிகளையும் பிரமாணங்களையும் அனுசரித்தல்.
 2) பணிகளை ஒழுங்காக நிறைவேற்றுதல்.
 3) இணக்கமாகச் செயற்படல்.
 4) சொத்துக்களை உரியவாறு கையாழுதல்.
 5) மேற்சொன்ன யாவும்.

04. பின்வருவனவற்றுள் எது சந்தைப்படுத்தல் ஆராய்ச்சிச் செய்முறையின் ஒரு படி அன்று?
 1) பிரச்சினையை இனங்காணல்
 2) ஆராய்ச்சித் திட்டத்தை விருத்தி செய்தல்
 3) தரவுகளைச் சேகரித்தல்
 4) உற்பத்திப் பொருட்கலவையைத் தீர்மானித்தல்
 5) தரவுகளைப் பகுத்தாராய்தல்

05. செயற்பாட்டு விகிதத்திற்கு வழங்கும் பெயர் யாது?
 1) நிதி இணைப்பு விகிதம்.
 2) நடைமுறை விகிதம். 3) திரவ விகிதம்.
 4) முதலீட்டின் மீதான திரும்பல் விகிதம்.
 5) மொத்தச் சொத்துகள் புரள்வு விகிதம்.

06. இலங்கையின் முயற்சியாண்மையின் முக்கியத்துவம் வேண்டப்படுவது?
 1) சனத்தொகைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த
 2) இனப்பிரச்சினைக்குத் தீர்வாக 3) வாழ்க்கைத்தர உயர்வுக்குத் தீர்வாக
 4) அரசு வரியை அதிகரித்துக்கொள்ள 5) சுற்றாடல் பாதுகாப்பை ஏற்படுத்த

07. வணிகமொன்று குறித்த நிதியாண்டுக்குள் ஈடுபடுத்திய மூலதனத்தில் 20% இலாபம் அடைதல் என்பது யாது?
 1) குறிக்கோள். 2) நோக்கம்.
 3) தூர நோக்கு. 4) இலட்சிய நோக்கு. 5) கொள்கை.

08. ஒப்படைக்கப்பட்ட குறித்த கருமங்களை நிறைவேற்றுதல் தொடர்பான செயற்பாடுகளின் தேவை யாது?
 1) தலைமைத்துவம். 2) தொழில் இனங்காணல்.
 3) அதிகாரம். 4) பொறுப்பு.
 5) மேற்கூறிய எவையுமல்ல.

09. பின்வருவனவற்றுள் வாடிக்கையாளரை மையமாகக்கொண்ட சந்தைப்படுத்தல் எண்ணக்கருவுக்குள் அடக்கமுடியாத செயல் யாது?
 1) வணிகக்கொள்கைகளை நெகிழ்ச்சியற்றதாக வகுத்தல்.
 2) தனது வாடிக்கையாளருக்கு மிகச்சிறந்த சேவையை வழங்குதல்.
 3) வாடிக்கையாளர் அபிப்பிராயங்களை மதித்தல்.
 4) விற்பனையுடன் உயர்மட்டத்திலான நுகர்வோர் சேவைகளைப் பேணல்.
 5) வாடிக்கையாளருடன் தீர்மானம் எடுப்பவர்கள் சிறந்த தொடர்பாடலைப் பேணல்.

10. நிதி முகாமைத்துவத்தின் மிகமுக்கிய பணியாக அமைவது யாது?
 1) செலவுகளை இழிவுபடுத்துதல்.
 2) கொடுப்பனவுகளைச் சரியாகப்பதிந்து வைத்தல்.
 3) நிதியைப் பங்கீடுசெய்தல்.
 4) பொருத்தமான காலத்தில் பொருத்தமான வழிகளிலிருந்து நிதிபெற உதவுதல்.
 5) நிதிக் கட்டுப்பாட்டுத் தகவல் பேணல்.

11. பின்வரும் நிறுவனங்களுள் எது கடல் உணவு ஏற்றுமதிக்கான சுகாதாரச் சான்றிதழை வழங்கும்?
 1) இலங்கைக் கட்டளைகள் பணியகம்
 2) விவசாயத் திணைக்களம் 3) சுகாதாரத் திணைக்களம்
 4) மீன்பிடி நீர்வள அபிவிருத்தி அமைச்சு 5) ஏற்றுமதி அபிவிருத்திச் சபை

12. சிறுவணிகர் ஒருவரினால் கட்டுப்படுத்த முடியாத காரணிகளின் தொகுதியைத் தெரிவு செய்க?
 1) மூலதனம், ஊழியர்கள். 2) சந்தை, போட்டியாளர்கள்.
 3) உற்பத்தி, மூலப்பொருள்கள். 4) ஊழிர்கள், சந்தை.
 5) போட்டியாளர்கள், ஊழியர்கள்.

13. ஓர் ஒழுங்கான கட்டுப்படுத்தல் முறையின் முதற்படி யாது?
 1) உள்ளபடியான செயல்நிறைவேற்றத்தை அளவிடுதல்.
 2) உள்ளபடியான செயல்நிறைவேற்றத்தை நியமங்களுடன் ஒப்பிடுதல்.
 3) மதிப்பீடு செய்தலும் திருத்த நடவடிக்கைகளை மேற்கொள்ளலும்.
 4) செயல் நிறைவேற்ற நியமங்களை நிறுவுதல்.
 5) பின்தொடர்தலும் பின்னூட்டலும்.

14. வணிக நிதியின் பிரதான குறிக்கோள் யாது?
 1) நிதியங்களைத் தோற்றுவித்தல்.
 2) பொருத்தமான வழிகளில் நிதியங்களை முதலீடு செய்தல்.
 3) உரிமையாளர் உரித்தை அதிகரிக்கச் செய்தல்.
 4) விற்பனைப் புரள்வை அதிகரிக்கச் செய்தல்.
 5) கிரயத்தைக் குறைத்தல்.

15. மாற்று நிதியளிப்பு மூலம் ஒன்றைத் தெரிவுசெய்யும்பொழுது கருத்திற் கொள்ளப்படும் காரணி அல்லாதது பின்வருவனவற்றுள் எது?
 1) கிரயம். 2) முகாமை. 3) இடர் நேர்வு.
 4) நிபந்தனை. 5) நோக்கம்.

16. இயைபாக்கம் செய்தல் எப்பரப்பின் கீழ் வரும்?
 1) திட்டமிடல். 2) ஒழுங்கமைத்தல்.
 3) தலைமைத்துவம். 4) ஊக்கம் அளித்தல்.
 5) கட்டுப்படுத்தல்.

17. ஓர் உற்பத்திப் பொருள் மீதான SLS குறி எதனைக் குறித்து நிற்கிறது?
 1) உற்பத்திப் பொருளின் விலை நியாயமானது என்பதை.
 2) உற்பத்திப் பொருளின் தரம் மிக உயர்ந்தது என்பதை.
 3) உற்பத்திப் பொருள் காலாவதியாகவில்லை என்பதை.
 4) உற்பத்திப் பொருள் நுகர்வோனின் சுவைக்கு அமைவானது என்பதை.
 5) உற்பத்திப் பொருள் குறித்த நியமமொன்றுக்கு அமைவானது என்பதை.

18. சிற்றளவு வணிகங்கள், பேரளவு வணிகங்கள் என வணிகங்களை வகைப்படுத்துவதற்கு ஏதுவான பண்புசார் காரணியைத் தெரிவு செய்க.
 1) ஈடுபடுத்தும் மூலதனத் தொகை.
 2) ஊழியர்களின் எண்ணிக்கை.
 3) பயன்படுத்தப்படும் தொழில் நுணுக்கம்.
 4) புரள்வு. 5) உற்பத்தி இயலளவு.

19. வாடிக்கையாளரை மையமாகக் கொண்ட வணிகத் தத்துவத்திற்கு வழங்கும் பெயர் யாது?
 1) சந்தைப்படுத்தலின் மைய எண்ணக்கருக்கள்.
 2) உற்பத்தி எண்ணக்கரு.
 3) உற்பத்திப் பொருள் எண்ணக்கரு.
 4) விற்பனை எண்ணக்கரு.
 5) சந்தைப்படுத்தல் எண்ணக்கரு.

20. இணைப்பு விகிதம் என்பது பின்வருவனவற்றுள் எதனைச் சுட்டி நிற்கும்?
 1) முதலீட்டின் மீதான வருவாய்.
 2) ஈடுபடுத்திய மூலதனத்திற்கும் தேறிய இலாபங்களுக்கும் இடையிலான தொடர்பு.
 3) உரிமை மூலதனத்திற்கும், கடன் மூலதனத்திற்கும் இடையிலான தொடர்பு.
 4) நடைமுறைச் சொத்துகளுக்கும் நடைமுறைப் பொறுப்புகளுக்கும் இடையிலான தொடர்பு.
 5) புரள்வுக்கும் இலாபங்களுக்கும் இடையிலான தொடர்பு.

21. தரக் கட்டுப்பாட்டின் முழு மொத்தமான நோக்கம் யாது?
 1) கிரயத்தைக் குறைத்தல்.
 2) உற்பத்திப் பொருளின் தரத்தைப் பேணல்.
 3) ஊழியர்களுக்கு ஊக்குவிப்பு வழங்குதல்.
 4) இலாபகரமான நிலையை அதிகரிக்கச் செய்தல்.
 5) உற்பத்தித் தொழில் நுணுக்கத்தை மேம்படுத்தல்.

22. பின்வருவனவற்றுள் எது நுகர்வோன் பொறுப்பாகக் கருதப்படலாம்?
 1) தன்னைத் தானே பாதுகாத்தல்.
 2) தகவல்களை அறிந்திருத்தல்.
 3) தான் விரும்புவதைத் தெரிவுசெய்தல்.
 4) இழப்பீட்டைப் பெற்றுக்கொள்ளல்.
 5) நுகர்வோர் உரிமைகளை உறுதிப்படுத்தல்.

23. "முகாமை" என்னும் பதத்தின் கருத்தை மிகப்பொருத்தமான வகையிற் காட்டும் கூற்றைத் தெரிவுசெய்க.
 1) நிறுவனக் குறிக்கோள்களை அடைதல்.
 2) குறிக்கோள்களை அடைவதற்கு வளங்களைப் பயனுறுதியும் வினைத்திறனும் வாய்ந்த வகையில் பயன்படுத்துதல்.
 3) மிகக் குறைந்த அளவு வளங்களைப் பயனுறுதி வாய்ந்த முறையில் பயன்படுத்தி உச்சப் பயனைப் பெற்றுக் கொள்ளுதல்.
 4) குறித்த கால எல்லைக்குள் நிறுவகக் குறிக்கோள்களை அடைதல்.
 5) சரியானவற்றைச் செய்தல்.

24. சூழல் முகாமைத்துவ முறைமை தொடர்பாக அளிக்கப்பட்டுள்ள நியமம் பின்வருவனவற்றில் எது?
 1) ISO 9001
 2) ISO 9002
 3) ISO 9003
 4) ISO 14001
 5) ISO 14031

25. ஒரு வசதிப் பண்டமாக உள்ளது எது?
 1) குளிர்சாதனப் பெட்டி
 2) செல்லிடத் தொலைபேசி.
 3) கைக்கடிகாரம்.
 4) பால்மாப் பெட்டி.
 5) ஒரு சோடி சப்பாத்து.

26. ஊழியர் ஆட்சேர்ப்புக்கான உள்ளக மூலமாக அமைவது எது?
 1) இணையம்.
 2) இணைய அகம்.
 3) கடந்த கால ஊழியர்கள்.
 4) ஊழியர்களின் சிபார்சுகள்.
 5) வேலைச் சந்தைகள்.

27. சிக்கனக் கட்டளைத் தொகை மாதிரியுரு எதற்கு மிகப் பொருத்தமானது?
 1) கேள்விமீது தங்கியுள்ள பொருள்களுக்கு.
 2) பாதுகாப்பான இருப்புகளை நிர்ணயிப்பதற்கு.
 3) அழிந்துபோகக் கூடிய பொருள்களுக்கு.
 4) நிலையான இடைவேளைகளில் முன்வைக்கப்படும் கட்டளைகளுக்கு.
 5) மேற்குறித்த எவையுமன்று.

28. செயல்திட்டமொன்றின் இயல்தகவு ஆய்வு என்பதன் கருத்தை விளக்கும் மிகச் சரியான கூற்று யாது?
 1) மூலதனத்தை வழங்கும் மூலங்களும் அவற்றின் அனுகூலங்களும், பிரதிகூலங்களும் பற்றிய பகுப்பாய்வு.
 2) முதலீட்டாளரின் வலுக்களும், பலவீனங்களும் பற்றிய பகுப்பாய்வு.
 3) செயற்றிட்டத்தின் நிதி, பொருளாதாரம், தொழினுட்பம், சமூகப் பொருத்தப்பாடு பற்றிய பகுப்பாய்வு.
 4) இலக்குச் சந்தை பற்றிய பகுப்பாய்வு.
 5) மதிப்பிட்ட வருமானம், செலவு பற்றிய பகுப்பாய்வு.

29. ஒரு காசுப் பாய்ச்சல் முற்கணிப்பு எதனைக் காட்டுகிறது?
 1) ஒரு வணிகம் எவ்வளவு சிறப்பாகச் செயற்படுகிறது என்பதை.
 2) ஒரு வணிகத்திற்கு எப்பொழுது மேலதிகப் பற்று தேவைப்படுகிறது என்பதை.
 3) ஆண்டுக்காலத்திற்கு மதிப்பிடப்பட்ட செலவை.
 4) ஆண்டுக்காலத்திற்கு மதிப்பிடப்பட்ட வருமானத்தை.
 5) மதிப்பிடப்பட்ட வருமானச் செலவீட்டு அமைப்பை.

30. சந்தைப்படுத்தலுடன் தொடர்பானவகையில் பொது சன உறவு செயற்பாட்டிற்கான ஓர் உதாரணம் எது?

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

1) நேரடி விற்பனை.
2) வியாபார சந்தைகளும் பொருட்காட்சிகளும்.
3) சுவரொட்டிகளும் துண்டுப்பிரசுரங்களும்.
4) போட்டிகளும் லொத்தர்களும்.
5) அற நன்கொடைகள்.

**பின்வரும் வினாக்களில் உள்ள இடைவெளிகளை நிரப்புக.**

31. குறித்த இலக்கை அடையும் பொருட்டு தனியாளகள் அல்லது சமூகத்தின் நடத்தையில் செல்வாக்கை ஏற்படுத்தும் ஆற்றல் .................................. எனப்படும்.
32. வணிகமொன்றில் ஈடுபடுத்தப்பட்டுள்ள முழுத்தொகையும் ........................ எனப்படும்.
33 நுகர்வோர் தமது தேவை ஒன்றுக்காக உண்மையில் எதனை வாங்க விரும்புகின்றனரோ அப்பொருள் ...................... பொருளாகும்.
34. மறுகட்டளை மட்டம் = .............................. X ...........................
35. புதியவர்களை நிரந்தர ஊழியர் பட்டியலில் சேர்க்கும் மதிப்பீடு செய்யும் குறிப்பிட்ட வரையறுத்த காலத்தின் சேவை நிலை .............................. எனப்படும்.

**சரியாயின் "சரி" எனவும் பிழையாயின் "பிழை" எனவும் குறிப்பிடுக.**

36. திட்டமிடலின் பெறுபேறு திட்டமாகும். (சரி / பிழை)
37. நுகர்வோருடன் ஆரம்பித்து நுகர்வோருடன் முடிவடைவதாக சந்தைப்படுத்தல் தொழிற்பாட்டைக" குறிப்பிடலாம். (சரி / பிழை)
38. சுனாமியால் சேதமடைந்த தொழில் முயற்சிகளை மீள ஆரம்பிக்க என அறிமுகப்படுத்தப்பட்டுள்ள கொடுகடன் திட்டமே "சூசஹன" என்பதாகும். (சரி / பிழை)

**சுருக்கமான விடை தருக.**

39. ஒருவர் எப்பொழுது தலைவராக முடியும்?
..........................................................................................
40. நிறுவனமொன்றில் வருமானம். உழைக்காத சொத்து எது?
..........................................................................................

## பகுதி II

**முதலாம், இரண்டாம் வினாவுக்கும் ஏனைய இரு வினாக்களுக்கும் விடையளிக்குக.**

01. 1. அ) வளர்ச்சி குறைந்த கிராம மட்டங்களில் காணப்படக்கூடிய சிறு முயற்சியாண்மையின் பண்புகள் எவை?
 ஆ) பொதுவாக முயற்சியாளன் ஒருவனுக்கு இருக்கக்கூடிய பண்புகள் எவை?
 2. இலங்கையின் ஏற்றுமதி நோக்கிய கைத்தொழில் கொள்கையின் பிரதான நோக்கங்கள் யாவை?
 3. கைத்தொழில்களை வகைப்படுத்துவதற்கு உபயோகிக்கப்படும் அளவுரீதியான அடிப்படைகள் எவை?
 4. இலங்கையைப் பொறுத்தமட்டில் சிறிய, நடுத்தரக் கைத்தொழில்களின் முக்கியத்துவத்திற்கான காரணங்களைக் குறிப்பிடுக.
 5. நிறுவனமொன்றிற்குத் தேவையாகவுள்ள வளங்களைக் குறிப்பிடுக.
 6. திட்டமிடலை மேற்கொள்ளும் முகாமையாளன் கருத்திற் கொள்ளவேண்டிய விடயங்கள் எவை?
02. 1. அ) கட்டுப்படுத்தலின் படிமுறைகள் எவை?
 ஆ) முகாமைத்துவக் கட்டுப்பாட்டு முறைகள் மூன்றைக் குறிப்பிட்டு விளக்குக.
 2. தர வட்டங்கள் என்றால் என்ன?
 3. வணிக முயற்சியொன்றுக்குத் தேவையான மூலதன அளவை நிர்ணயிக்கும் காரணிகள் எவை?
 4. நிறுவனமொன்றிற்குக் கிடைக்கக்கூடிய புறநிதி மூலங்கள் எவை?
 5. கொழும்பு பங்குப் பரிமாற்றகத்தில் கொடுக்கல், வாங்கல் செய்யப்படும் ஆவணங்களின் வகைகள் எவை?
 6. நிறுவனமொன்று தனது பண்டங்களுக்கான வியாபாரக்குறியைத் தெரிவு செய்யும்பொழுது கவனிக்க வேண்டிய விடயங்கள் எவை?
03. 1. அலகுப் பொறுப்பாட்சி நிறுவனமொன்றின் பண்புகள் எவை?
 2. பொருள் ஒன்றில் காணப்படும் சுற்றுறையில் இருக்கவேண்டிய தகவல்கள் எவை?
 3. விளம்பரம் ஒன்றின் நோக்கங்கள் எவை?
 4. ஒரு வேலைகொள்வோன் வேலைசெய்வோனிடமிருந்து எவற்றை எதிர்பார்க்கிறான்?
 5. ஆட்சேர்ப்பின் பிரதான படிமுறைகள் எவை?
04. 1. கொழும்பு பங்குபரிவர்த்தனை நிலையத்தில் வரையறுத்த பொதுக்கம்பனிகள் பட்டியற்படுத்தப்படும் நடைமுறையைச் சுருக்கமாக விளக்குக.
 2. மத்திய வைப்பக முறை என்பதை விளக்கி, அதனது நான்கு தொழிற்பாடுகளையும் விளக்குக.
 3. நிறுவன திரவத்தன்மையை அளவிடும் விகிதங்களைக் குறிப்பிட்டுச் சுருக்கமாக விளக்குக.
 4. நம்பிக்கை அலகொன்றில் முதலீடு செய்வதால் முதலீட்டாளர் பெறக்கூடிய அனுகூலங்கள் யாவை?
 5. பின்வருவன பற்றி சிறு குறிப்பெழுதுக.
 அ) தலைமைத்துவ விலைக்கொள்கை
 ஆ) முதலீட்டு வகுப்புகளின் தொகுதி
 இ) 5S எண்ணக்கரு
05. 1. ஊழியப் புரள்வு எவ்வழிகளில் எழுகின்றன?
 2. சந்தைசார் விகிதங்கள் மூன்றைக் குறிப்பிடுக.
 3. அ) வேதனம் என்பதன் இரு பிரதான கூறுகளைக் குறிப்பிடுக.
 ஆ) ஊழியர் பிற நலன்களில் நான்கைக் குறிப்பிடுக.
 4. அ) முயற்சியாண்மையின் சுயசக்தி மதிப்பிடலின் முக்கியத்துவம் யாது?
 ஆ) ஊழியர் தொடர்பான செயல்திறன் மதிப்பீட்டின் நோக்கங்கள் யாவை?
 பணச்சந்தை, மூலதனச்சந்தை என்பவற்றை வேறுபடுத்தி ஒவ்வொரு சந்தையின் பிரதான நிதிக்கருவிகள் இரண்டைப் பெயரிடுக.
06. 1. சிறுவணிகங்களுக்கான தடைகள் எவை?
 2. திட்டமிடல் தோல்விக்கான காரணங்கள் எவை?
 3. பாதீடு தயாரிப்பதன் நோக்கங்கள் எவை?
 4. சந்தைப்படுத்தும் செயல்திட்டத்தின் படிமுறைகள் எவை?
 5. விலையிடலில் பின்பற்றப்படும் விலையிடல் கொள்கைகள் எவை?

*விடைக் குறிப்புகள்*

# வணிகக்கல்வி II

வெளியீடு 01

திரு. B.S. பசில் (B.B.A.) யாழ்.

## பகுதி I

| வினா இல | விடை இல | வினா இல | விடை இல | வினா இல | விடை இல | வினா இல | விடை இல |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | 2 | 07 | 4 | 13 | 2 | 19 | 4 |
| 02 | 4 | 08 | 3 | 14 | 4 | 20 | 2 |
| 03 | 1 | 09 | 2 | 15 | 5 | | |
| 04 | 5 | 10 | 4 | 16 | 1 | | |
| 05 | 1 | 11 | 2 | 17 | 5 | | |
| 06 | 4 | 12 | 1 | 18 | 3 | | |

21. கடைதல், விலையிடுதல்
22. காரணிப்படுத்தல்
23. வேலைக்குறிப்புரை
24. I.S.O - 9002
25. லங்கா செக்குயர்
26. உரியநேர தந்திரோபாய முறை
27. சுசஹன கடன்திட்டம்
28. 1 - 3
 2 - 4
 3 - 1
 4 - 2
29. மூன்று வாரங்கள்
30. நிதிக் கட்டமைப்பு
31. வேலைச் சிறப்பாக்கல்
32. a – தொடர்ச்சியானது
 b. – குறைவு
 c. – சில உற்பத்திப் பொருள்
 d. - குறைவு
33. இயைபாக்கல் அல்லது தொடர்புபடுத்தல் அல்லது ஒன்றிணைத்தல்
34. HACCP முறை சான்றிதழ் (Hazard Analysis Critical Control Points) அல்லது அவதி கட்டுப்பாட்டு புள்ளி ஆய்வுச் சான்றிதழ்கள்
35. தேவையை / கேள்வியை
36. சந்தை தொடர்பான இயலுமை ஆய்வின் மூலம்
37. நிதிசார் தகவல்கள்
38. மக்கள் தொடர்பு
39. 44000 அலகுகள்
40. அ. பொய்
 ஆ. உண்மை

## பகுதி – II

1.(i) 1. தரமான கீழ்க்கட்டமைப்பு வசதிகளைச் செய்து கொடுத்தல்
 2. உரிய அரச அதிகாரிகள் கடமையுணர்வுடன் செயற்படத் தூண்டுதல்
 3. தொழில் அபிவிருத்திக்கு ஏற்ற கல்வியை வளர்த்தல்
 4. முகாமைத்துவத் திறனை வளர்க்க உதவுதல்
 5. வரி ஊக்குவிப்புகளைச் செய்து கொடுத்தல்
 6. மக்களைச் சோம்பேறிகளாக்கும் அரச கொள்கைகளைத் தவிர்த்தல்
(ii).1. முயற்சியாண்மையின் அபிவிருத்தியால் முதலீடு விரிவடைந்து வணிகவாய்ப்புகள் ஏற்படும்.
 2. இதனால் தேசிய வருமானம், தலா வருமானம் என்பன உயர்வடையும்.
 3. முயற்சியாண்மையின் விருத்தியால் புதிய பொருள்கள், புதிய சேவைகள், புதிய எண்ணங்கள் தோன்றும்.
 4. தொழில்வாய்ப்புகள் உருவாகும்.
 5. உற்பத்தி பெருகி பொருள்கள், சேவைகளின் விலை குறைவடையும்.
(iii). 1. திட்டமிடுதல்
 2. ஒழுங்கமைத்தல்
 3. வழிநடத்தல்
 4. கட்டுப்படுத்தல்
 5. ஊழியரிடல்
 6. பயிற்சியளித்தல்
 7. மதிப்பீடு செய்தல்
 8. தீர்மானம் செய்தல்
 9. நிறுவனத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தல்
(iv)அ. 1. தர உறுதி
 2. தர வட்டம்
 3. தரப் பரிசோதனை
 4. புள்ளி விவரரீதியான தரக்கட்டுப்பாடு
 5. மொத்தத் தரக்கட்டுப்பாடு.
 ஆ. 1. உரிய நியம தரத்தில் பொருள் இருப்பதை வெளிப்படுத்தலாம்.
 2. நன்மதிப்பைப் பேணலாம்.
 3. போட்டியை எதிர்கொள்ளலாம்.
 4. விற்பனையைப் பெருக்கலாம்.
 5. அழிவுகள், சேதங்களைத் தவிர்க்கலாம்.
(v). 1. விலையைக் குறைத்தல்.
 2. நல்ல பொருள்கள், சேவைகளை வழங்குதல்.
 3. கவர்ச்சிகரமாக பொதிசெய்து வழங்குதல்.
 4. விளம்பரம் செய்தல்
 5. திறன்மிக்க ஊழியர்களைப் பயன்படுத்துதல்.
(vi) அ. **வேலை நிறுத்தம்** -
ஊழியர்கள் தமது கோரிக்கைகளை தொழில் வழங்குநர் நிறைவேற்றும் வரை வேலைகளைச் செய்யமாட்டோம் எனக் கூறி அதைக் கடைப்பிடித்தல் வேலை நிறுத்தம் ஆகும்.
 ஆ.. **இலங்கை அபிவிருத்தி முறி**
ஐக்கிய அமெரிக்க டொலரில் இரண்டு வருட காலத்திற்குக் கடன் பெறுவதற்காக வட்டி வீதங்கள் சகிதம் அரசினால் வெளியிடப்படும் பிணைப் பத்திரம் இலங்கை அபிவிருத்தி முறி ஆகும்.
 இ. தொலைநோக்கு – நிறுவனம் அடைந்து கொள்ள எதிர்பார்க்கும் நீண்டகாலக் கனவு தொலை நோக்கு ஆகும்.

(வணிகக்கல்வி II இல் பகுதி II இன் விடைக்குறிப்புகளின் தொடர்ச்சி 17.04.2006ஆம் திகதிய கல்விச்சுடரில் வெளிவரும்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org